
# பொருளியல் நோக்கு

செப்டம்பர்
**1976**



...ண்களும் அபிவிருத்தியும்

மக்கள் வங்கி வெளியீடு



ஆரம்ப அனுராதபுரக் காலம்



பொலனறுவைக் காலம்

# மாற்றமடைந்து வரும் பெண்களின் ஆடை

இலங்கையில். குறிப்பாக குறைந்தது கடந்த 500 ஆண்டுகளாக நிகழ்ந்துவரும் சமூக பொருளாதார மாற்றங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இலங்கைப் பெண்களின் உடை பல யுகங்களாகவே இருந்து வருகிறது. இலங்கைக்கு போர்த்துக்கேயரினதும் ஏனைய குடியாதிக்க நாடுகளினதும் வருகைக்கு முன்னர் பெண்களின் உடைகள் எவ்விதம் இருந்தன என்பது புராதன ஓவியங்களிலும், சிற்பங்களிலும் வடிக்கப்பட்டுள்ளன. இந்த உடை முழு உடலையும் மறைக்கவில்லை. மாறாக வெப்பமான வெதுவெதுப்பான கால நிலைகளுக்குப் பொருந்தக் கூடியதாய் அமைந்திருந்தன. போர்த்துக்கேயரினதும், அவர்களை அடுத்துவந்த குடியாதிக்க நாடுகளினதும் வருகையுடன் உடைகள் ஐரோப்பிய பாணியில் மாற்றமடையத் தொடங்கின. ''பாரம் பரிய இலங்கை உடை'' எனவருணிக்கப்படும் ரவிக்கையும் துணியும் கட்டும் ''லமாசாரிய'' என்னும் உடை கூட போர்த்துக்கேய உடைகளுடன் ஒத்துப்போகும் தன்மைகளையுடையன. 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இலங்கையில் மக்கள் அணிந்த உடைகள் வெப்பமான வெதுவெதுப்பான கால நிலைக்குப் பொருந்தாது கணுக்கால் முதல் கழுத்துவரை முற்றாக மூடி, அணிபவர் அதில் சிக்குண்டு தவிக்கும் தன்மையிலமைந்திருந்தது. இதன் காரணமாகவேதான் உடையணிவதிலான அண்மைக்கால கலாச்சார இறக்குமதியில் மக்கள் கடின ஆடைகள் அணிவதிலிருந்து பாரமற்ற இலகுவான ஆடைகள் அணியும் மாற்றப்போக்கு ஆரம்பித்துள்ளது.

கடந்த 450 வருடகாலமாக வெளி நாட்டுக் கலாச்சார முறைகளை பின்பற்றியொழுகுவதிலும் கூட, உடையணிவதில் எமக்கே உரித்தான சில ஆரம்ப காலப்பண்புகள் கடைப்பிடிக்கப்பட்டே வந்துள்ளன.

(பின்பக்க அட்டையின் உட்பக்கம் பார்க்கவும்)



குமாரிஹாமி (நொக்ஸ் 1681)



போர்த்துக்கேயர் காலம்



20ம் நூற்றாண்டு ஆரம்பகால கண்டிய சீமாட்டி



கண்டிய அரசமன்றின் இராணி ஒருவர் (தேவி 1831)



ஒல்லாந்தர் காலம்



19ம் நூற்றாண்டுக் கண்டியில் ஒரு சிங்களப் பெண்



19ம் நூற்றாண்டுக் கண்டியில் ஒரு பெண் வட்டி வியாபாரி

# பொருளியல் நோக்கு

மலர் 2 இதழ் 6 செப்டம்பர் 1976

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
48, பார்க் வீதி,
கொழும்பு 2. இலங்கை

## பொருளடக்கம்

### சிறப்புக் கட்டுரைகள்

ஆர். டி. வணிகரத்ன 24 விவசாய நடவடிக்கைகளில் குடும்ப ஆதிக்கம்

அமுல்யா கே. என். ரெட்டி 26 திராய் நகர போலிக் குதிரை

பிரான்ஸிஸ் மூவர் லப்பேயும், ஜோஸப் கொல்லின்ஸும் 28 அதிக உணவு அதிக பட்டினியைக் குறிக்கின்றது

ட்ரெவர் ட்ரிபர்க் 31 உலர் பயிர்ச் செய்கைக்கு இந்தியாவின் புதிய உபாயம்

### தலைமைக் கட்டுரை

3 பெண்களும் அபிவிருத்தியும்

சுவர்ண ஜயவீர 06 கல்வியும் வேலைவாய்ப்பும்

மனோரி முத்தட்டுவேகம 08 மாதரும் சட்டமும்

மானல் அபேசேகரா 10 சர்வதேச மரபொழுங்குகள்

பிரியானி ஈ. சொய்ஸா 13 சமூக சுகாதாரமும் அபிவிருத்தியும்

ஜான் வைடெக் 14 பெண்கள்: மறுபடியும் சமையலறை நோக்கி?

குமாரி ஜயவர்தன 16 பெண்களும் தொழில்களும்

ஹேமா குணதிலக 17 சமூக நோக்குகளும், சமூக அரசியல் பங்காற்றலும்

### நிரல்கள்

19 பொருளாதாரம்

21 தொழில் நுட்பவியல்

22 விவசாயம்

**அடுத்த இதழில்:**

- தடுத்தற் சுகாதாரம்: மக்கள் சிறந்ததேகாரோக்கியத்துடன் வாழ்வதைத்தடுக்கும் மானிட, மற்றும் பௌதிகக் காரணிகள். அபிவிருத்தியில் சௌக்கியச் சீர்கேடு ஏற்படுத்தும் தாக்கங்கள்
- வளர்ச்சியும் இனக்கொலைகளும்: நிரபராதிகளின் உயிர்ப்பலியில் அபிவிருத்தி
- கூட்டுறவுமுறை மூலம் சேமிப்பு: சிறிய மனிதனின் சேமிப்பை ஒன்றுதிரட்டல்
- ஐ. நா. அமைப்பு முறையை மாற்றியமைத்தல்

**அட்டைப்படம்:**

அரசாங்க நுண்கலைக் கல்லூரி ஆசிரியரான எஸ். எஸ். வீரசிரியினால் வரையப்பட்டது. அவர் இலங்கைக் கலைச் சங்க கண்காட்சிகளில் பல பரிசில்கள் பெற்றவர். பிரபல ஜவுளி அலங்கார ஓவியரும் கூட.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் உரையாடல்களையும் பலவேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளியல் வளர்ச்சி முறையிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்குமக்கள் வங்கியின் ஒரு சமுதாயப் பணித் திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாகும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களேயாம். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ; விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## (பெண்கள் விடுதலைப் பாதையில் மைல் கற்கள்)

1691 அமெரிக்கா: மஸாசுஸெட் ராஜ்யத்தில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தது. இதனை அவர்கள் பின்னர் 1780 ல் இழந்தனர்.

1792 பிரிட்டன்: ''பெண்களின் உரிமைகளுக்கான நியாய வாதம்'' என்ற புத்தகத்தை முன்னோடிப் பெண் உரிமைப் போராட்டக்காரியான மேரி வொல்ஸ்டோன் கிராப்ட் பிரசுரித்தார்.

1840 அமெரிக்கா: பெண்களுக்கும், கறுப்பர்களுக்கும் சமத்துவ உரிமை கோரி ''சமத்துவ உரிமைகள் சங்கத்தை'' லுக்ரீசியர் மொற் என்பவர் தாபித்தார்.

1857 அமெரிக்கா: நியூ யோர்க்கில் பெண்கள் ஆடை மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள், சம சம்பளமும், வேலை நாளொன்றுக்கு வேலை நேரம் 10 மணித்தியாலமாகக் குறைக்கப்படவும் வேண்டுமெனவும் கோரி வேலை நிறுத்தம் செய்து அணி வகுத்துச் சென்றனர். (மார்ச் 8 ல்)

1859 ரஷ்யா: சென் பீட்டர்ஸ்பர்க்கில் பெண்கள் விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

1862 சுவீடன்: மாநகர சபைத் தேர்தலில் பெண்களுக்கு வாக்குரிமை யளிக்கப்பட்டது.

1868 பிரிட்டன்: தேசிய பெண்கள் வாக்குரிமைச் சங்கம் தாபிக்கப்பட்டது.

1869 அமெரிக்கா: தேசிய பெண்கள் வாக்களிப்புச் சங்கம் தாபிக்கப்பட்டது. அமெரிக்க ராஜ்யத்துடன் இணைவதற்கான தகுதிபெற குறிப்பிட்ட தொகை வாக்காளர் தேவையென்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்வதற்காக வியோமிங் ராஜ்யம் தனது பெண்களுக்கும் வாக்குரிமை யளித்தது.

1870 சுவீடனும்பிரான்ஸும்: வைத்தியப்படிப்பைப் பெண்களுக்கும் அனுமதித்தது.

1878 ரஷ்யா: சென் பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது பெண்கள் பல்கலைக் கழகம் (பெஸ்டுஷேவ் பல்கலைக் கழகம்) திறக்கப்பட்டது.

1882 பிரான்ஸ்: புகழ்பெற்ற எழுத்தாளர் விக்டர் ஹியூகோவின் ஆதரவில் ''பெண்கள் உரிமைக்கான லீக்'' ஆரம்பிக்கப்பட்டது.

1888 ஐரோப்பாவினதும், வட அமெரிக்காவினதும் பெண்கள் சங்கங்கள் வாஷிங்டனில் ஒன்றுகூடி சர்வதேச பெண்கள் சபையை தாபித்தது.

1880 ரஷ்யா: புகழ்பெற்ற பெண் கணித மேதையான சோபியா கொவேலெவ்ஸ்காயா ரஷ்ய விஞ்ஞானக் கழகத்தின் தொடர்புகொள் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1893 நியூஸிலந்து: பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.

1909 பிரான்ஸ்: சோஷலிஸப் பிரதிநிதி ரெனே விவியானி கொண்டுவந்த ஒரு பிரேரணை மூலம் பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமைபற்றி பிரெஞ்சுப் பாராளுமன்றம் முதன் முதலாக விவாதித்தது.
நோர்வே: மாநகர சபைத் தேர்தல்களில் பெண்கள் வாக்களிக்க ஆரம்பித்தனர்.

1905 பிரிட்டன்: பெண்கள் விடுதலை இயக்கத்தினர் மன்செஸ்டரில் கூடி கூட்டம் நடத்தினர். அன்னீ கென்னியும் கிரிஸ்தபல் பன்கர்ஸ்டும் கைதாயினர்.

1906 பின்லாந்து: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1908 பிரிட்டன்: பெண்கள் சுதந்திர லீக் தாபிக்கப்பட்டது. அல்பர்ட் மண்டபத்திலும் ஹைட் பார்க்கிலும் பெண்கள் விடுதலை இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். எமலின், கிறிஸ்தபல் பன்கர்ஸ்ட், புளோரா டி ரம்மன் ஆகியோர் றபல்கார் சதுக்கக் கூட்டத்தின் பின் சிறை பிடிக்கப்பட்டனர்.

1910 டென்மார்க்: 1887 மார்ச் 8 ம் திகதி நியு யோர்க்கில் பெண்கள் ஆடை மற்றும் ஜவுளித் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தை நினைவுகூருமுகமாக மார்ச் 8 ம் திகதி சர்வதேச மாதர் தினமாகக் கொண்டாடப்பட வேண்டுமென கோபென்ஹேகனில் கூடிய சோஷலிஸப் பெண்களின் இரண்டாவது உலகப் பேரவைக் கூட்டத்தில் கிளாடா ஸெட்சின் யோசனை கூறினார்.

1913 நோர்வே: பெண்களுக்கு சம வாக்குரிமை வென்றெடுக்கப்பட்டது.
ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, டென்மார்க்: வாக்களிப்பதற்கும் தெரிவு செய்யப்படுவதற்குமான உரிமை கோரி மார்ச் 8 ம் திகதி சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டது.

1917 நெதர்லாந்தும் ரஷ்யாவும்: பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.

1918 பிரிட்டன்: 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வாக்களிக்கவும் பாராளுமன்றத்தில் அமரவும் உரிமை பெற்றனர்.

1919 ஜெர்மனியும் செக்கொஸ்லாவாக்கியாவும்: பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

1920 அமெரிக்கா: பெண்கள் வாக்களிப்பதற்கு சகல ராஜ்யங்களிலும் உரிமை வழங்கப்பட்டது.

1925 ஜப்பான்: ஜப்பானிய பாராளுமன்றம் மார்ச் 30 ம் திகதி நிறைவேற்றிய ''சர்வசன'' வாக்குரிமைச் சட்டத்தில் பெண்கள் நீக்கப்பட்டுள்ளனர். இது ஜப்பானிய பெண்கள் விடுதலை இயக்கத்தை வீறுகொண்டெழச் செய்தது.
இந்தியா: இந்திய பெண்கள் விடுதலை இயக்கத்தின் பலம் வாய்ந்த பாதுகாவலர்களில் ஒருவரான கவி சரோஜினி நாயுடு அம்மையார் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1928 லத்தீன் அமெரிக்கா: ஹவானாவில் நடைபெற்ற அமெரிக்க ராஜ்யங்களின் 6 வது சர்வதேச மகாநாட்டின்போது அமெரிக்க மாதர் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது.
ஈகுவேடர்: பெண்கள் வாக்குரிமை பெற்றனர்.

1929 இலங்கை: சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டபோது பெண்களும் இலங்கையில் வாக்குரிமை பெற்றனர்.

1932 ஸ்பெய்ன்: குடியரசு அரசமைப்புச் சட்டம் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது.

1934 பிரான்ஸ்: பாசிசத்துக்கும் யுத்தத்துக்கு மெதிரான போராட்டத்திற்கான சர்வதேச மாதர் பேரவை தனது கூட்டத்தைப் பாரிஸில் நடத்தியது.

1936 பிரான்ஸ்: பெண்களுக்கு வாக்குரிமை இல்லாதபோதிலும் நோபல் பரிசு பெற்ற பௌதிகவியல் அறிஞர் ஐரீன் ஜூலியட் மேரி அம்மையார் உட்பட மூன்று பெண்கள், லியோன் புளுமின் மக்கள் முன்னணி அரசில் நுழைந்து கொண்டனர்.

1945 பிரான்ஸும் இத்தாலியும்: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1946 ஜப்பான்: ஆறு பெண்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

1951 சர்வதேச தொழில் தாபனம்: சம பெறுமதியுடைய வேலைக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் சம வேதனம் வழங்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை ஜூன் 17 ம் திகதி மேற்படி தாபனம் நிறைவேற்றியது.

1957 தூனீசியா: ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிவில் உரிமைகளில் சமத்துவத்தை ஒரு புதிய சட்டம் உறுதிப்படுத்தியது.

1959 திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா உலகின் முதலாவது பெண் பிரதமரானார்.

1961 பராகுவே: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. லத்தீன் அமெரிக்கா எங்கும் பெண்கள் தற்போது வாக்களிக்க முடியும்.

1962 அல்ஜீரியா: பதின்மூன்று பெண் பிரதிநிதிகள், தேசிய பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

1964 பாகிஸ்தான்: முதன் முறையாக ஒரு பெண் (செல்வி பாத்திமா ஜின்னா) பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் ஒரு அபேட்சகராகப் போட்டியிட்டார்.

1967 ஈரான்: கணவனின் அங்கீகாரமின்றி மனைவி தொழில் புரிவதற்கு ''குடும்ப பாதுகாவல் சட்டம்'' வழிகோலியது. 1963 ம் ஆண்டு முதல் ஈராணியப் பெண்கள் 'பர்தா' முகத்திரை அணிவது தடை செய்யப்பட்டது.

1971 சுவிற்சர்லாந்து: பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

1975 ஐ. நாடுகள்: சர்வதேச மாதராண்டு.
கியூபா: கியூபா ஆண்கள் தமது மனைவியருக்கு வீட்டுப் பணிகளில் உதவிபுரிய வேண்டுமெனக் கோரும் ''குடும்ப ஒழுங்குக் கோவை'' யொன்று மார்ச் 8 ம் திகதி அமுலுக்கு வந்தது.

1976 இலங்கை: 86 நாடுகளைக் கொண்ட கூட்டுச் சேரா நாடுகளின் மகாநாட்டுக்கு இலங்கைப் பிரதமர் அடுத்த மூன்றாண்டுகளுக்கான தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டார்.



## கணவன் ஒரு சுமையல்ல

இங்கு காணப்படுவது போன்ற பெரும்பாலான இந்தியப் பெண்களும் அவளது கிழக்குலகச் சகோதரிகளும் கணவர்மாருக்கு தாங்கள் தாழ்வுற்ற நிலையில் இருப்பதையிட்டு சிந்திப்பதேயில்லை. அந்நிலை மாறுபடுவதையும் அவர்கள் விரும்புவதில்லை. தத்துவரீதியாக அரசியல், சட்ட சமத்துவம் நிலவுவதாகக் கருதப்படுகின்ற போதிலும் பெண்களுக்கான உண்மையான சமத்துவம் இன்னும் கற்பனையாகவே உள்ளது இலங்கையுட்பட பல ஆசிய நாடுகளில் இந்நிலைமை, ஒரு சில வேறுபாடுகளைத் தவிர, ஒன்றாகவே உள்ளது. சம்பிரதாயங்கள், சடங்குகள் நம்பிக்கைகள் அனைத்துமே இந்நாடுகளில் தொடர்ந்தும் ஆண் ஆளுமையை நிலை நிறுத்திக் கொண்டேயிருக்கின்றன.

# பெண்களும் அபிவிருத்தியும்

பெண்களுக்கெதிரான பாகுபாட்டினை நீக்கக் கோரி 1967 நவம்பர் 7 ம் திகதி ஐ. நா. பொதுச்சபை பிரகடனமொன்றை நிறைவேற்றி, ஆண்களோடு சமமாகப் பெண்கள் கருதப்படுவதற்கான அடிப்படைகளை அதில் கூறி அவற்றின் அமுலாக்கத்திற்காகக் கோரிக்கை விடுத்தது.

பெண்களுக் கெதிராக இன்னுமே பாகுபாடு நிலவுகின்றதென தீர்மானமொன்றின் மூலம் ஐ. நா. பொதுச் சபை கவனத்திற்கெடுத்து அதனை நீக்குவதற்கான பிரகடனமொன்றைத் தயாரிப்பதற்காக ஆணைக் குழுவொன்றையும் அமைத்ததன் மூலம் 1963 லேயே இத்துறையில் நடவடிக்கைகள் ஆரம்பித்தன. 1967 ம் வருட பிரகடனத்தைத் தயாரித்த இந்த ஆணைக் குழு அதனை உலகம் முழுவதிலும் உள்ள ஆண்களும் பெண்களும் நன்கு புரிந்து கொள்ளச் செய்வதே முதலில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை எனவும் கூறியது. (இப் பிரகடனம் 4 ம் 5 ம் பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது) ஆயினும் சுமார் பத்து வருடங்கள் கழிந்த பின்பே 1975 ல் சர்வதேச மாதராண்டு பிரகடனப்படுத்தப்பட்டு பெண்களுக் கெதிரான பாகுபாடு நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மீது கவனம் குயியச் செய்யப்பட்டது. இம் மாதராண்டினைப் பிரகடனப்படுத்தியதன் அடிப்படை நோக்கம் இக் கிரகத்திலுள்ள மக்களின் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்வுக்கு பெண்கள் மேலும் முழுமையான பங்களிப்புச் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தலாகும்.

பெண்கள் இயக்கத்தில் இது பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தியது. ஒவ்வொரு நாட்டிலும் அரசுப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி தேசிய கமிட்டிகள் நிறுவப்பட்டன. தத்தம் நாடுகளில் பெண்களின் நிலைமையையும் பங்களிப்புகளையும் ஆராய்தலும் தடைகளை இனம் கண்டு, அபிவிருத்திக்கான நிச்சயமான திட்டங்களை வகுத்தலுமே அவற்றின் நோக்கங்கலாம்.

சர்வதேச மாதராண்டின் முக்கிய நிகழ்ச்சி 1975 ல் மெக்ஸிகோவில் நடந்த சர்வதேச மாதர் மகாநாடாகும். மெக்ஸிகோ பிரகடனம் அதன் முக்கிய சாதனையாகும். (இப் பிரகடனம் 5 ம் பக்கத்தில் காணப்படுகின்றது) உலக அமுலாக்கல் திட்டமொன்றும் 34 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. பெண்களின் பங்களிப்பினை ஏற்றுக் கொள்ளல், அபிவிருத்தி நடைமுறையின் அடிப்படையாகும் என்பதனை இம் மகாநாடு தெளிவு படுத்தியது.

பெண்களின் நிலைமையை மாற்றும் அதே நோக்குடன் 1976/85 க்கு இடைப்பட்ட தசாப்தத்தை பெண்கள் தசாப்தமாக ஐ. நா. பொதுச் சபை பிரகடனப்படுத்தியது.

“தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கூட்டங்கள் கூடப்பட்டுள்ளன. ஆனால் நிலைமை இன்னும் மாறவில்லை.” என்ற பல்லவியை நாம் செவிமடுத்துள்ளோம். ஆயினும் அதனையே நாம் இங்கு மீண்டும் கூறுகின்றோம்.

சர்வதேச மாதராண்டு நிலைமையை மாற்றியதா? இதே நிலைமை தொடர்ந்து இருக்க முடியாது என்பதையாயினும் அது தெளிவுபடுத்தி விட்டது.

உலகெங்குமுள்ள பெண்களினால் மேற்கொள்ளப்படும் தீவிர அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக பெண்களுக்குப் பாதகமாயமைந்துள்ள சட்டங்கள், வழக்கங்கள் என்பன பெண்களுக்கு நியாயம் வழங்கும் விதத்தில் திருத்தியமைக்கப்படுகின்றன. பெண்களுக் கெதிரான பாகுபாட்டினை முடிந்துபோன காலத்தைச் சேர்ந்ததாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் பெண்களுக் கெதிரான பாகுபாடு சமுதாயத்தில் பல மட்டங்களிலும் இன்னுமே நிலவுகின்றது.

## பெண்களுக் கெதிரான பாகுபாட்டை நீக்குவது குறித்து வெளியிடப்பட்ட ஐ. நா. பிரகடனம்

பகுதி 1

ஆண்களோடு பெண்கள் சம உரிமைகளை அனுபவிப்பதை மறுக்கும் அல்லது மட்டுப்படுத்தும் வகையிலான பெண்களுக் கெதிரான பாகுபாடு, அடிப்படையில் அநீதியானதும் மானிட அந்தஸ்துக் கெதிரான குற்றமுமாகும்.

பகுதி 2

பெண்களுக் கெதிரான பாகுபாடுடைய தற்போது நிலவும் சட்டங்கள், வழக்கங்கள், ஒழுங்கு விதிகள், செயற்பாட்டு வழமைகள் என்பவற்றை இல்லாதொழிக்கவும், பெண்களுக்கும் ஆண்களுக்குமான சமத்துவ உரிமைகளுக்கு சட்டரீதியாக போதிய பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யவும் பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்; குறிப்பாக!

(அ) சமத்துவ உரிமைகளின் அடிப்படை, அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற வேண்டும். அல்லது வேறு விதமாக சட்டத்தினுல் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) பெண்களுக் கெதிரான பாகுபாடுகளை நீக்குவது தொடர்பாக ஐ. நா. சபையினதும் அதனது முகவராண்மைகளினதும் சர்வதேசத் தீர்மானங்கள் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு இயலுமான வரை துரிதமாக பூரண அமுல் செய்யப்படல் வேண்டும்.

பகுதி 3

பெண்களைத் தாழ்வாகக் கருதும் சிந்தனைகளின் அடிப்படையிலான குரோதங்கள். வழக்கங்கள், மற்றும் ஏனைய செயற்பாட்டு வழமைகளை இல்லாதொழிப்பதற்காக பொதுசன அபிப்பிராயத்தைப் பயன்படுத்தவும் தேசிய அபிலாசைகளை திசை காட்டவும் பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பகுதி 4

எவ்வித பாகுபாடுகளுமின்றி ஆண்களுக்கான அதே நிபந்தனைகளைப் பெண்களுக்கும் உறுதிப்படுத்த பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) சகல தேர்தல்களிலும் வாக்களிக்கவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சகல அமைப்புக்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட தகைமை பெறவுமாள உரிமையும்.

(ஆ) சகல பொதுசன வாக்கெடுப்புக்களிலும் வாக்களிப்பதற்கான உரிமை.

### சர்வதேச மாதராண்டு 1975

1. ஐ. நா. பொதுச் சபையின் 27 வது மகாநாடு பிரகடனப்படுத்தியது போன்று சர்வதேச மகளிர் ஆண்டின் நோக்கங்கள் வருமாறு:

(அ) ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் சமத்துவத்தை மேம்படுத்தல்.

(ஆ) விசேடமாக இரண்டாவது ஐ. நா. அபிவிருத்தித் தசாப்தத்தில் தேசிய, பிராந்திய, சர்வதேச மட்டங்களிலான சமூக, பொருளாதார, கலாச்சார அபிவிருத்திகளில் பெண்களின் பொறுப்பினையும் முக்கிய பங்கினையும் வலியுறுத்துவதன் மூலம் மொத்த அபிவிருத்தி முயற்சிகளில் பெண்களின் பூரண ஒருமைப்பாட்டினை உறுதி செய்தல்.

(இ) அரசுகளிடையே ஒத்துழைப்பையும் நேச உறவுகளையும் விருத்தி செய்வதற்கும் உலக சமாதானத்தைப் பலப்படுத்துவதற்கும் பெண்களின் அதிகரித்து வரும்பங்களிப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்.

(இ) அரசாங்க பதவிகளை வகிப்பதற்கும் சகல அரசாங்க தொழிற்பாடுகளையும் பிரயோகிப்பதற்கான உரிமையும். இவைகள் சட்டத்தின் மூலம் உத்தரவாதமளிக்கப்படல் வேண்டும்.

பகுதி 5

ஆண்களைப் போன்று பெண்களும் தங்களின் தேசியத்தை மாற்ற; நிலையாகப் பேண, அல்லது ஈட்டிக்கொள்ள பெண்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும். வெளிநாட்டவர் ஒருவருடனை திருமணம்; அப்பெண்ணை நாடற்றவளாக்குவதன் மூலமோ அல்லது கணவனின் தேசியத்தை அவள் மீது சுமத்துவதன் மூலமோ; அவளது தேசியத்தைப் பாதித்தலாகாது.

பகுதி 6

1. எந்த ஒரு சமுதாயத்தினதும் அடிப்படைக் கூறுக நிலவும் குடும்ப ஒற்றுமையையும் ஒன்றியைபினையும் பாதுகாத்தலுக்கு குந்தக மில்லாதவாறு பெண்களுக்கு, மணம் முடித்தவர்களாயினும் முடிக்காதவர்களாயினும், சிவில் சட்டத் துறையில் ஆண்களோடு சம உரிமைக்கு உத்தரவாதமளிப்பதற்காக சகல பொருத்தமான நடவடிக்கைகளும், குறிப்பாக சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் குறிப்பாக:—

(அ) திருமணம் முடித்த காலப் பிரிவினுள் ஈட்டிக் கொண்ட சொத்துக்கள் உட்பட, சொத்துக்களை ஈட்டும், நிருவகிக்கும், அனுபவிக்கும், கைதுறக்கும், மற்றும் வாருசிக்கும் உரிமை.

(ஆ) சட்டத்தரத்தில் சமத்துவ உரிமையையும் அவற்றின் பிரயோகங்களுக்கான உரிமையும்.

(இ) ஆட்கள் இடம் பெயத்தல் குறித்துள்ள சட்டம் தொடர்பாக ஆண்களுக்குள்ள அதே உரிமை.

2. கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான சமத்துவ அந்தஸ்துக் கோட்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் குறிப்பாக:—

(அ) ஆண்களைப் போன்றே தம் வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் விருப்புச் சுதந்திர உரிமையும், தமது சுயேச்சையான பூரண இணக்கத்துடனேயே திருமணத்தில் நுழைவதற்குமான உரிமை.

(ஆ) திருமணக் காலத்திலும், அது நீக்கப்படும் போதும் ஆண்களுக்குப் போன்றே பெண்களுக்கு சம உரிமை இருத்தல் வேண்டும். எல்

லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலன்களே முதன்மையானவை.

(இ) பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பெற்றோருக்கு சம உரிமைகளும் சம கடமைகளும் இருத்தல் வேண்டும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளைகளின் நலன்களே முதன்மையானவை.

3. பால்ய விவாகங்களும், சிறுமிகள் பூப்படைவதற்கு முன்னமேயே விவாக நிச்சயார்த்தம் செய்யப்படுவதும் தடை செய்யப்படல் வேண்டும். சட்ட வாக்கம் உட்பட பயன்தரும் நடவடிக்கைகளின் மூலம் திருமணத்திற்கான ஆகக் குறைந்த மட்ட வயது குறிப்பிடப்படுதலோடு உத்தியோக பதிவேடொன்றில் விவாகம் பதிவு செய்யப்படுதல் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

பகுதி 7

பெண்களுக் கெதிரான பாகுபாடு காட்டும் விதத்தில் தண்டனைக் குற்றக் கோவையில் அமைந்துள்ள சகல விதிகளும் இரத்து செய்யப்படல் வேண்டும்.

பகுதி 8

பெண்களை விபசாரம் மூலம் சுரண்டுதலையும் பெண்களை இதற்காக இடங்களுக்கிடம் கொண்டு செல்லுதலையும் எதிர்த்துப் போராடுவதற்காக சட்ட வாக்கம் உட்பட பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பகுதி 9

பெண்பிள்ளைகள், திருமணமானவர்களாயினும் மணமாகாதவர்களாயினும் ஆண்பிள்ளைகளைப் போன்றே சகல தரங்களிலும் கல்வி பெறுவதற்கான சம உரிமையை உறுதிப்படுத்த, சட்ட வாக்கம் உட்பட, பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பகுதி 10

பெண்கள் திருமணமானவர்களாயினும் இல்லாவிடினும் அவர்களுக்கு பொருளாதார சமூக வாழ்க்கைத் துறைகளில் சம உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் குறிப்பாக:—

(அ) திருமணமாகி விட்டனர் என்ற காரணத்திற்காக பாகுபாடு காட்டப்படாது தொழில் முறைப் பயிற்சிகள் பெறுதல், தொழில் புரிதல், உத்தியோகம் அல்லது தொழில் வசதிகளை விருப்புச் சுதந்திரத்துடன் தேர்ந்தெடுத்தல், உத்தியோக மற்றும் தொழிற்துறை முன்னேற்றங்கள் என்பவற்றுக்கான உரிமை.

(ஆ) சம பெறுமதியுடைய வேலை தொடர்பாக ஆண்களைப் போன்று சம வேதனம் பெறவும், ஆண்களைப் போன்று நடத்தப் படுவதற்குமான உரிமை.

(இ) சம்பளத்துடன் விடுமுறை, ஓய்வுக்கால சிறப்புரிமைகள், தொழிலாமை, நோய், வயோதிபம், மற்றும் வேலை செய்ய இயலாமை என்பன தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றுக்கான உரிமை;

(ஈ) ஆண்களைப் போன்றே சம அளவில் குடும்ப சகாயப்படி பெறுவதற்கான உரிமை.

2. திருமணம், தாய்மையடைதல் என்பவற்றைக் காரணமாக வைத்து பெண்களுக் கெதிராகப் பாகுபாடு காட்டப்படுவதைத் தவிர்க்கவும், தொழில் செய்வதற்கான அவர்களது உரிமையை பயன்தரு விதத்தில் உறுதி செய்யவும் வழிகோலுமுகமாக ஒரு பெண் திருமணம் செய்தால் அல்லது தாய்மை யடைந்தால் வேலை நீக்கப்படுவதைத் தவிர்க்கவும் தனது முன்னைய தொழிலுக்கு மீளக் கூடிய உத்தரவாதத்துடன் பேற்றுக்கால விடுமுறை பெறவும், குழந்தை பேணல் வசதிகளுட்பட அவசியமான சமூக

(21ம் பக்கம் பார்க்க)

* * * * * * * * * *

## பெண்களின் சமத்துவம் பற்றியும் அவிபிருத்திக்கும் சமாதானத்துக்குமான அவர்களின் பங்களிப்புப் பற்றியும் வெளியிடப்பட்ட மெக்ஸிகோ பிரகடனம் — 1976

ஏனையோர் மத்தியில் பின்வரும் கோட்பாடுகளை பிரகடனப்படுத்துவதற்கு சருவதேச மாதராண்டின் உலக மகாநாடு தீர்மானித்தது.

1. ஆண்களுக்கும் பெண்களுக்கு மிடையிலான சமத்துவம் என்பதன் அர்த்தம் அவர்களது அந்தஸ்தில், மனிதப் பிறவிகள் என்ற அவர்களது பெறுமதியில், அவர்களது உரிமைகளில், வாய்ப்புக்களில், பொறுப்புக்களில் சமத்துவம் என்பதாகும்.

2. தேசிய அபிவிருத்தியில் பெண்களது பூரண ஒருமைப்பாட்டினையும், சர்வதேச சமாதானத்தைப் பேணுவதிலும் பாதுகாப்பதிலும் அவர்களது பங்களிப்பினையும் உறுதி செய்வதற்காக, ஆண்களோடு பெண்கள் சம அந்தஸ்த்து அனுபவிப்பதைத் தடை செய்யும் சகல தடைகளும் அகற்றப்படல் வேண்டும்.

3. சமுநாயத்தின் குடும்பத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகளும் சம பொறுப்புக்களும் உள்ளன. மானிட உறவுகள் போசிக்கப்படும் அடிப்படைச் சமுதாயக் கூறுன குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையிலான சமத்துவத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும்.

4. ஆண்களைப் போல பெண்களுக்கும் தமது அறிவுத்துறை அற்றல்களை அதன் உச்ச தரத்திற்கு விருத்தி செய்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் அவசியம். எனவே தேசிய கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் அவர்களுக்கு சகல மட்டங்களிலுமான கல்விக்கும் பயிற்சிக்கும் பூரண, மற்றும் சம வாய்ப்புக்களை அளித்தல் வேண்டும்.

5. தொழில் செய்வதற்கான பெண்களின் உரிமை, சம பெறுமதியுடைய வேலைக்கு சம சம்பளம் பெறும் உரிமை, தொழில் துறையில் முன்னேறுவதற்காக சம நிபந்தனைகளும் சம வாய்ப்புக்களும் அளிக்கப்படுவதற்கான உரிமை, மற்றும் திருப்தியளிக்கக் கூடியதான பூரண பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பெண்களின் ஏனைய அனைத்து உரிமைகளும் மீளவும் உறுதி செய்யப்பட்டுள்ளன. உலக பொருளாதார உறவுகள் மறுசீரமைக்கப்படுவதற்கான அவசியத்தைக் கருத்தில் கொள்ளும் போது மேற்படி கோட்பாடுகள் பயன்தரும் விதத்தில் அமுல் நடத்தப் படுவதற்காக மறு பரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசரத் தேவையாகும்.

# கல்வியும் வேலைவாய்ப்பும்

— டாக்டர் சுவர்ணா ஜயவீர

(கல்வி போதனா பீடம்-இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு வளாகம்)

குடியேற்ற ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னர் இலங்கையின் கல்விக் கொள்கைகள், கற்றோர் வர்க்கத்தை உருவாக்குவதாயும் எழுத்தறிவை வழங்குவதாயும் அமைந்த கல்விமுறையை சனநாயகமயமாக்கி சமூக அமைப்புக்குப் பொருத்தமாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டதாய் அமைந்தன. கல்வியை பரவலாக்கி சனநாயகமயமாக்கும் முயற்சிகள் வெற்றி கண்ட போதிலும், கல்வி முறையைச் சீர்திருத்தி அமைக்கும் பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியில் எழுத்தறிவை வழங்கும் நோக்கு அண்மைக் காலம் வரை தொடர்ந்து நீடித்து நிலவியது.

1931 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட சர்வசன வாக்குரிமை, ஆட்சியாளர்களை சமூக தேவைகளைக் கருத்திற்கொண்டு செயலாற்றச் செய்து கல்வி விரிவடைய வழிவகுத்தது. 1940 - 50 வரையுள்ள காலப்பகுதி கல்வி அபிவிருத்திக்குரியதொன்றாகும். ஆரம்பக்கல்வி தொடக்கம் மூன்றாம் நிலைக் கல்வி வரை இலவசக் கல்வி வழங்கும் கொள்கை நடைமுறை படுத்தப்பட்டமையாலும் தாய்மொழி போதனா மொழியாக ஆக்கப்பட்டமையாலும் உருவாக்கப்பட்ட வாய்ப்பான சூழ்நிலை 1940 ஆம் ஆண்டுகளில் ஆரம்பக்கல்வி வாய்ப்புகளையும் 1950 களில் இடைநிலைக் கல்வி வாய்ப்புகளையும் விரிவடையச் செய்து 1960 களில் உயர்கல்வி நிலையில் மாணவர் தொகையில் பெரிய அதிகரிப்பை ஏற்படச் செய்தன. இதனால் ஆண், பெண் இருபாலாரும் சமமாக நன்மை பெற்றனர். மேலும், பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் அல்லது மூன்றாவது உலக நாடுகள் போலல்லாது எமது நாட்டில் பாடசாலை மாணவர் சேர்வில் பால்வேறுபாடுகளை அதிகம் காண முடியாது. இந்நாடுகளில் பின்தங்கிய பகுதி எனக் கருதப்படும் கிராமப்புறங்களிலும் இவ் வேறுபாட்டைக் காண முடியாதுள்ளது.

அட்டவணை 1

மக்களின் கல்வி நிலை (1970)

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| பாடசாலை செல்லாதோர் .. | 11.6 | 23.4 | 17.5 |
| ஆரம்பக்கல்வி .. | 47.9 | 41.3 | 44.6 |
| நடுநிலை .. | 32.4 | 28 4 | 30.6 |
| க.பொ,த (சா. நி) | 7.1 | 6.1 | 6.6 |
| க.பொ.த (உ. நி) | 1.0 | 0.8 | 0.9 |

பாடசாலையில் பயிலுவோர் பற்றிய புள்ளிவிபரம், பொதுக்கல்வி முறையில் பெண்கள் சமமாக பங்கு கொள்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. 1970 ஆம்ஆண்டில் 5 - 14 வயதெல்லையில் உள்ள பிள்ளைகளில் 72.7 வீதமானவர்கள் ஆரம்பக் கல்வி பயின்றனர். ஆண், பெண்களின் வீதாசாரம் முறையே 74.6%, 70.8% ஆகும். பெண்களில் சிறிதளவு அதிகமான இடைநிறுத்தம் ஏற்படக் காரணம் வசதி குறைந்த பகுதிகளில் காணப்பட்ட சமூக பொருளாதார பிரச்னைகளாகும்.

அட்டவணை 2

வகுப்பு தரங்கள், பாடப் பிரிவுகளின் படியான மாணவர் சேர்வு 1975

| வகுப்பு தரங்கள் | பெண்கள் |
|---|---|
| 1 — 9 .. .. .. | 48.5 |
| 10 — 12 .. .. .. | 52.1 |
| 1 — 12 .. .. .. | 48.6 |
| 10 — 12 (கலை) .. .. | 57.1 |
| 10 — 12 (விஞ்ஞானம்) .. | 44.7 |
| 10 — 12 (வர்த்தகம்) .. | 49.7 |

மூலாதாரம்:—பாடசாலை தொகை மதிப்பு, மார்ச் 1975.

அட்டவணை 2 1975 ஆம் ஆண்டில் வகுப்புகளின்படியும் பாடப் பிரிவுகளின் படியும் இடைநிலைப் பாடசாலையின் விஞ்ஞானப் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் பெண்கள் போதிய அளவு சேர்ந்து கல்வி பயின்றுள்ளனர் என்பதைக் காட்டும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் கனிட்ட இடைநிலைப் பாடசாலையில் பிள்ளைகளை இவ்வாறு பாகுபடுத்தும் முறையை இன்று அகற்றியுள்ளது. இன்று 1 - 9 வரையுள்ள வகுப்புகளுக்கான பொதுப்பாட ஏற்பாட்டின்படி விஞ்ஞானம், கணிதம், தொழில்முன்னிலைப் பாடம் ஆதியன சகலருக்கும் உரியனவாகும்.

இலங்கையின் கல்வி முறையில் பரீட்சைகள் முக்கிய பங்கு கொள்கின்றன. அட்டவணை 3 இன்படி க.பொ.த. (சா. நி) நிலையிலும் தே.பொ.க.சா. நிலையிலும் பரீட்சை தேர்வுநாடிகள் என்ற முறையில் பெண்கள் சம இடம் பெறுகின்றனர் அல்லது ஆண்களை விட தொகையில் அதிகமாக உள்ளனர்.

அட்டவணை 3

இடைநிலைப் பாடசாலை பரீட்சைகள்—பால்வகுப்பின்படி தேர்வு நாடிகள்

| பரீட்சை | மொத்த தேர்வு நாடிகளில் பெண்களின் விதம் |
|---|---|
| தே.பொ.க.சா. (1975) . | 51.2 |
| க.பொ.த. (சா. நி) (1973) | 49.8 |
| க.பொ.த. (உ. நி) (1973) .. | 45.9 |

மூலாதாரம் — பரீட்சைகள் திணைக்களம், கல்வி அமைச்சு.

அண்மைக் காலங்களில் இடம் பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்தி, பல்கலைக் கழகத்தில் பெண்களின் தொகை அதிகரித்துள்ளமையாகும். 1942 ஆம் ஆண்டில் 10.1%மாக இருந்த பெண்களின் விகிதம் 1972 ஆம் ஆண்டில் 42.3%மாக (அட்டவணை 4) அதிகரித்தது. அதே வேளையில், கடந்த ஒன்பது ஆண்டுகளாக பல்கலைக் கழக மாணவரின் மொத்த தொகை வீழ்ச்சியடைந்த விடத்து 1975 வரை பெண்களின் தொகை தொடர்ந்து அதிகரித்தது. பல்கலைக் கழகத்தில் அனுமதி பெற்ற பெண்களின் விகிதம் 1975 இல் 39.8%மாகவும் 1976 இல் 38.%மாகவும் அமைந்தது. அதே வேளையில் 1976 இல் மொத்த மாணவர் தொகையில் பெண்களின் விகிதம் 38.9%மாகக் குறைந்தது. இதன் காரணமாக 1975 இன் பின் தொகையில் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது. இது ஒரு தற்காலிகமான அம்சமாக இருக்கக்கூடும் அல்லது பல்கலைக் கழக மாணவர் சேர்வு தொகையில் உச்சக் கட்டம் இடம் பெற்றுவிட்டதை இது எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

6 ஆம் அட்டவணை போதனாபீட வகைப்படியான மாணவர் பரம்பலை எடுத்துக் காட்டும். அதன்படி, விஞ்ஞான பயிற்சி நெறிகளில் பெண்களின் தொகை மிகுதியாக அதிகரித்து வந்துள்ளமை தெரிகின்றது. குறிப்பாக, மருத்துவத்துறையில் பெண்கள் சேர்வு விகிதம் சில செல்வந்த நாடுகளின் விகிதத்தைவிட அதிகமாக உள்ளது. மேலும், ஆண்களே மிகுதியாகப் பயிலும் தொழினுட்பத்துறையில் கூட 1966 ஆம் ஆண்டில் 1.9% மாக இருந்த பெண்களின் விகிதம் 1976 ஆம் ஆண்டில் 10.3% மாக அதிசரித்துள்ளது.

அட்டவணை 4

பல்கலைக் கழக மாணவர் தொகை

| ஆண்டு | மொத்தம் | பெண்கள் | பெண்களின் % |
|---|---|---|---|
| 1961 .. | 6,279 | 1,547 | 24.6 |
| 1966 .. | 14,171 | 5,286 | 37.3 |
| 1972 .. | 12,835 | 5,428 | 42.2 |
| 1976 .. | 13,153 | 5,113 | 33.9 |

இலங்கையின் கல்விமுறையின் வலி குறைந்த பிரிவு தொழில், தொழினுட்ப துறையாகும். இத்துறையில் பெண்களின் பங்கு பொதுக் கல்வித்துறையில் அவர்கள் கொள்ளும் பங்குக்கு ஒப்பானதாக இல்லை. தொழினுட்ப கல்வித் துறைகளில் ஆண்களே மிகுதியாகப் பங்குகொள்ளுகின்றனர் என்பதை இரண்டாம், மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களின் மாணவர் பற்றிய விபரங்கள் மேலும் தெளிவுபடுத்துகின்றன. அத்தகைய பதினைந்து தொழினுட்ப கல்வி நிலையங்களில் பெண்களின் விகிதம் 25 க்குக் குறைவாகவே உள்ளது — (1973 இல் 16%, 1976 இல் 23.7%) இவர்களில் 90% அதிகமானவர்கள் வர்த்தக பாடநெறிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். 1973 ஆம் ஆண்டில் ஆண் விண்ணப்பதாரிகள் வர்த்தகம் (27%), தொழினுட்பம் (35.7%), கைப்பணி (36.9%) ஆகிய பாட நெறிகளுக்குப் பரவலாக விண்ணப்பித்தபோது பெண்களில் 84% அதிகமானோர் வர்த்தக பாடநெறிகளுக்கும் 1%குறைவானோர் கைப்பணிப் பயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பித்தனர்.

பெண்கள் விவசாயத்திலும் கூடிய அக்கறை காட்டியுள்ளனர். 1973 ஆம் ஆண்டில் குண்டசாலை விவசாயப் பாடசாலைக்கு விண்ணப்பம் அனுப்பியவர்களில் அரைப் பங்கினர் பெண்களாவர். எனினும் இடவசதிகளை அடிப்படையாகக் கொண்ட அனுமதி பற்றிய கொள்கைகள் 20%இடங்களையே பெண்களுக்கு ஒதுக்கக் காரணமாயின. 1973 ஆம் ஆண்டில் செய்முறை பண்ணைப் பாடசாலைகளின் மாணவர் தொகையில் பெண்களின் விகிதம் 30.9% ஆக அமைந்தது.

பொது, விசேட ஆசிரியர் கல்வித்துறையில் பெண்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளனர். 1973 ஆம் ஆண்டில் தராதர

அட்டவணை 5

**பல்கலைக் கழகச்களில் பாடநெறிகளின்படியான மாணவர் தொகை**

| பாடநெறிகள் | 1966 மொத்தம் | 1966 பெண்கள் | 1966 பெண் % | 1972 மொ. | 1972 பெ. | 1972 பெ. % | 1976 மொ. | 1976 பெ. | 1976 பெ. % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கலை, சட்டம், கல்வி, வர்த்தகம், அபிவிருத்திக் கல்வி .. | 10974 | 4775 | 43.5 | 8555 | 4189 | 48.9 | 8106 | 3489 | 43 |
| விஞ்ஞானமும், கட்டடக் கலையும் .. | 827 | 197 | 23.8 | 1416 | 515 | 36.3 | 1871 | 635 | 33.7 |
| மருத்துவமும் பல் மருத்துவமும் .. | 1636 | 482 | 29.3 | 1344 | 552 | 41.2 | 1467 | 711 | 485 |
| விலங்கியல் விஞ்ஞானமும் விவசாயமும் .. | 153 | 21 | 13.7 | 307 | 89 | 28.9 | 499 | 153 | 30.6 |
| பொறியியல் .. | 571 | 11 | 1.9 | 1164 | 83 | 7.1 | 1210 | 125 | 10.3 |
| மொத்தம் .. | 14171 | 5286 | 37.3 | 12835 | 5428 | 42.2 | 13153 | 5113 | 38.9 |

மூலாதாரம்: இலங்கைப் பல்கலைக் கழகம், செனட் அகம், கொழும்பு.

பத்திரமற்ற ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விசேட திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாவர்.

## அண்மைக்கால அபிவிருத்திகள்

தற்போதைய சமூக - பொருளாதார அபிவிருத்திகளும் கொள்கைகளும் பெண்களை பொருளாதார அமைப்புடன் இணைக்கும் புதிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழி வகுத்துள்ளன. இப்போக்கினை பின்வரும் நான்கு எடுத்துக் காட்டுகள் தெளிவுபடுத்தும்.

(1) 1972-73 ஆம் ஆண்டில் தேசிய பயிற்சியாளர் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் தொழில் வழங்குநரின் சுயவிருப்பின் பேரிலான ஒத்துழைப்புடன், இடைநிலைப் பாடசாலையை விலகுவோருக்கு தொழிற் பயிற்சி வழங்குவதாகும். முதலாம் ஆண்டில், விண்ணப்பதாரிகளில் 5% மட்டுமே பெண்களாக இருந்தனர். இவர்களில் முக்கால் பங்கினர் நெசவுக் கைத் தொழிற்றுறையில் நெசவு செய்பவராகவும் பொருத்துவோராகவும் பயிற்சி பெற விண்ணப்பித்திருந்தனர். பிற தொழில்களில் ஏராளமானவர்கள் அக்கறை செலுத்தியபோதிலும் தொழில் வழங்குனர்கள் எத் தொழிற்றுறைகளில் பெண்களை அமர்த்தலாம் என்பது பற்றி திட்டவட்டமான கொள்கையை வகுத்திருந்தமையால் அவ் விண்ணப்பங்களை நிராகரித்தனர்.

எனினும், தற்போதைய நிலை ஊக்கமளிப்பதாக உள்ளது. இத்தகைய பண்பாட்டு இடர்ப்பாடுகளை நீக்குவதில் தேசிய பயிற்சியாளர் சபை அக்கறை காட்டி வருகின்றது. சபையின் நிரலில் உள்ள எண்பத்திஆறு தொழில்களில் பத்து மட்டுமே பெண் பயிற்சியாளர்களுக்குரியது.

(2) கல்வி முறையின் க. பொ. த. (சா. நி), தே. பொ. க. சா. ஆகிய நிலைகளுக்கு அப்பால் செல்லாத 80% பிள்ளைகளுக்காக கல்வி அமைச்சு குறுங்கால ''தொழில் அனுமதிப்'' பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதில் ஈடுபட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகள் பாடசாலைகளிலேயே நடாத்தப்படும். அங்கும் ஆண்களுக்கும் பெண்களுக்குமென தொழில்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மின்சாரக் கம்பிகளைப் பொருத்துதல், மோட்டார் வண்டி திருத்துதல், அச்சடித்தல், இரும்புச் செய்கை என்பன ஆண்களுக்குரியன; தையல் முதலிய தொழில்கள் பெண்களுக்குரியன. இவ்வாறான பாகுபாடு இருந்த போதிலும் பெண்கள் வானொலி, தோல் தொழில் ஆகிய புதிய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

(3) விவசாயத்துறையிலும் பெண்கள் ஈடுபட வாய்ப்புக் கிட்டியுள்ளது. அண்மைக்கால நிலச் சீர்திருத்தங்களோடு ஏற்படுத்தப்பட்ட இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் இவ்வாய்ப்பினை வழங்கியுள்ளன. நிலச் சீர்திருத்த ஆணைக்குழு தேசிய இளைஞர் சேவைச் சபை ஆகியவற்றின் ஜனவசாக்களில் பணிபுரியும் இளைஞரில் 35% பெண்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(4) பிராந்திய அபிவிருத்தி சபைகளின் திட்டங்களிலும் பெண்கள் ஈடுபட்டுள்ளனர் (18 - 35 வயதுக்குட்பட்ட இளைஞர்). இவர்கள் பெரும்பாலும் உடை தயாரிப்புத்தொழில், கிராமக் கைப்பணித் தொழில்கள் மற்றும் விவசாய திட்டங்களில் சிறப்பாக ஈடுபட்டுள்ளனர்.

## தொழில்களிலும் அபிவிருத்தியிலும் கல்வி நிலை ஏற்படுத்தும் தாக்கம்

தற்போதைய கல்வி நிலையிலிருந்து இரு பெரும் விளைவுகள் ஏற்படுகின்றன:

1. பாடசாலையை விட்டு விலகுவோரின் தேவைகளுக்கு ஏற்றவாறு தொழிற் கல்வி வாய்ப்புகள் அமையவில்லை. பெண்கள் பொருளாதாரத்துடன் தொடர்பற்றவை என தன்னிச்சையாக வர்ணிக்கப்படும் வீட்டுபணிகளையே செய்ய வேண்டும்; ஆண்களே பொருளாதார பணிகளில் ஈடுபட வேண்டும் என்னும் பாரம்பரியக் கோட்பாடும் மற்றும் வரலாற்றுக் காரணிகளும் பெண்கள் தொழில்களில் பங்கு கொள்ளும் வீதம் குறைந்து காணப்பட பொறுப்பாக உள்ளன. பெண்களில் 16.9% மட்டுமே தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். தோட்டப் பெண்கள் மத்தியில் இவ்வீதம் அதிகமாக உள்ளதாயினும் அவர்கள் கல்வி முன்னேற்றத்தினால் பயனெதுவும் பெறவில்லை.

இன்று நிலவும் வேலையின்மைப் பிரச்சினையால் ஆண்களை விடப் பெண்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குறைந்த அளவு தொழிற்றிறன்களையே உடையவர்களாதலின் தொழிற் சந்தையில் அவர்களுடைய நிலை சிக்கலாக உள்ளது.

2. பெண்களின் வேலைவாய்ப்புகளை மட்டுப்படுத்தும் ஒரு முக்கிய காரணி அவர்கள் குறைந்த அளவான தொழிற்றிறன்களைப் பெற்றிருப்பதாகும் எனவே, பிற நாடுகளில் போன்று இலங்கையிலும் பெண்கள் சில குறிப்பிட்ட தொழில்களிலேயே குவிந்து காணப்படுகின்றனர். அவர்கள் மிகப் பிந்தியே வேலைகளில் சேர ஆரம்பித்தமையால், தொழில்களின் வரிசையின் அடிமட்டத்தில் உள்ள கீழ்நிலை தொழில்களிலேயே அவர்கள் பெருந்தொகையினராகக் காணப்படுகின்றனர்.

அதிகமான பெண்கள் தொழில்களில் ஈடுபட்டுள்ளமை ஓரளவுக்கு அவர்களுடைய கல்வி வாய்ப்புகளைப் பிரதிபலிக்கின்றன. 1973 ஆம் ஆண்டில் காணப்பட்ட இத்தகைய தொழில்கள் பின்வருமாறு: தாதி, பெண் தாதி (93%), பெருந்தோட்டத் தொழில் (90%), நூற்றல், நெசவு, உடை தயாரிப்பு (75%), கைத்தொழிற்சாலைகளில் பொதி கட்டுதல், பொருள் விபரத்தாள் ஒட்டுதல், பொருள் ஒன்றிணைத்தல் பணி (60%), ஆசிரியர் சேவை (54%), றப்பர் செய்கை, விவசாய பண்ணை வேலை, தொலைபேசி இயக்குனர் வேலை (ஒவ்வொன்றிலும் 45%), சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், மருத்துவர்கள், மருத்துவ தொழினுட்ப வியலாளர் (ஒவ்வொன்றிலும் 35%). உயர் கல்வி நிலையில் ஏற்பட்ட விரிவின் காரணமாக பெண்கள் உயர் தொழிற்றுறையில் சேருவதைக் காணமுடிகிறது. எடுத்துக் காட்டாக, மருத்துவ தொழிற்றுறையில் 1961 இல் 5% ஆக இருந்த பெண்களின் விகிதம் 1972 இல் 32% ஆக அதிகரித்தது. ஆயினும் அனுமதிப்பங்கு முறையும் கல்வி முறையினால் உருவாக்கப்பட்டவர்களுக்கு இடமளிக்க முடியாத நிலையிலுள்ள வளம் குறைந்த பொருளாதார முறையும் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியாகும் பிற பட்டதாரிகளின் வேலைவாய்ப்புகளை மட்டுப்படுத்தும் காரணிகளாக உள்ளன.

இக் கட்டுரையின் ஆய்வுப் பொருளைக் கருத்திற்கொண்டு நோக்குமிடத்து விவசாயத்திலும் கைத்தொழிலும் ஈடுபட்டுள்ள பெண்களில் பெரும்பான்மையோர் குறைந்த வருமானமுள்ள தொழில்களில் அமர்ந்துள்ளனர் என்பதும் அவர்களுடைய உழைப்பு மலிவாக சுரண்டப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்; எழுதுவினைஞர் தொழில்களைப் பெற முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்; மேலும் சமூக உளப்பாங்குகளின் காரணமாக பெண்கள் நிர்வாக பதவிகளையும் தொழினுட்ப பதவிகளையும் பயிற்சியுள் தொழில்களையும் பெற முடியாதுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் விஞ்ஞானம், கணிதம், கேத்திர கணித வரைதல், தொழில் முன்னிலைப் பாடங்கள் ஆகியனவற்றைக் கட்டாய பாடங்களாக்கியுள்ளன ஏராளமான பெண்கள் சிரேட்ட இடைநிலையில் விஞ்ஞானப் பிரிவில் பயிலத் தகுதி பெற்றுள்ளனர்.

# மாதரும் சட்டமும்

— திருமதி மனோரி முத்தட்டுவேகம (சட்டத்தரணி)

இப்பொழுது சர்வதேச மாதர் தசாப்தமாகப் பரிணமித்துள்ள சர்வதேச மாதர் ஆண்டின் இலக்குகளாகிய சமத்துவம், சமாதானம் அபிவிருத்தி என்பன எம்மைப் போன்று அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளுக்கு விசேட முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஏனெனில் அவை ''இப்பொழுது'' உலகின் மாதர் கோரிவரும் தீர்மானம் மேற்கொள்வதில் பங்குபற்றுவதற்கான உரிமையை மாத்திரமன்றி, ''இப்பொழுதைய'' உலகின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டுமாயின் உலகின் தேவைகளுக்கு பெண்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பினையும் சரியாகச் சுட்டிக் காட்டுகிறது.

பெண்களுக் கெதிரான பாகுபாட்டினை நீக்குவதற்கான ஐ. நா. பிரகடனத்தின் முகவுரை பின்வருமாறு கூறுகிறது:—

''. . . . ஒரு நாட்டின் முழுமையான பூரண அபிவிருத்தி, உலகின் நலனேம்பல், சமாதானம் என்பன, பெண்களும் அதுபோன்றே ஆண்களும் சகல துறைகளிலும் ஆகக் கூடுதல் பங்குபற்ற வேண்டுமென வேண்டுகிறது.''

சர்வதேசத் துறையில் போன்றே தேசியத் துறையிலும் இது உண்மையானதாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ''அரச கொள்கைக் கோட்பாடுகள்'' பின்வருமாறு கூறுகின்றன. ''பொருளாதார, சமூக ரீதியான சிறப்புரிமைகளை நீக்கி ஒப்பின்மையையும் சுரண்டலையும் அகற்றி எல்லாப் பிரசைகளுக்கும் சம சந்தர்ப்ப வாய்ப்புக்களை அரசு உறுதி செய்ய முயலுதல் வேண்டும்.''

அத்துடன் ''அடிப்படை உரிமை'' யொன்று பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:—

''. . . . சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லாரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தின் மூலமான சம பாதுகாப்புக்கும் உரிமையுடையவர்கள்''.

### குற்றவியல் சட்டம்

அறிவியல் மற்றும் மனோ ஆற்றல்களில் ஒரு பெண் ஒரு ஆணிலிருந்து வேறுபட்டவளல்ல என்பதை எமது குற்றவியல் சட்டம் பூரணமாக ஏற்றுக்கொள்வதுடன் குற்றச் செயலொன்றுக்கான பொறுப்பினை பால் பாகுபாடெதுவுமின்றி ஆண், பெண் இருபாலார் மீதும் வயதையும், அறிவையும் அடிப்படையாகக் கொண்டு சுமத்துகிறது. உடலியல் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த நிலைமைகளையும் அங்கீகரிக்கும் எமது மேற்படி சட்டம் கற்பழித்தலை ஒரு குற்றமாகவும், இளம் பெண் பிள்ளைகளுடன் அசாதாரண உடல் சேர்க்கை நடத்துவதை ஒரு குற்றமாகவும் (இது 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளுக்கு ஒரு விசேட தர பாதுகாப்பினை வழங்குகிறது) மற்றும் சில செயல்களைக் குற்றங்களாகவும் கருதுகின்றது.'' ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே கருச்சிதைவொன்றைத் தூண்டிய குற்றத்திற்கு மன்னிப்பளிக்கப் படுகின்றது. இல்லாவிடில் மேற்படி சட்டத்தின் நோக்கம் இன்னுமே பிறக்காத பாலகர்களைக் காப்பாற்றுவதேயாகும்.

### சொத்துடமைச் சட்டம்

திருமணமாகாத வயதுவந்த தனியான பெண் ஒருத்தி தனது சொத்துக்கள் சம்பந்தமாக முதிர்ந்த ஒரு ஆணுக்குள்ளது போன்ற அதே அளவு உரிமைகளையும் நிகழ்வுகளையும் அனுபவிக்கின்றாள். ஆனால் அவள் திருமணம் செய்வதுடன் நிலைமை மாறிவிடலாம். திருமணமான பெண்கள் சொத்துரிமைக் கட்டளைச் சட்டத்தினால் ஆளப்படும் திருமணமான பெண்கள், பாரம்பரிய சிங்களச் சட்டத்தின் கீழ் அனுபவித்து வந்த தனியான சொத்துக்களுக்கான சிறப்புரிமையையும், ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கான பூரண உரிமையையும் அனுபவிக்கின்றாள். ஆனால் யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் பின்னுரிமைக் கட்டளைச் சட்டம், அல்லது முஸ்லிம் சட்டம், அல்லது கண்டிய சம்பிரதாயச் சட்டம், என்பவற்றின் கீழ் திருமணமான பெண் சில கட்டுப்பாடுகளுக்குட்படுகிறாள். வழமையான, சம்பிரதாயமான, சமய சார்பான துறைகளைச் சார்ந்த சட்டங்கள் செயல்படுவதில் நின்றும், வேறுபட்ட செயற்பாட்டு அடிப்படையைக் கொண்ட தற்போதுள்ள சட்டத்தையொத்ததும், திருமணமான சகல பெண்களுக்குமே பொதுவானதுமான ஒரு சீரான விதிகளை, ஏனைய துறைகளில், போன்றே இங்கும் ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் விசேடமாக நவீன சமுதாயத்தில் சமயம், வழக்கம், சம்பிரதாயம் ஆகியவற்றின் அடிப்படையிலான விதிகளுக்கு மேலாக, சமுதாயம் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதிகளாக சட்டம் இன்று முதலிடம் வகிக்கின்றது.

### சீதன முறை

எமது சமுதாயத்தில் இன்று சீதனக் கையளிப்பு நிலவுகின்ற போதிலும் சட்டம் அதனை அங்கீகரிக்கவில்லை. திருமண வேளையின் போது பதியப்பட்டாலும் கூட சட்டம் வேண்டுகின்றபடி முறைப்படி கைமாற்றப்பட்டிருந்ததாக திருப்தியுறச் செய்தால் மாத்திரமே சட்டம், சொத்துக் கைமாற்றலுக்கு சட்ட அந்தஸ்து வழங்கும. வாக்களிக்கப்பட்டதான சீதனம் வழங்கப்பட்டதற்கான பற்றுச் சீட்டு ஒரு திருமணத்தின் செல்லுபடித் தன்மைக்கான முன் நிபந்தனையாக ஆக்கப்படவோ அல்லது அதனைக் கொடுக்கத் தவறியமை திருமணம் இரத்து செய்யப்படுவதற்கான காரணமாகவோ நிச்சயமாக அமைய முடியாது. எவ்வாறாயினும் சீதன முறைக்கு சமூகத்தின் வெறுப்பைக் காட்டும் ஒரு முறையாக, சீதனம் கோருதல் தண்டிக்கப் படக்கூடிய குற்றம் என இந்திய சட்டத்திலுள்ளது போன்ற ஒரு ஒழுங்கு விதியை; அதனை அமுல் நடத்துவதில் கஷ்டங்கள் இருந்த போதிலும்; ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

### பராமரிப்புச் சட்டம்

சட்ட ரீதியாகச் செல்லுபடியான ஒரு திருமணம் இருத்தலானது ஒரு பெண்ணைப் பராமரிக்கும் கடமையை எழச் செய்யும் உணர்வுக் கல்லாகும். அதே வேளையில் குழந்தைகளைப் பொறுத்த வரையில் அது ஒரு உண்மை நிலையை, குறிப்பாகக் கூறுவதாயின் தந்தைத் தன்மையைக் காட்டுகிறது. இளைய வயதினரின் உடற் தேவைகளுக்கு முதலிடம் அளித்த பின் செல்லுபடித் தன்மையையும் அதன் காரணமாக ஒரு பெண் ஆற்று மாறு வேண்டப்படும்

ஆதாரப் பங்களிப்பினையும் அங்கீகரிக்கும் அதே வேளையில், குழந்தைகள் தொடர்பாக தந்தைமார்கள், நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்கும் பராமரிப்புத் தொகையை செலுத்துமாறு தந்தையர்களைக் கட்டாயப்படுத்துவதில் உதவக்கூடியதான அமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு அவசர முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென தொழில் புரிவோர் குழு கருதுகிறது. தங்களது பணி, அமுல் நடத்துவதை விடவும் தீர்ப்பளிப்பதே என நீதிமன்றங்கள் காணும் நோக்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாயினும், அவர்களை இதில் ஈடுபடுத்தாமலே அவர்களது தீர்ப்புக்கள் தாமாகவே அமுலாகக் கூடிய சட்ட ஏற்பாடுகளைச் செய்வது இத்துறையில் மிகவும் அவசியமானதாகத் தோற்றுகின்றது. ஒரு ஆண் செலுத்த வேண்டிய பராமரிப்புச் செலவு பற்றி நீதிமன்றமொன்றின் கட்டளை கிடைக்கப் பெற்றால் அதனை அந் நபரது சம்பளத்திலிருந்து அந் நபரின் வேலை கொள்வோரே கழித்து அனுப்பும், பிரிட்டனில் உள்ளது போன்ற, நடைமுறைகளின் அடிப்படையிலான சட்ட விதியொன்றை அமைத்தல் இப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வினைத் தரும்.

### தொழில் புரிவதற்கான உரிமை

''குழல் ஊதுவோனுக்கு கூலி கொடுப்பவனே தனக்கு விரும்பிய மெட்டில் குழல் ஊதப்படல் வேண்டுமெனவும் கோருவான்'', ஆண்கள் சார்ந்த சமுதாயத்தில் பெண்கள் பல அநீதிகளால் துன்புற்றதற்கான உண்மைக் காரணங்களில் ஒன்று மேற்படி அடிப்படையாகும். ஆணோ, பெண்ணோ ''தொழில் புரிவதற்கான உரிமை''யை எமது சட்டம் அங்கீகரிப்பதில்லை. வேலை கொள்வோர் பலரையுடைய ஒரு சமுதாயத்தில் தொழில் புரிவதற்கான நியாயமானளவு உரிமையை வழங்குவதிலுள்ள பிரச்சினையென்னவெனில் அவ்வுரிமை யாரிடம் கோரப்படல் வேண்டும் என்பதாகும்.

### தொழில் நிபந்தனைகள்

சம பெறுமதியுடைய வேலைக்கு, பெண்களுக்கு ஆண்களை விட குறைந்த சம்பளம் வழங்குவதை சட்டரீதியாக அங்கீகரித்திருப்பதே மிகப் பெரிய அநீதியாகும். குறைந்த சம்பளங்கள் (இந்தியத் தொழிலாளி) கட்டளைச் சட்டத்தின் 8 (2) ம் பிரிவின் கீழும் சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு சம்பள அளவுகள் தீர்மானிக்கப்பட இடமுள்ளது. மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமபெறுமதியுடைய, சம தரத்திலான சம அளவு வேலைக்கு ஆண் தொழிலாளர்களை விடவும், சில வேலைகளில் இளைய ஆட்கள் என பதம் குறித்து வகைப்படுத்தப்பட்டோரை விடவும் குறைந்த சம்பளம் பெறவே பெண்கள் அருகதையுடையவர்களாகின்றனர். பெண் தொழிலாளர்களில் பெரும் தொகையினர் இந்த வகைப்படுத்தலுக்குக் கீழ்வருபவர்களே. மேலும் எவ்விதத்திலும் குறைந்த சம்பளம் வழங்கப்படும் தொழிலாளர்கள் பெண்களே. பதவியுயர்வு வழங்கப்படாமை, பதவியுயர்வு வாய்ப்புக்கள் எதுவுமே இல்லாதவாறு பெண் தொழிலாளர்களை ஒரு இறுக்கமான பிடியினுள் தள்ளும் அமைப்பு முறையான பெண் தொழிலாளரை வகைப்படுத்தல் என்பன பெண்களுக்கெதிராக இயங்கும் ஏனைய காரணிகளாகும். இப் பாகுபாட்டுச் செயல்முறைகளுக்கெதிராக சட்டம் செயல்படாதிருப்பதோடு அமைதியாக அவற்றை அங்கீகரிக்கவும் செய்கின்றது. மேலும் ஏற்கனவே உள்ள, விசாரணை மற்றும் அமுல் நடத்தலுக்கான பொது அமைப்பு முறை தற்போதுள்ள உரிமைகளைத் தானும் அமுல்படுத்துவதில் தனது ஆற்றலின்மையை நிரூபித்து விட்டது.

இந்தச் சூழ்நிலைகளில் பால் பாகுபாட்டுக்கெதிரான சட்டவாக்கமும், விசாரணைக்கான ஒரு அமைப்பு முறையை ஏற்படுத்தலும் அவசியமாகியுள்ளது.

### ''ஒழுங்கமைக்காத் துறை''த் தொழிலாளர்

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தையுடைய பல அபிவிருத்தியுறும் நாடுகளில் போன்றே எமது நாட்டிலும் பெண் தொழிலாளருக்கான பாரம்பரியத் துறையானது விவசாயமும் சிறு குடிசைக் கைத்தொழிலுமாகும். வழக்கமாக இதில் ஒரு கைத்தொழில் கூறு ஒரு குடும்பமே. இப் பெண் தொழிலாளர்கள் முற்றாகவே இந் நாட்டின் தொழிற் சட்டங்களின் செயற்பாட்டிற்கு புறத்கே நிற்க வேண்டியுள்ளனர். இதிலுள்ள பிரதான கஷ்டம் என்னவெனில் ''தொழிலாளி'' என்பது வேலை கொள்வோருடனான ஒரு வேதன உறவின் அடிப்படையிலேயே வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளதேயன்றி பொருளாதார உற்பத்தியின் அடிப்படையிலல்ல.

### பெண்ணின் வருமானம் குடும்பத்திற்கான குறை நிரப்பு வருமானம் எனக் கருதப்படும் கோட்பாடு

சம்பள சபைச் சட்டத்தின் பின்னாலமைந்துள்ள கோட்பாடு இதுவாகும். திருமணம் முடித்த பெண்களின் வருமானத்தில் வரி மதிப்பிடும் முறையின் பின்னாலுள்ள கோட்பாடும் இதுவேயாகும். எமது வரிச் சட்டத்தின் கீழ் திருமணமான ஒரு பெண்ணின் வருமானம் அவளது கணவனின் வருமானத்துடன் கூட்டப்பட்டு அக்கூட்டு வருமானத்திலேயே வரிமதிப்பிடப்படுகிறது. தொழில் செய்வதன் மூலம் சம்பாதித்த வருமானத்தில் சில சலுகைகள் 1976 ம் வருட நிதிச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அதே கோட்பாடு இன்னும் நிலைத்து நிற்கின்றது.

### கல்வித் துறையில் வேறுபடுத்தப்படாத வாய்ப்புக்கள்

கல்வித்துறையில் பெண்களுக்கு வேறுபடுத்தப்படாத வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோருவதற்கு சட்டத்தில் எவ்வித ''உரிமை'' யும் இல்லை. அத்தகைய ஒரு சட்டத்திற்கான அவசியம் உளது. இல்லாவிடின் நிருவாக ஒழுங்கு விதிகளின் மூலம் கல்வித் துறை வாய்ப்புக்களில், பால்ரீதியான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் வாய்ப்புக்கள் எப்பொழுதும் உள்ளன.

### பெண்களை ஒரு தாழ் வகை, அண்டி வாழ் உயிரினமாக பொது சன தொடர்பு சாதனங்கள் சித்தரிப்பதைத் தடை செய்தல்

இதற்கான ஒரு சட்டம் மிகவும் அவசியப்படுகிறது.

### முடிவுரை

சமத்துவம், சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றைச் சாதித்தல், பெண்கள் இவைகளில் விருப்புடன் பங்கு கொண்டால் மாத்திரமே யதார்த்தமாக முடியும். அதற்கான கட்டுக்கோப்பை மாத்திரமே சட்டம் வழங்க முடியும்.

# சர்வதேச மரபொழுங்குகள்

— திருமதி மானல் அபேசேகரா (இலங்கையின் பிரதம உபசரணை அதிகாரி)

சர்வதேச மரபொழுங்குகள் ஆவன சில சமுதாயப் பொது நலன்களின் கோட்பாடுகளை வலியுறுத்துதற்குத் தேவையான சர்வதேச சமுதாயத்தின் அல்லது ஆகக் குறைந்தது சர்வதேசக் கருத்தரங்குகள் மூலம் ஏற்றுக் கொள்ளப் படவுள்ள குறிப்பிட்ட மரபொழுங்கை சாத்தியமாக்கக்கூடிய ஆதரவைத் தரவல்ல அங்கத்துவ நாடுகளின் கருத்து வெளிப்பாட்டுக் கோவைகளாகும். எனவே மனிதக் குடும்பத்தில் இன்றியமையாத பங்கினை வகிக்கும் பெண்களுக்கு சர்வதேச மரபொழுங்குகள் அக்கறையானவையாகும். பெண்களது அந்தஸ்து ஆண்களுடையதை விடக் கீழ்மையானதாயிருப்பதனாலும், குழந்தைப் பேற்றுக் கைங்கரியக் காரணம் தொடர்பாக உயிரியல் ரீதியாக பெண்களுக்கு சில விசேட உரிமைகள் தேவைப்படுவதாலும் சில மரபொழுங்குகள் பெண்களுக்கு வரையறையான முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில் அவை அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்கின்றன.

இலங்கைப் பெண்களின் நிலை பற்றிக் குறிப்பிடும் பெண்கள் தொடர்பான சர்வதேச மரபொழுங்குகளின் பட்டியல் ஒன்று இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. வேறு சில மரபொழுங்குகள் பெண்கள் பற்றி வரையறையாகக் கூறுதிருந்த போதிலும் அவற்றில் உள்ள சரத்துக்கள் பெண்களுக்கும் விஸ்தரிக்கப்படக் கூடியவையே. உதாரணமாக சர்வதேச தொழில் நிறுவன மரபொழுங்குகள் பொதுவாக பெண்கள் உள்ளடங்கிய தொழிலாளர்களின் உரிமைகளையும் பாதுகாப்புகளையும் மேவியடக்குகிறது.

ஆனல் பிராந்திய, சர்வதேசக் கருத்தரங்குகளின் தீர்மானங்கள் போன்ற மரபொழுங்குகள் சில வேளைகளில் எழுத்தளவிலேயே நின்று விடுகின்றன. ஏனெனில் வரை மரபொழுங்குகள் குறிப்பிடப்பட்ட அங்கத்துவ நாடுகளை அவற்றை ஏற்றுக் கொண்டு கைச்சாத்திடுவதன் முன் அவற்றினை ஆராய்ந்து கருத்துக் கெடுத்து ஆதரிக்க வேண்டி நிற்பதுடன் வரையறுக்கப்பட்ட நாடுகள் அவற்றை ஏற்றுக் கொள்ளும் வரை அம் மரபொழுங்குகள் செயலாக்கம் பெறுவதில்லை. அதாவது அவை பல்வேறு நாடுகளின் சட்டவாக்கப் படிமுறைகள் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு முறையேற்கப்பட வேண்டும். இங்கே தான் பிரச்சினை ஏற்படுகிறது — ஏனெனில் தனித்தனி இன, சாதி, அரசியல், சமூக, பொருளாதார காரணிகள் காரணமாக ஒரு மரபொழுங்கின் கொள்ளுரைகளோ சரத்துக்களோ அவசியமாக முற்ருகவே எல்லா நாடுகளுக்கும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக அமைவதில்லை. அத்தோடு அரசாங்கங்கள் சில வேளைகளில் மரபொழுங்குகளைக் கைச்சாத்திட்டாலும் அவற்றினை அவை முறையேற்பது சுலபமானதல்ல. ஏனெனில் முறையேற்பு என்பது அவற்றினை ஏற்றுக் கொள்வதாகும்.

இது முக்கியமாக வழமைகளும் பாரம்பரிய சட்ட முறைகளும் நிலவும் பல்லின, பல்மத சமுதாயங்களிலே உண்மையாகி விடுவதுடன் இப் பிரச்சினைகள் சட்டவாக்கப்படி படிமுறைகள் சிக்கலாயுள்ள ஜனநாயக அரசுகளில் மேலும் தீவிரமாகி மேற்கொண்டும் முறையேற்பில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதுடன் அமையாது உள்நாட்டு சூழ்நிலையில் முறையேற்பையும் சிக்கலாக்கி விடுகிறது. ஒரு எடுத்துக்

## தொடர்புடைய சர்வதேசக் கருவிகள்

### அ — ஐக்கிய நாடுகள் கருவிகள்

**I பொதுக் கருவிகள்**

| | தலையங்கம் | இலங்கையின் நிலை |
|---|---|---|
| 1. | ஐக்கிய நாடுகள் சாசனம் .. .. | 1948ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 2. | மனித உரிமைகள் சர்வ தேசப் பிரகடனம் (1948) | சேர்வதற்கழைக்கப்படவில்லை |
| 3. | பொருளாதார சமூக கலாசார உரிமைகள் மீதான சர்வதேச ஒருப்பாடு (1966) | சம்பந்தப்படவில்லை (3–5) |
| 4. | விருப்பிற்குரிய தாயேடு, சிவில் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒருப்பாடு (1966) | |
| 5. | மற்றவர்களது கணிகத்துவத்தை சுரண்டுவதையும் ஆட்கடத்துதல்களையும் ஒடுக்குவதற்கான மரபொழுங்கு (1949) | |
| 6. | அடிமைத்தனத்தை, அடிமை வியாபாரத்தை, அடிமைத்தனத்தை ஒத்த நடைமுறைகளையும் நிறுவனங்களையும் ஒழிப்பது தொடர்பான அனுபந்த மரபொழுங்கு (1956) | 1958 ல் அங்கீகரிக்கப்பட்டது |
| 7. | சகலவிதமான இணைப் பாகுபாடுகளையும் நீக்குவது தொடர்பான மரபொழுங்கு (1965) | வாக்களித்தது ஆனல் அதில் அங்கத்துவமில்லை |
| 8. | அபிவிருத்தி மீதானதும் சமூக முன்னேற்றம் மீதானதுமான பிரகடனம் .. .. | |
| 9. | இரண்டாவது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் தசாப்தத்தின் மீதான சர்வதேச அபிவிருத்தி உபாயம் (1970) | வாக்கின்றி ஐ. நா. பிரேரணையை ஏற்றுக்கொண்டது |
| 10. | உலக குடித்தொகை நடவடிக்கைத் திட்டம் (1974) | வாக்களித்தது |
| 11. | ஒரு புதிய சர்வதேசப் பொருளியல் ஒழுங்கை நிறுவுவதன் மீதான நடவடிக்கைத் திட்டம் (1974) | ஐ. நா. பிரேரணைக்கு வாக்களிக்கப்பட்டது |
| 12. | அரசுகளது கடமையினதும் பொருளாதார உரிமைகளினதும் சாசனம் (1974) | ஐ. நா. பிரேரணைக்கு வாக்களிக்கப்பட்டது |

**II பெண்களின் வரையறையான நிலை தொடர்பான கருவிகள்**

| | தலையங்கம் | இலங்கையின் நிலை |
|---|---|---|
| 1. | பெண்களின் அரசியல் உரிமைகள் மீதான மரபொழுங்கு (1952) | அங்கத்துவம் இல்லை |
| 2. | திருமணமான பெண்களின் தேசிய இன நிலை மீதான மரபொழுங்கு (1957) | 1958 ல் பங்கு கொண்டது |
| 3. | திருமணச் சம்மதம், திருமணக் குறைந்த பட்ச வயது, திருமணப் பதிவுகள் மீதான மரபொழுங்கும் விதப்புரையும் (1962 ம் 1963 ம்) | 1962 ல் கைச்சாத்திடப்பட்டது ஆனல் முறையேற்கப்படவில்லை |
| 4. | பெண்களுக் கெதிரான பாகுபாட்டு நீக்கப் பிரகடனம் (1967) | ஐ. நா. பிரேரணைக்கு வாக்களிக்கப்பட்டது |
| 5. | பெண்கள் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த சர்வதேசத் திட்டம் (1970) | ஐ. நா. பிரேரணைக்கு வாக்களிக்கப்பட்டது |

காட்டாகக் கூறுவதாயின் கல்விப் பாகுபாட்டிற்கெதிரான 1960ன் யுனெஸ்கோ மரபொழுங்கு 135 யுனெஸ்கோ அங்கத்துவ அரசுகளில் 63 அரசுகளாலேயே முறையேற்கப்பட்டது. அதே போலவே 1960 ன் மரபொழுங்பில் பங்கு கொண்ட நாடுகளிற்கிடையே தோன்றும் பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பான இணக்க நற்சேவைகள் ஆணைக்குழுவை எடுத்துக் கூறும் 1962 ன் தாயேடு 21 நாடுகளால் மட்டுமே முறையேற்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இது இவ்வாறிருக்கையில் கல்வியமைச்சு தற்போது யுனெஸ்கோ மரபொழுங்குகளையும் அது சம்பந்தமாக இலங்கையின் நிலையையும் பொருத்தமான வேறு அதிகார சபைகளின் ஆலோசனையுடன் மீளாய்வு செய்யும் அதே வேளையில் கல்விப் பாகுபாட்டிற் கெதிரான மரபொழுங்குகளை இலங்கை முறையேற்பது தொடர்பாகவும் அமைச்சரவை அறிக்கையொன்றை சமீபத்தில் தயாரிக்கவுள்ளது. யுனெஸ்கோ மரபொழுங்குகள், உடன்படிக்கைகள், விதப்புரைகள், தாயேடுகள் போன்ற 20 விஷயங்களை கருத்துக் கெடுத்துக் கொண்டால் அவற்றினை முறையேற்பதன் மூலம் அவற்றில் பங்கு கொண்ட நாடுகள் மிகச் சிலவே. இது குறிப்பிடத்தக்க ஒரு விஷயமாகும். அதே போல சிவில் அரசியல் உரிமைகள் மீதானவையும் பொருளாதார சமூக கலாசார உரிமைகள் மீதானவையுமான ஐ. நா. சர்வதேச ஒருப்பாடுகள் முறையே 31 நாடுகளினாலும் 32 நாடுகளினாலும் முறையேற்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் பெண்களின் அரசியல் உரிமைகள் மீதான ஐ. நா. மரபொழுங்கு 76 நாடுகளினாலேயே முறையேற்கப்பட்டுள்ளன. மேலும் நாடுகளினால் எதிர்நோக்கப்படும் இத்தகைய பிரச்சினைகள் சில மரபொழுங்குகளில் தாமே கணிப்புப் பெற்றுள்ளன. உதாரணமாக திருமண ஒப்புதல், திருமணத்திற்கான குறைந்தபட்ச வயது திருமணப் பதிவுகள் முதலானவை மீதான ஐ. நா. மரபொழுங்கின் இரண்டாவது கொள்ளுரை திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை வரையறை செய்யவில்லை. ஆனால் அது வெறுமனே அதன் தேவையை அமோதித்து அதை தேசிய சூழ்நிலைக்கேற்ப (குறைந்தபட்ச வயதைத் தீர்மானிக்க) தேசிய சட்டவாக்கங்களிடம்) விட்டு விடுகிறது.

ஒரு சேவையின் நலனிற்காக ‘கோட்டா’ முறையைப் புகுத்த அனுமதிக்கும் அரசியலமைப்பின் சரத்துக்களின் தப்பர்த்தங்களாக விவரித்து அவை மூலம் பெண்களுக்கான தீமையான கட்டுப்பாட்டுக் கோட்டாக்களை நிர்வாக சேவை வைத்துக் கொண்டுள்ளது. பெண் தொழிலாளர்களுக்கான சம வாய்ப்பு சம நடத்துமுறை தொடர்பான சர்வதேச தொழில் நிறுவனத்தின் 1975 ன் 60 வது அமர்வின் எட்டாவது அறிக்கை குறிப்பிடுவதாவது: ‘‘தேசியக் கோட்பாட்டினதும் செயலாக்கத்தினதுமான எல்லைகள் வலிய காரணிகளால் சூழப்பட்டுள்ளன. முக்கியமாக மூன்றாவது உலகில் அவை அபிவிருத்திக் குறைவு அம்சத்தால் சூழப்பட்டுள்ளன. இவையெல்லாவற்றினதும் கூட்டுமொத்தம் என்னவெனில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் செய்யப்படக் கூடியது வேறொரு நாட்டில் செயற்கரிது என்பதும், கோட்பாடுகளின் பொதுப் பணிப்புகளிலும் செயல்முறைகளிலும் விசாலிய உடன்பாடுகள் இருப்பினும் பொதுவான தீர்வு மாதிரி இருப்பதில்லை என்பதும், அவற்றில் ஈவினை உறுதிப்படுத்துதற்கும் அணுகுமுறையை எதார்த்தமாக்குவதற்கும் போதிய கவனம் எடுக்கப்பட வேண்டும் என்பதுமாம்.’’ இதில் மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவெனில் மரபொழுங்குகளை அரசுகள் அங்கீகரித்திருந்த போதிலும் அம் மரபொழுங்குகள் மீதான கடப்பாடுகள் அவ்வரசுகளைப் பொறுத்தமட்டில் சட்ட சம்பந்தமானவையாய் அன்றி ஒழுக்க நெறியின் வாய்ப்பட்டவையாயிருத்தலே.

இச் சந்தர்ப்பத்தில் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் எழும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பது சம்பந்தமான சரத்துகள் ஒருபுறமிருக்க, மனித உரிமைகள் மீதான ஐ. நா. மரபொழுங்குகளில் சில நடைமுறைப் படுத்துதற்கான வலுவான சர்வதேச நெறிகளைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியிருக்கையில் அதற்கு சாதிப் பாகுபாட்டை தவிர்த்தல் மீதானதும், மனித உரிமைகளின் இரண்டு சர்வதேச ஒருப்பாடுகள் மீதானதும், சிவில், அரசியல் உரிமைகளின் ஒருப்

### ஆ — சிறப்புத் தேர்ச்சி முகவர் கருவிகள்

**I சர்வதேச தொழில் நிறுவனம் (ச.தொ.நி.)**

| தலையங்கம் | இலங்கையின் நிலை |
|---|---|
| 1. சுரங்க வேலை (பெண்கள்) மரபொழுங்கு இல. 45 (1935) | 20-12- 50 ல்முறையேற்படி ச. தோ.நி. யால் பதிவு செய்யப்பட்டது |
| 2. இரவு வேலை (பெண்கள்) மரபொழுங்கு (திருத்தப்பட்டது) இல. 89 (1948) | 31-3-66 ல் ச. தொ. நி. யால் முறையேற்று பதிவு செய்யப்பட்டது |
| 3. சம சம்பளம் இல. 100 ம் (1951) சம சம்பள விதப்புரை இல. 90 ம் (1951)<br>4. பிரசவப் பாதுகாப்பு மரபொழுங்கு (திருத்தப்பட்டது) இல. 103 ம் (1952) பிரசவப் பாதுகாப்பு விதிப்புரை இல. 95 ம் (1952) சமூக ஏம மரபொழுங்கு (குறைந்தபட்ச தரங்கள்) இல. 102 (1952)<br>6. பாகுபாடு (வேலைவாய்ப்பு - தொழில்) மரபொழுங்கு இல. 111 (1958) ம் பாகுபாடு (வேலைவாய்ப்பு தொழில்) விதிப்புரை இல. 111 (1958) ம்<br>7. தொழில் நிலைப் பயிற்சி விதிப்புரை இலக்கம் 117 (1962)<br>8. தொழிற் கொள்கை மரபொழுங்கு இல. 122 (1964) ம் தொழில் கொள்கை விதிப்புரை இல. 122 (1964) ம்<br>9. தொழில் (குடும்பப் பொறுப்புள்ள பெண்கள்) விதிப்புரை இல. 123 (1965) | இது வரை முறையேற்கப்படவில்லை. ஆனால் அமைச்சின் பரிசீலனையில் உள்ளது |

**II ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம்—யுனெஸ்கோ**

| | |
|---|---|
| 1. கல்விப் பாகுபாட்டிற் கெதிரான மரபொழுங்கு (1960) | முறையேற்புசம்பந்தமான அமைச்சரவை அறிக்கை தயார் நிலையில் உள்ளது |
| 2. கல்விப் பாகுபாட்டிற் கெதிரான மரபொழுங்கின் அங்கத்துவ நாடுகள் மத்தியில் எழும் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்குப் பொறுப்பான இணக்க நற்சேவைகள் ஆணைக்குழுவை நிறுவும் தாயேடு | மரபொழுங்கில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டபின் கருத்துக் கெடுக்கப்படும் |

பாட்டுக்கான விருப்புக்குரிய தாயேட்டின் மீதானதுமான மரபொழுங்கின் பிரதான விதிவிலக்குகளுடன் இங்ஙனம் செயல்படுகிறது. ஆனால், அவையே இற்றைவரை வலுவில் இல்லை.

மாதருக்கான அரசியல் உரிமைகளின் மரபொழுங்கு (1952) திருமணஞ் செய்த பெண்களின் தேசிய இனப் பிரச்சினை மீதான மரபொழுங்கு (1967) திருமணச் சம்மதம், திருமணத்துக்கான குறைந்தபட்ச வயது, திருமணப் பதிவு போன்றவற்றின் மீதான மரபொழுங்கு (1962) ஆதியன அங்கத்துவ நாடுகள் மத்தியில் எழும் பிணக்குகளைத் தீர்க்க வழி சமைத்த போதிலும், சர்வதேச ஆய்வுக்கான வேறு வழிமுறைகளையோ, அறிக்கையிடு ஒழுங்குகளையோ கொண்டிருக்கவில்லை. எனினும், பொருளாதார, சமூக குழுவும், ஐ. நா. பொதுச் சபையும் (ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 64 வது கொள்ளுரையின் கீழ் அம் மூன்று மரபொழுங்குகளுக்கும், அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஷரத்துக்களைக் கொண்டிருக்காத மாதருக் கெதிரான பாகுபாட்டின் சகல வடிவங்களையும் தவிர்ப்பது தொடர்பான பிரகடனத்திற்கும் அறிக்கையீட்டு வழிமுறைகளை நிறுவியுள்ளன.

சர்வதேச மரபு ஒழுங்குகள் தேசிய சட்டவாக்கத்திற்கு வழிகாட்டியாகவும் இறுதியடைதல் கதியாகவும் இருந்த போதிலும், அவை தாமே தேசிய அபிப்பிராயத்தினதும், சட்டத்தினதும் பிரதிபலிப்பாய் இருக்கின்றன. ஏனெனில், அவை சர்வதேச சமூகத்தினால் — அதை வேறு வார்த்தைகளில் சொல்வதானால் — தேசிய அரசுகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, பெண்கள் தொடர்பானவை பெண்களுக்கான சமுதாய நாட்டத்தின் படி முறை பரிணாமத்தையும், சமுதாயத்தில் பெண்கள் ஆற்றும் பங்கினையும் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, சர்வதேச மரபொழுங்குகளில் எடுத்துக் கூறப்பட்ட முதற் கோட்பாடுகளில் சில, பெண்களை வேலை வாய்ப்பு கஷ்டங்களிலிருந்து பாதுகாப்பதற்கென வரையப்பட்டவை. இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் சர்வதேச மரபொழுங்குகளிலோ, தேசிய சட்டங்களிலோ உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இன்று பெண்களின் வேலை வாய்ப்புகளுக்கெதிராகவும், தொழிலாளர் அணியில் அவர்கள் அதிகப்படியாக சேர்த்துள்ளமையிலும் பெண்களின் பங்கியக்கங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களோடு உருப்பாட்டமைப்பிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அவர்களின் நலன்களுக்கெதிராகவும் தீவிரப் போக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. இரவு வேலை தொடர்பான சட்டத்தைப் பொறுத்த வரையில் இது முக்கியமாக உண்மையாகிறது. இரவு வேலையைப் பொறுத்த வரையில் இன்று ஒரு பெண், இரவில் வேலையை விட்டு காலையில் மிக நேரத்துடன் வேலைக்குச் செல்வதிலும் பார்க்க, இரவு பத்து மணி முதல் காலை 6 மணி வரை வேலை செய்வதை வசதியானதாக கொள்கிறாள். தொழில் தொல்லைகளிலிருந்து முக்கியமாக கைத்தொழில் அமைப்பில் பெண்களைப் பாதுகாப்பதற்கு உற்பத்தி உழைப்பு நாணயத்தில் பெண்கள் பங்கு கொள்வதை தூண்டும் கருத்துகள் படிப்படியாகவே இடம் பெற்றுவந்துள்ளன. பெண்கள் தமது குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுதற்கும், தொழில் செய்வதற்கும் வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் மெதுவாகவே இடம் பெற்று வருகின்றன. இதனை அடுத்து பாகுபாடின்மைக் கோட்பாடும் ஏற்றுக் கொள்வதாகி பெண்கள் தொழில் முன்னேற்றத்திலும், தொழிலும், ஆண்களுக்குச் சமதையான சந்தர்ப்பங்களை அனுபவிப்பதற்கு ஏதுவாக இது குடும்பத்திலுள்ள பெண்களுக்கோ, குடும்பத்தில் இல்லாத பெண்களுக்கோ, சகலருக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பாகுபாடின்மைக் கோட்பாட்டின் விளைவு சமமான பெறுமானத்திற்கு சமமான சம்பளமாகும். இக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் நடைமுறைப் படுத்தலில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. பெண்களின் அந்தஸ்தின் அபிவிருத்திக்கு சாதகமான இச் சகல அபிவிருத்திகளும் அத்தகைய அபிவிருத்திகளோடு இணைந்து செல்லாது, சமூக, பொருளாதார உருப்பாட்டமைவோடு காலகட்டத்தில் மெதுவாகவே உருவாகியுள்ளன. குடிசனத் தொகையின் அரைப் பங்கினரான பெண்கள், மற்ற அரைப் பங்கினரான ஆண்களோடு சமமாக இல்லாவிடில் உலகம் முன்னேற்றம் அடையாதாதலின், இவ்வழிமுறை காலகெதியில் முற்றாக செயல்பெறும் என்ற நம்பிக்கையை இது அடிக்கொண்டுள்ளது. இத்தகைய பரிணாமம், வலுவான ஒரு பிரேரணையையும் சர்வதேச பிராந்திய தேசிய மட்டங்களில் அதன் சகல அம்சங்களிலும் சமதைக் கோட்பாட்டினைச் சுறுசுறுப்பாக நடைமுறைப்படுத்துவதையும் வேண்டி நிற்பதோடு அமையாது சமூகத்தின் பாரம்பரிய நாட்டங்களில் மாற்றங்களையும் உண்டாக்குகிறது.

இவை எல்லாவற்றிலிருந்தும் புலனாவது, தேசிய ரீதியான கவனம் பெறும் சர்வதேச மரபொழுங்கன்றி பெண்களின் அந்தஸ்தாகும். சர்வதேச மரபொழுங்கு உண்மையில் முக்கியத்துவம் பெறுவதும், பொருத்தமாய் இருப்பதும் தேசிய சூழ்நிலையில் அனுசரிக்கப்படாத அல்லது கணிக்கப்படாத கோட்பாடுகளை முன்வைக்கும் வரையான ஒரு தேசிய சூழ்நிலையிலேயாகும். எனவே ஒரு நாடு செயலாக்கக் கூடிய ஒரு அடைகதியை உள்ளடக்கும் வரையிலும் அநேகமான தேசிய சூழ்நிலையில் பொருந்தி வரக்கூடிய கோட்பாடுகள் மீதான சர்வதேச அபிப்பிராயத்தின் சிறிதோ பெரிதோவான சில, ஒற்றுக்கோட் கருத்தை குறித்துக் காட்டும் வரையில் இது முக்கியத்துவமும் பொறுத்தப் பிராப்தியும் பெறுகிறது. மனித குடும்பத்தின் அபிவிருத்தியின் இன்றியமையாத முக்கிய திறவு காரணியாகவும் ஒரு நாட்டின் குடித்தொகையில் அரை பங்கினைக் கொண்டதாயும் பெண்ணினம் இருப்பதால் சகல மக்களினதும் முன்னேற்றத்திற்குப் பங்காற்றுதற்கு பெண்களது அந்தஸ்தினை விருத்தி செய்தற்கேற்ற வழிமுறைகளை தேசீய ரீதியாக நடைமுறைப் படுத்தலும், தேசிய நடவடிக்கைகளும், தேசிய சிந்தனைகளும் அபிப்பிராயங்களுமே வேண்டியுள்ளன. இதுவே இறுதிப் பரிசீலனையில் ஈடுசெய்ய முடியா நடவடிக்கையுமாகும். ஆனால் இதிலும் அறுதியிட்டுக் கூற வேண்டியது என்னவெனில் இலங்கைப் பெண்களின் தேசிய அந்தஸ்தையும் தேசிய நலனில் ஆதாரபூர்வமான சமன்பாட்டையும் மனதில் வைத்து தேசீய சூழ்நிலைக் கேற்பவே நாம் இயங்க முடியும் என்பதோடு இயங்கவும் வேண்டுமென்பதாம்.

# சமூக சுகாதாரமும் அபிவிருத்தியும்

— பேராசிரியர். பிரியானி ஈ. சொய்ஸா
(குழந்தைகள் சிகிச்சைப் பேராசிரியர்-இலங்கைப் பல்கலைக் கழகம்)

அண்மைக் காலமாக, பல நாடுகளிலும் சுகாதார சேவை அபிவிருத்தி யடைந்து வருகின்ற போதிலும், உலக சுகாதாரத்தைப் பொறுத்தளவில், அது சீர்கெட்டே வருகிறது. குடிசன விருத்திக் கேற்ப, சுகாதார தேவைகளை பெரும்பாலான நாடுகள் சமாளிக்க முடியாதனவாயிருக்கின்றன. வளர்முக நாடுகளிலும், மூன்ரும் உலக நாடுகளிலும் வாழுகின்ற மக்களுக்கு வழங்கப்படும் சுகாதாரப் பணிகளையிட்டு, பரந்த அடிப்படையில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. நவீன சுகாதார நுணுக்கங்களால் சலுகை குறைந்த பிராந்தியங்களுக்கு எதுவித ஆதாயமும் இல்லை. மக்களின் வாழ்க்கை நிலையையும், வாழ்க்கை முறையையும் கருத்திற் கொண்டு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த நிலையில்தான் சமூக அபிவிருத்தி, சமூக சுகாதாரம் என்பனபற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிரோம். வாழ்வின் உயர் ஸ்தானத்தில் இருக்கும் மக்கள் மட்டுமல்ல, சமூகத் தொண்டர்களும் நோய்க்கு சிகிச்சை யளிப்பதைக் காட்டிலும், சுகாதாரத்தைப் பேணுவது பற்றியே தமது முழுக் கவனத்தையும் செலுத்தக் கடமைப் பட்டவர்களாவர். முழு ஜனத்தொகையின் வைத்திய பராமரிப்பின் முழுச் சித்தாந்தமும் இதுவே! சகல மட்டத்திலும், சுகாதாரத்தைப் பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வளர்முக நாடுகளை எடுத்துக் கொண்டால், முழு ஜனத்தொகையின் 75 சத விகிதத்தினர் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களாகவும் பிள்ளைப் பேற்றுக்குரிய பராயத்தையுடைய பெண்களாகவுமே இருக்கின்றனர். எனவே, தாய்மாரையும் குழந்தைகளையும் பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்வது அவசியமாகும்; முழுக் குடும்பத்தினதும் சுகாதாரத்தை பேணும் நடவடிக்கைகளாக, ஆக்கபூர்வமான சுகாதாரப் பணிகள் வியாபிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் அல்லது பிராந்தியத்தின் மக்கள் ஒன்றுசேர்ந்து கூட்டாக, தமது சுகாதாரத் தேவைகளை பிரதிபலிக்கும் பொழுதும், அத்தியாவசிய தேவைகளை வலியுறுத்தி நிற்கும் பொழுதும், சமூகத்தின் சுகாதாரத் தேவைகள் மேலும் விரிவடையத் தொடங்கி விடுகின்றன. எனவே இந்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக, அவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து தீவிரமாக செயல்படும் பொழுது அவை செயல் உருப்பெற்று விடுகின்றன.

ஆம்! சுகாதாரம் என்பது ஒவ்வொருவரினதும் கருமமாகும். சுருங்கச் சொல்லப்போனல், சுகாதாரமும் அபிவிருத்தியும், பல்வேறு வழிகளிலும் ஒன்ரோடு ஒன்று பின்னிப் பிணைந்து நிற்கின்றன; அபிவிருத்திப் பணிக்கு சுகாதாரம் உறுதுணையாக நிற்கிறது. சுகாதாரம் திருப்திகரமாக இல்லாத விடத்து, வேலை பாதிக்கப் படுகிறது; மக்களின் ஒழுக்க நெறியும் உற்பத்தியும் சுகாதாரத்தால் விருத்தி படைகிறது; சுகாதாரம் நல்லாயிருக்குமிடத்து, மக்கள் குடியேற்றம் இல்லாத பகுதிகளிலும், குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. சமூக பொருளாதார விருத்திக்கும் நல்ல சுகாதாரம் வழிகாட்டி நிற்கிறது. இதனல், பிணி, மரணம் முதலிய சம்பவங்களும் குறைந்து வருகின்றன. மக்கள் நல்ல தேகாரோக்கியத்துடன் திகழவும், வளத்தைப் பெருக்கவும் சுகாதாரத்தைப் பேணவும், பொருளாதார விருதி உதவுகிறது. எனவே, சமூக சுகாதாரமும், சமூக அபிவிருத்தியும் ஒன்ரோடு ஒன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பது கண்கூடு. சமூக சுகாதார நடவடிக்கைகள் மக்களின் சூழல் மீது கூடுதல் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் உதவுகிறது.

மக்களின் உடல் நலனைப் பேணுவதற்கு சுத்தமான, பாதுகாப்பான தண்ணீர் அவசியம். சுத்தமான நீர் இல்லாதவிடத்து அதனுல் ஏற்படும் விளைவுகள் எவ்வளவு பாரதூரமானவை தெரியுமா? கிராம மட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்ட பெருந்தொகையான சுகாதார ஊழியர்கள், சுத்தமான, பாதுகாப்பான நீரின் அவசியம் பற்றியும், மலசலகூட வசதிகளின் நவீன சுகாதாரத் தேவைகள் பற்றியும் மக்களுக்கு போதிக்க முடியும். நம் முன்னே இருக்கும் பெரும் பணி, மக்கள் மத்தியில் சுகாதாரமாக அவர்கள் வாழவேண்டியதன் அவசியத்தை தட்டி எழுப்புவதும், இதற்காக அவர்கள் தாமாகவே முயற்சி எடுத்து வாழப் பழகும் சூழ்நிலையை ஏற்படுத்துவதுமேயாகும்.

நல்ல சுகாதாரத்தைப் பேணுவதற்காக, மீண்டும் மிக எளிமையான கிராம வழக்கங்களை மீண்டும் கையாள்வதற்கு, அவை பழைய பத்தாம்பசலி நடவடிக்கையாக இருந்த போதிலும், கங்கணம் கட்டப்படுகின்றன. எளிமையான தொழில் நுட்பங்களை, பெருமளவு அங்கத்தினர்களுக்கு குறுகிய காலத்தில் பயிற்சியளிப்பதானது, ஒரு சில தொழிற்துறையாளருக்கு சிக்கல் மிகுந்த தொழில் நுட்பங்களை நீண்டகாலத்துக்கு பயிற்சி யளிப்பதிலும் சிறப்பான இலட்சியமாகும். இதனுல் கிடைக்கும் பயனும் கூடுதலானதாகும். கிராமப்புறப் பெண்களின் வேலைக் கடமையை குறைப்பதற்கு, கூடுதல் சாத்தியமான, துரித வழியொன்று உண்டு. தமது வழமையான சிரம சாத்தியப் பணிகளான, மா அரைப்பது, விறகு தேடுவது, தண்ணீர் மொண்டு வைப்பது, சமைப்பது முதலானவற்றிலிருந்து கிராமப் பெண்களுக்கு விடுதலை பெற்றுச் கொடுத்தால் இவர்கள், தமது பிள்ளைகளுடன் கூடுதல் நேரத்தை செலவிட முடியும், தமது உடல் நலனைப் பேணுவது குறித்தும், போஷாக்குச் சத்துகளை மீட்பது குறித்தும் இவர்கள் நன்கு அறிந்து கொள்ளவும் முடியும். அது மட்டுமல்ல, தமது அந்தஸ்தையும், குடும்பத்தின் மத்தியிலும், சமூகத்தின் பார்வையிலும் மேலோங்கச் செய்யவும் இயலும்.

பெரும்பாலான வளர்முக நாடுகள் தமது கல்வித் திட்டங்களை அபிவிருத்தி செய்தும், நவீனமயப்படுத்தியும் வருகின்றன. தேசிய அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்க்கைக்கு இயைவான முறையிலும் கல்வித் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சொற்ப கல்வி ஊட்டி விட்டால், அது அவர்களின் சிறப்பான வாழ்க்கைக்கு உதவுவதுடன், நாட்டின் அபிவிருத்திக்கும் அவர்களை பயன்படுத்த உதவுகிறது.

# பெண்கள்:

## மறுபடியும் சமையலறை நோக்கி?

— ஜான் வெடெக் (சர்வதேச தொழில் ஸ்தாபனம்)

நிகழ்ந்து கொண்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியினால் 7 லட்சம் பெண் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளதாக சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் புள்ளி விவரப் பிரிவு 18 மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா, கனடா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூஸிலந்து ஆகிய நாடுகளிலும் நடத்திய மதிப்பீடொன்றின் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நாடுகளின் தொழிலாளர் தொகையில் பெண்கள் 35 சத வீதமானவர்களே எனினும் மேற்கூறப்பட்ட தொகை மேற்படி நாடுகளின் மொத்த வேலையில்லாதோரின் 40 சத வீதத்தைப் பிரதிபலிக்கின்றது.

**முதலாவது விலக்கப்பட்ட பின் இரண்டாவது அமர்த்தப்படுகிறாள்**

மிகச் சில விதிவிலக்குகளைத் தவிர, பெண்களே முதலில் வேலை நீக்கம் செய்யப்படுகின்றனர். உதாரணமாக 1976 பெப்ரவரியில் சுவீடனில் வேலையில்லாதோர் தொகையில் 50 சத வீதத்துக்கு மேலானோர் பெண்களாவர் — பெல்ஜியத்தில் 1976 மே மாதம் பெண்களில் வேலையில்லாதோர் 14.3 சதவீதமாக இருந்தது. ஆனால் ஆண்களில் வேலையில்லாதோர் 5.3 சதவீதமாகவே இருந்தனர். பிரான்ஸில் 1975 மார்ச்சில் இருந்து 1976 மார்ச் வரை வேலையில்லாதோர் அதிகரிப்பு ஆண்கள் 73,783 ஆகவும் பெண்கள் 109,642 ஆகவும் இருந்தது.

ஜப்பானில் பெருந்தொகைப் பெண்கள் தொழிற் சந்தையிலிருந்து, விட்டுக் கொடுக்கும் முகமாக ''ஓய்வு'' பெறுகின்றனர். இதனால் அவர்கள் தொழிலற்றோர் பட்டியலில் கூட இடம் ம்பெறுவல்லை.

வர்த்தகம் மறுபடியும் தலையெடுப்பதை யடுத்து ஆண்கள் தொழில் புரிய திரும்பும் அதே வேளையில் பெண்கள் வீட்டிலேயே விடப்படுகின்றனர். பல இடங்களில் வேலைக்கமர்த்தப்படுவதில் பெண்கள் இறுதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என சர்வதேச தொழில் தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் மொத்த வேலையில்லாதோருடன் வேலையில்லாத பெண்கள் தொகை ஒப்பிடப்பட்ட போது 1975 ல் 40 சதவீதமாக இருந்த புள்ளிகள் 1976 ல் 46 சதவீதமாக அதிகரித்தது. உண்மையில் வேலையில்லாத பெண்களின் எண்ணிக்கை 60,000 ஆல் அதிகரிக்க வேலையில்லாத ஆண்களின் எண்ணிக்கை 55,000ஆல் குறைந்தது.

தொழில்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதில் பெண்களுக்கெதிரான பாகுபாட்டுக் கொள்கையை இல்லாது செய்வதற்கு சகல துறையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மேற்படி பாகுபாடு இன்னமும் இருந்து கொண்டு செயல்பட்டு வருவதையே இந்தக் கடினமான உண்மைகள் வெளிக் காட்டுகின்றன.

இத் துறையில் முன்னேற்றம் ஏன் இவ்வளவு அற்பமாயுள்ளது?

உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட 14 கட்டுரைகளை உள்ளடக்கிய ''பெண் தொழிலாளர்களும் சமுதாயமும்'' என்ற தலைப்பிலான சர்வதேச தொழில் தாபனத்தின் பிரசுரம் ஒன்று மேற்படி சிக்கல்மிக்க கேள்விக்கு பதிலளிக்க முயல்கின்றது. வேலையில் சமத்துவம் வழங்கப்படாமைக்கு பல்வேறு காரணங்களில் மூன்று காரணங்களை அது குறிப்பாக எடுத்து விளக்குகிறது:

* பால் பாகுபாட்டிலான தொழிற் பிரிகை, இது பெரும்பாலும் சம்பளம், பதவியர்வு போன்றவற்றில் பாகுபாட்டுடன் நிகழ்கிறது.
* பெண் தொழிலாளர்களை நேரடியாகப் பாதிக்கும் விடயங்களில் அவர்களது பேச்சுக்கு மதிப்பின்மை.
* பெண்களின் தொழிற் சக்தியைச் சுரண்டுதலை நிலைபெறச் செய்யும் காலத்துக் கொவ்வாத மனப் போக்குகள்.

**தடைகள்**

பால்பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்ட தொழிற் சந்தையை அடைய இன்று ஆண்களும் பெண்களும் இன்னுமே இரு வேறு பாதைகளை வகுத்துக் கொண்டுள்ளனர். இவர்களுக்கிடையிலான தடைகளை வெற்றி கொள்வதென்பது தனி நபரின் சக்திக்கு அப்பாற்பட்டதாகும் என மேற்படி பிரசுரம் கூறுகிறது.

''பொருத்தமான தொழில்களுக்கு'' பெண்களைத் தேர்ந்தெடுத்தல் பாடசாலைகளிலும் தொழிற் பயிற்சி நிறுவகங்களிலுமேயே ஆரம்பிக்கின்றது. இதன் காரணமாகவே தான், ஆண் பெண் சமத்துவத்துக்காக எவ்வளவோ காரியங்கள் நிறைவேற்றப்பட்ட சுவீடனில் கூட ஆண்கள் 300 வகைத் தொழில்களிலிருந்து தொழிலொன்றைத் தேர்ந்தெடுக்கும் போது பெண்கள் 25 வகைத் தொழில்களிலிருந்து மாத்திரமே தொழிலொன்றைத் தேர்ந்தெடுக்கக் கூடியதாயுள்ளது.

தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்பதிலுள்ள குறைபாட்டோடு கல்வி மற்றும் பயிற்சிக் குறைபாடுகளும் கைகோர்த்து நிற்கின்றன. அண்மைக்கால பொருளாதார வீழ்ச்சியின்போது தொழிலிழந்த பெண்களில் 66.9 சதவீதமானோர் இரண்டாந்தரக் கல்வி நிலை தாண்டிய கல்வியறிவில்லாதவர்கள் என்றும் 48.6 சதவீதமானோர் தமது 16 வயதிலேயோ அன்றி அதற்கு முன்னரோ பாடசாலையிலிருந்து விலகியவர்கள் என்பதும் சமீபத்திய மதிப்பீடொன்றிலிருந்து தெளிவாகியுள்ளது.

தொழிற் பாதுகாப்பைப் பொறுத்தவரை சரிந்து வரும் பாதுகாப்பற்ற தொழில்கள் அல்லது மிகவும் மர்மமான முறையில் சம்பளம் கொடுபடும் தொழில்களே பெண்களுக்குப் பொருத்தமான தொழில்களாக மாறி வருகின்றன. உதாரணமாகக் கூறின் இன்று அவுஸ்திரேலியாவில் தையல் தொழிலைக் கூறலாம். மறுபுறம் பார்க்கின் எதிர்காலத்தில் நல்ல வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படும் தொழில்கள் ''ஆண்களுக்குரிய தொழில்'' களாகக் கருதப்படுகின்றன. கம்பியூடர் தொழில் நுட்பத்தின் ஆரம்ப தினங்களில் பல பெண்கள் கம்பியூட்டர் தரவு தயாரிப்பாளர்களாக செயல்பட்டனர். ஆனால் பின்னர் இத் தொழில் நல்ல சம்பளத்தையும், எதிர்கால வாய்ப்புக்கள் கூடியதாயும் அமைய ஆரம்பித்ததோடு இத் தொழில்கள் பெண்களின் மனதுக்கு பொருத்தமற்ற தொழில் என வருணிக்கப்

படலாயிற்று. பால்பாகுபாட்டின் அடிப்படையிலான இத் தொழிற் பிரிகை, கூடுதல் பொறுப்புக்களையும், கூடுதல் சம்பளத்தையும் கூடுதல் தொழில் திருப்தியையும் தரக்கூடியதான தொழில்களைப் பெண்கள் பெறுவதில் இன்றும் தடையாக அமைவதோடு வேலையில் ஆண் - பெண்களுக்கிடையிலான அசமத்துவத்தை நிலைநிறுத்தவும் உதவுகிறது.

இவற்றில் எல்லாம் மிக மோசமானது என்னவெனில் பொருளாதார வீழ்ச்சி யொன்றின் போது தாக்குப் பிடிக்கக்கூடியதான தொழில்களுக்கு பெண்கள் அறவே பொருத்தமற்றவர்களாகக் கண்டிக்கப்படுவதாகும். மூன்றும் தரத் தொழில்துறையிலும், பகுதி நேர வேலைகளிலும் பெண்களின் உழைப்பை வசதியாகப் பயன்படுத்தும் விடயத்திலும் இது உண்மையாகும்.

**பெண்களுக்கு பங்கின்மை**

சட்டத்துக்கும் செயன்முறைக்கிடையிலும், மேடைப் பேச்சுக்கும் யதார்த்தத்துக்கிடையிலும் விசாலமான இடைவெளி யொன்றுள்ளது. பிரதானமாக இது அசமத்துவத்தைப் போக்குவதற்கான நோக்கம் கொண்ட சமூக கொள்கைகளை உருவாக்குவதிலும் அமுல் நடத்துவதிலும் பெண்களுக்கு எவ்வித பங்கு கொள்ளலுரிமையும் இல்லாமையாகும் என சர்வதேச தொழில் தாபன பிரசுரம் சுட்டிக் காட்டுகிறது.

தங்களைப் பாதிக்கும் தீர்மானம் மேற்கொள்ளும் அமைப்புக்களில் பெண்களின் நேரடிப் பிரதிநிதித்துவம் முக்கியத்துவமற்றதாகவே தொடர்ந்து நிலைக்கின்றது.

புதிய தொழில் மதிப்பீடுகள் தொழில் வகைப்படுத்தல்களை நிறைவேற்றும் சகல குழுக்களிலும் தொழிலமர்த்தல், தொழில் வழிகாட்டல், மீளப் பயிற்சியளித்தல்களுக்குப் பொறுப்பான நிருவாக சேவைகளிலும் பெண்கள் கட்டாயமாக இடம்பெற வேண்டுமென மேற்படி பிரசுரம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

தொழில் உருவாக்கல் கொள்கைகளை வகுக்கும் பொருளாதார திட்டமிடல் அமைப்புக்களிலும் கூட்டு ஒப்பந்தங்களை யிட்டு பேச்சு வார்த்தைகளை நடத்தி முடிவெடுக்கும் தொழிலாளர் — நிருவாக கூட்டமைப்புக்களிலும்

(23ம் பக்கம் பார்க்க)

## பெண்ணடிமைச் சித்தாந்தம்

பெண்ணை அடிமைப்படுத்திய சித்தாந்தங்கள் ஆரம்பக்காலத்திருந்தே பல நாடுகளிலும், நிலவிவந்துள்ளதை இப்பழமொழிகளும், கவிகளும் காட்டுகின்றன. அது இன்று பத்திரிகைகளில் திருமண விளம்பரங்களில் நவீன உருவில் பிரதிபலிப்பதையும் காணலாம்.

**ரஷ்யா:**

—''கோழிக் குஞ்சு பறவையுமல்ல, பபா (விவசாயப் பெண்) மனிதப் பிறவியுமல்ல.''

—''காலை உணவுக்கும் இரவுச் சாப்பாட்டுக்கும் உன் மனைவியை அடி.''

—''நான் இரண்டு பேர்களைக் கண்டேன் என எண்ணினேன். ஆனால் அது ஒரு கணவனும் மனைவியுமே.''

* * * *

**ஜெர்மன்:**

பெண்ணுக்கு தேவதையின் உருவமுண்டு கழுதையின் மனமுண்டு.

பெண் செய்யாத பெரும்பாவம் என்ன?

* * * *

ஓ பெண்ணே! இன்பப் பெண்ணே
ஆணுக்கு உணர்ச்சி தரவே
இயற்கை உன்னைப் படைத்தது.
நீ இன்றி நாங்கள் விலங்குகளே.
உன்னைப் போன்று தோற்றம் தரவே
தேவதைகள் வண்ணம் பூசப்பட்டனரே.
அளப்பரிய பிரகாசம், தூய்மை, உண்மை
நித்தியானந்தம், அமரணீயக் காதல்
சொர்க்கம் பற்றிய எம் நம்பிக்கை
எல்லாம் உன்னிலேயே உண்டு.

— ரி. ஒட்வே

* * * *

ஆணின் காதல் அவன் உயிரையும் உடலையும் பிரிக்குமொன்று
அதுவே பெண்ணின் முழு வாழ்க்கை.
நிதானத்திலும், படைகளின் முகாமிலும்,
கோயிலிலும், கப்பலிலும், வர்த்தகத்திலும்
வாளெடுப்பதிலும், பட்டங்கள் சூடுவதிலும்,
பூமாலைகள் சூடப் பெறுவதிலும், பெருமை, புகழ்
இலட்சியங்களைப் பரிமாறி இதயங்களைத் திருப்தி கொள்ளச் செய்வதிலும்
ஆண் சாதிக்கலாம்.
வளங்கள் இத்தனையும் அவனிடம் உண்டு. ஆனால்
அவன் மறுபடியும் காதல் செய்வானாகின்
இவ்வளவு சாதனையும் இல்லாது விடும்.

— பைரன்.

* * * *

கணவன் எப்படி, மனைவி அப்படி, நீ
ஒரு கோமாளியுடன் இணைந்துள்ளீர்.
அவனது குணங்களின் சேர்க்கை உம்மை
கீழே இழுத்து வீழ்த்தும்
அவனது காதலுணர்வின் புதிய விசை
முடிந்த பின்னர் உன்னை அவன்
நாயிலும் சற்று சிறப்பாயும் குதிரையிலும் சற்றுக் கூடுதல் அன்பாயும்
நடத்துவான்.

— டெனிஸன்

**சீனா:**

''நல்ல பெண்கள் இருவர் உள்ளனர்;
ஒருத்தி இறந்தவள், மற்றவள் இன்னுமே பிறக்காதவள்.''

* * * *

பெண்ணாயிருத்தல் எத்துணை துயரம்,
இழிவாய் பூமியில் எதுவுமே இல்லை.
சொர்க்கத்திலிருந்து வீழ்ந்த தெய்வங்களே என
ஆண்பிள்ளை பிறந்தால் வாயிலில் தவங்கிடப்பர்
அன்னவர் இதயங்கள் சமுத்திரம் நாலையும்
ஆயிரம் மைல் தூரத் தூசி புயலையும் தாங்கிட வலிமை பெறும்.
பெண்ணொருத்தி பிறந்தாலோ மகிழ்வோர் எவருமில்லை,
குடும்பத்திற்கு அவளால் நிறைவது எதுவுமில்லை.

— பூ ஹுவான்

* * * *

**தமிழ்:**

—'பெண்புத்தி கேட்பவன் பேதையன்'

—''எண்ணிலும் எழுத்திலும் எத்துணை திறமை காட்டினும் பெண்ணின் தீர்ப்பு தரத்தில் குறைவே.''

—''செல்வம் வந்துற்றால் அடிமையும் பெண்பிள்ளை பெறுவாள்.''

—''திக்கற்றோனுக்கு பெண் குழந்தை பிறந்தது போல்'' (துயரத்தின் ஆழத்தைக் காட்டுகிறது)

* * * *

**பிரிட்டன்:**

– ஒரு பெண், ஒரு நாய், ஒரு அக்குரோட்டு மரம்,
இம் மூன்றையும் எவ்வளவு அடிப்பீரோ
அவ்வளவுக்கே அவை சிறந்து விளங்கும்.

* * * *

—இகழப்பட்ட பெண்ணைப் போல் பயங்கரம் நரகத்தில் வேறெதுவுமில்லை.
தவறே! உன் பெயர்தான் பெண்.

— ஷேக்ஸ்பியர்

* * * *

### நவீன உருவில் பெண் அடிமைச் சித்தாந்தம்

யாழ்ப்பாண, ஹிந்து, வேளாள குடும்பத்தைச் சேர்ந்த, கணக்காளர் சீதனத்துடன் 25 வயதுக்குள் மணமகள் தேடுகிறார். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

கரவா இனத்தைச் சேர்ந்த கத்தோலிக்க தாயார், குடும்பக் கலைகளில் முற்றாகத் தேர்ந்த தனது மகளுக்கு மணமகன் தேடுகிறார். 50,000 ரூபா நகைகளும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் ரொக்கமும் சீதனமாக வழங்கப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

# பெண்களும் தொழில்களும்

— டாக்டர். குமாரி ஜயவர்தன (விரிவுரையாளர் — இலங்கைப் பல்கலைக் கழகம்)

பெண்களுக்குரிய இடம் இல்லமே என இன்னுமே பலரும் அடிக்கடி கூறுகின்றனர் எனினும் உண்மை என்னவெனில் அவள் குடும்பத்தைக் கட்டிக் காப்பவளாகவும் உற்பத்தித் தொழிலாளியாகவும் இரு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள்.

பெண்களை வீட்டோடு அமர வைத்திருக்கும் தத்துவம் செல்வந்தக் குடும்பங்களில் பெண்கள் சோம்பலாயிருத்தலுக்கு ஊக்கமளிக்கப்படுவதன் மூலமும், பெண்கள் வேலை செய்யாதிருந்தால் தமது குடும்ப கௌரவம் அந்தஸ்து மேலும் விரிவு படுகின்றது என்ற தவறான பெறுமான உணர்வின் மூலமும் மாத்திரமே நிலைத்து வருகின்றது.

வீட்டுக்கு வெளியே பெண்களின் வேலைகளின் தன்மைகள் பொருளாதார அடிப்படையிலான மாற்றங்களுக்கேற்ப மாறுபட்டுள்ளன. காலனித்துவத்துக்கு முந்திய காலப்பிரிவில் பெண்கள் ஆண்களோடு விவசாயத்திலும், குடிசைக் கைத்தொழில்களிலும் வேலை செய்தனர். நெற்பயிர்ச் செய்கையோடு தொடர்புடைய பாரம்பரிய பணிகள் பலவற்றை அவர்கள் செய்து வந்தனர். காலனித்துவத்தின் வருகையோடு பெருந் தோட்டங்களிலும், கைத்தொழில் துறைகளிலும் பெண் தொழிலாளரின் தேவை ஏற்பட்டது. பெண்களையும் பிள்ளைகளையும் வேலைக்கமர்த்தி தமது செலவுகளைக் குறைத்துக் கொள்ளும் 19 ம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் சுரண்டல் முறை காலனித்துவ நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## குறைச் சம்பளத்திற்கான உழைப்பு

இலங்கையிலும் ஏகாதிபத்தியத்தினாலேயே குறைச் சம்பள உழைப்புத் தத்துவம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. உதாரணமாக 19 ம் நூற்றாண்டில் கொழுந்து பறித்தல், இரப்பர் தோட்டங்களில் வேலை செய்தல் போன்றவற்றுக்காக பெருந் தொகையான பெண்களே வேலைக்கமர்த்தப்பட்டதோடு தினம் 25 சதமே சம்பளமாக வழங்கப்பட்டது. பெருந் தொகை லாபத்தை அவர்கள் பிரிட்டனுக்குக் கடத்தினர் — கோபி உற்பத்தித் தொழிற்சாலைகளில் 20,060 க்கு மேற்பட்ட பெண்கள் இந்த குறைச் சம்பளங்களில் வேலைக்கமர்த்தப்பட்டனர். தேயிலைப் பெட்டிகளில் அடைக்கும் தொழிற்சாலைகள், கொப்பரா ஆலைகளிலும் பெண்களே வேலைக்கமர்த்தப்பட்டனர்.

உள்ளூர் முதலாளித்துவ வாதிகளும் தமது நிறுவனங்களிலும் பெண்களை குறைந்த சம்பளத்தில் வேலைக்கமர்த்தினர். காரீயத் தொழிற்சாலைகள், பாக்கு ஏற்றுமதி நிறுவனங்கள் தும்பு ஆலைகள் என்பவற்றில் பெருந் தொகையான பெண்கள் குறைந்த சம்பளத்தில் அமர்த்தப்பட்டனர்.

இந் நாட்டின் உழைக்கும் பெண்களைப் பொருத்தளவில் நிலைமையில் பெருமளவு மாற்றமெதுவுமில்லை. இன்றுமே விவசாய, பெருந்தோட்டத் துறைகளில் பெண்கள் குறைச் சம்பளத்தில் தொடர்ந்து வேலைக்கமர்த்தப்படுகின்றனர். ஏகாதிபத்தியம், வெளிநாட்டுக் கலப்புக்களினாலான பல் தேசிய கூட்டுத்தாபனங்கள் மூலம் எமது பொருளாதாரத்தில் இன்னும் தனது பிடிப்பைக் கொண்டுள்ளதையே இது காட்டுகிறது. 1971 ன் குடிசன மதிப்பீட்டின்படி வேலையிலமர்ந்துள்ள பெண்களில் 42 சத வீதத்தினர் (343,000) தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்களில் தொழிலாளிகளாக உள்ளனர். 20 சத வீதத்தினர் விவசாயத்துறையிலும் மற்றும் 20 சத வீதத்தினர் ''சேவைத்துறை'' களில், கல்விச் சேவை சுகாதார சேவைகளிலும், வீட்டு வேலைக்காரர்களாகவும் உள்ளனர். கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் 12.7 சத வீதத்தினர் (103,000) ஆவர். இவர்களுள் 77,000 பேர் ஜவுளித் தொழிலும், 14,000 பேர் உணவு தயாரிப்புத் துறையிலும் ஈடுபட்டுள்ளனர். வீட்டு வேலை யாட்களாக 36,000 பெண்கள் உள்ளனர். சட்ட விரோதமாக வேலைக்கமர்த்தப்படும் 12 வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகள் பற்றி இக் கணக்கெடுப்பில் இல்லை. மேலும் இவ் வீட்டு வேலையாட்களுக்கான வேலை நேரம், சம்பளம் பற்றி சட்டுப்படுத்தும் சட்டங்கள் எதுவுமே இல்லை. இவர்களுள் சிலர் சம்பளமே இல்லாமலும் சிலர் மிகக் குறைந்த சம்பளத்துடனுமே வேலை செய்கின்றனர்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டம் தொழில் துறையில் பால் பாகுபாடு காட்டப்படலாகாது எனக் கூறினும் அதிலிருந்து தப்பிக் கொள்வதற்கான ஒரு பகுதியையும் சேர்த்துக் கொண்டுள்ளது. சிலதுறைத் தொழில்கள் பெண்களுக்காக ஒதுக்கப்படலாம் என அது கூறுகிறது. நிருவாக சேவை, எழுதுநர் சேவைகளுக்கு 25 சத வீத பெண்களே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இது தவிர தொழில் வகையிலும் பெண்களுக்கெதிராக பாகுபாடுகள் காட்டப்படுகின்றன. புனர் நடுகை, கொழுந்து பறித்தல், ரப்பர் பால் எடுத்தல், தும்பு தட்டுதல், நெசவுத் தொழில் போன்றவை பெண்களுக்கான பாரம்பரியத் தொழில்களாகக் கருதப்படுகின்றன. உல்லாசப் பயணத்துறை விருத்தி செய்யப்படுவதையடுத்து உபசரணை, களிப்பூட்டல், விபசாரம் என்பன, பெண்களுக்கான பாரம்பரியத் தொழில்களெனக்கருதப்படவும் கூடும்.

பெண்கள் குறிப்பாக நிருவாகத்துறையில், தொழில்நுட்ப பொறியியல் துறைகளில் அவ்வளவாக அமர்த்தப்படுவதில்லை. தபால் சேவை, போக்குவரத்து, மின்சாரம், வாயு மற்றும் நீர்ச் சேவைகளில் பெண்கள் முற்றாகவே தவிர்க்கப்பட்டுள்ளனர். வைத்தியத்துறை, ராஜதந்திரத் துறை, சட்டத்துறைகளில் பெண்கள் முன்னேற்றம் கண்டுள்ளபோதிலும் ஆண்களே இவைகளில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

## அசமத்துவ சம்பளம்

பெண்களுக்கு சம சம்பளம் வழங்காது பாகுபாடு காட்டப்படும் முக்கிய துறை பெண் தொழிலாளர்கள், கிராமிய பெண்கள் சார்ந்த துறைகளாகும். மத்திய வகுப்புத் தொழில்களில் அவர்கள் சம சம்பளம் பெறுகின்றனர். அரசாங்க சம்பள சபைகள் தொழிலாளருக்கு நிர்ணயிக்கும் சம்பளத் திட்டத்தில் கூட ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறு என பாகுபாடான சம்பளங்கள் காட்டப்படுகின்றன. 1976 மே மாதம் பிரசுரிக்கப்பட்ட தொழில் வர்த்தமானியில் சம்பளம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

| தொழில் | ஆண் | பெண் |
|---|---|---|
| செங்கல், ஓடு உற்பத்தி .. | 5.90 | 4.84 |
| தும்பு மெத்தை, பிரிஸல் தும்பு (ஏற்றுமதி வர்த்தகம்) .. | 5.35 | 4.42 |
| தீப்பெட்டி தயாரித்தல் .. | 5.20 | 4.75 |
| காரீயத் தொழில் .. | 6.53 | 4.43 |
| ரப்பர் ஏற்றுமதித் தொழில் .. | 6.25 | 5.59 |

இவ்வித பாகுபாடுகள் தவிர பெண்கள் தமது தொழில் சுமையோடு தமது இல்லங்களிலும் ஆண்களால் சுரண்டப்படுகின்றனர். பெண்களுக்கு சில வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென சட்டம் கூறுகின்ற போதிலும் வேலைக்கமர்த்துவோர் அவற்றை அவ்வளவாக கவனிப்பதில்லை.

நாட்டின் சில முக்கிய பொருளாதாரத் துறைகள் பெண்களின் உழைப்பிலேயே தங்கியிருக்கின்றதெனினும் பெண்கள் புறக்கணிக்கப்படுவது மிகவும் தெளிந்த உண்மையாகும். எனவே தாங்கள் எவ்வெத் துறைகளில் அடக்கியாளப்படுகின்றனர், இன்னும் எவ்விதம் சுரண்டப்படுகின்றனர் என்பதை வெளிக்காட்டும் அவசரக் கடமை அவர்களுக்குளது. தமக்கெதிராகக் காட்டப்படும் பாகுபாடுகளுக்கு எதிராகப் போராடவும் சம வேலைக்கு சம சம்பளம் கோரவும் புதிய துறைகளில் பயிற்சிபெற கூடுதல் வாய்ப்புக்களைக் கோரவும், தொழிற் சங்கத் துறைகளில் கூடுதல் பங்குபற்றவும் நாட்டின் பொருளாதார விருத்தியில் கூடுதலாகவும், முழுமையாகவும் பங்குபற்றவுமுள்ள தமது உரிமைகளை அவர்கள் உணரச் செய்தல் அவசியமாகும்.

## பெண்களும் வேதனமும் இல்லமும்

தமது பிள்ளைகளைப் பேணுவதற்காக வேண்டி வேலைக்குச் செல்லாது வீட்டிலிருக்கும் தாய்மார்களுக்கு ஒரு ஒழுங்கான சம்பளம் வழங்கப்பட வேண்டுமென பெரும்பான்மையான பிரெஞ்சு மக்கள் விருப்பம் கொண்டுள்ளதை. ''ஜோர்ஸ் டி. பிரான்ஸ்'' எனும் சஞ்சிகை, குடும்பங்களின் பிரச்சினைகள் குறித்து நடத்திய ஆய்விலிருந்து கண்டுள்ளது. விடுக்கப்பட்ட கேள்வியும் கிடைக்கப் பட்ட பதில்களின் முடிவுகளும் கீழே தரப்படுகின்றன.

கேள்வி: தமது பிள்ளைகளைப் பேணுவதற்காக இல்லத்திலேயே தங்கி நிற்கும் தாய்மார்களுக்கு அரசு ஒழுங்கான சம்பளம் வழங்குமாயின் அந்த யோசனையை ஏற்றுக்கொள்வீரா? அல்லது எதிர்ப்பீரா?

| | கேள்வி விடுக்கப் பட்ட மக்கள் கூறு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| இணக்கம் | 81 | 82 | 80 |
| எதிர்ப்பு | 14 | 13 | 15 |
| கருத்து இல்லை | 5 | 5 | 5 |

# சமூக நோக்குகளும், சமூக அரசியல் பங்காற்றலும்

— டாக்டர் ஹேமா குணதிலக (விரிவுரையாளர் இலங்கைப் பல்கலைக் கழகம்)

மாதருக்கு எதிரான பாகுபாடு எமது சமூக, பொருளாதார, கலாசார அமைப்புகளில் வேரூன்றியுள்ளது. இம் மூன்று துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தாது வெறும் சட்டமூல மாற்றங்களை மட்டும் கொண்டு வருவது மாதரது அந்தஸ்தில் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. மனச்சாட்சி உந்துதல் நடவடிக்கை மட்டுமே இம் மாற்றங்களை ஏற்படுத்துவதில் பெருமளவுக்கு உதவலாம்.

இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் அதன் நிலப்பிரபுத்துவ, குடியேற்றவாதிக்க முதலாளித்துவக் குணம்சங்களோடு சமூக, கலாசாரத் துறைகளில் மாதருக்கான விடுதலையை ஏற்படுத்துவது கடினமான காரியமாகும். பல்வேறு வரலாற்று அனுபவங்களிலிருந்து தோன்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தப்பெண்ணம், நோக்குகள், பெறுமானங்கள், வழக்கங்கள் ஆகியவற்றிற்கெதிரான ஒரு போராட்டம் இதுவாகும். பெண்கள் சில கோட்பாடுகளை ‘இயற்கையானவை’ என ஏற்றுக்கொள்ளப் போதிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் ஆண்கள் ஏற்பாடு செய்த ஒழுக்கக் கோவைகள் வெளிப்படையான அடிப்படை நியாயத்தை வழங்குகின்றன.

ஒரு குடும்பத்திற்கு கணவனே தலைமை தாங்குகின்றான். அதில் பெண்ணிற்கு முக்கிய இடமோ எதையும் தீர்மானிக்கும் உரிமையோ கிடையாது. ஒரு பெண் அக் குடும்பத்தில் தொட்டில் முதல் சுடுகாடு வரை பெற்றோருக்கு ஒரு பெண்ணாகவோ கணவனுக்கு ஒரு மனைவியாகவோ மகனுக்கு ஒரு விதவையாகவோ அடிமையாகவோ அநேகமாக வாழ்கிறாள்.

பாரம்பரிய கட்டுக்கதைகளால் ஆட்சி பெறும் சில கோட்பாடுகளே பெண்களின் கீழ்மை நிலைகளை நிறுவுகின்றன. உதாரணமாக ஒருத்தி பெண்ணாகப் பிறப்பது அவள் முற்பிறவியிலே செய்த பாவத்தின் பயனென்கின்றனர் இன்று கூட ஒரு பெண் பிள்ளையைப் பெறுவது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒன்றல்ல நிலத்தைப் பெருக்குதல், துணிமணிகளைத் துவைத்தல் போன்ற சில வீட்டு வேலைகளை ஆண்களைக் கொண்டு செய்வித்தல் பாவகரமான காரியமாகவே கொள்ளப்படுகிறது.

பெண்களைப் பொறுத்த மட்டில் அவர்களைச் சுற்றி பல கட்டுக் கதைகளும் மூடக் கோட்பாடுகளும் நிறைந்துள்ளன. இதிலுள்ள துன்பகரமான காரியமென்னவெனில் இப் பெண்களே தங்கள் மனிதாபிமானமற்ற நிலைகளை உணர்வதில்லை. அவர்கள் எந்தவிதக் கேள்வியுமின்றி இந்த அநியாயங்களை ஏற்றுக் கொள்கிறார்கள் அல்லது பாராமுகமாக இருந்து விடுகிறார்கள். இக் கட்டுக் கதைகள் சில, பெண்களென்றால் அறிவு குறைந்தவர்கள், உளவியல் ரீதியாகப் பலவீனமானவர்கள், உணர்ச்சியில் சமன்பாடற்றவர்கள், நியாயவாதம் தெரியாதவர்கள், நம்பற்கு அருகதையற்றவர்கள் என்றெல்லாம் கூறுகின்றன. பெண்களுக்கு மிகக் குறைவாக கல்வி, தொழில், சமூக கலாசாரச் சந்தர்ப்பங்களை வழங்கியுள்ள மனித சமுதாயத்தினால் இவ்வேற்றத் தாழ்வுகளெல்லாம் உண்டாக்கப்பட்டனவே யன்றி பெண்களோடு கூடப் பிறந்தவையல்ல. எனவே இவ் வேற்றத் தாழ்வுகள் பெரும்பாலும் கலாசார வமைப்புகளின் விளைவுகளேயாம். பெண்ணாக ஒழுகுதல் போன்ற பெண்களுக்கான ஒழுக்கக் கோவைகள் சமுதாயத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை. பெண்ணொருத்தி கூர்மையாகவும் வலிமையாகவும் சுயமுனைப்பு அற்றவளாகவும் அதே போதில் மிகவும் பணிவுடையவளாகவும் பெண்மைப் பாங்கானவளாகவும், மிருதுவாய் அச்சம், மடம், நாணம் போன்ற குணங்கள் உள்ளவளாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறாள்.

நிலப் பிரபுத்துவ சமுதாயத்தின் மிச்ச சொச்சங்களான சீதன முறையும் பேசிச் செய்யும் விவாக முறையும் இன்றும் நிலவுகின்றன. அண்மைக் காலங்களில் இச் சீதன முறை யாழ்ப்பாணத்தில் புதிய ஒரு பரிணாமத்தை யெடுத்துள்ளது. யாழ்ப்பாண சமுதாயத்தில் சீதனத்துடன் கூட ‘இனாமாக’ அல்லது ‘சந்தோஷமாக’ ஒரு தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. (சீதனமென்பது புதுமணத் தம்பதியர்க்கு நகையாகவோ, வீடாகவோ, நிலமாகவோ, பணமாகவோ அவர்களது உபயோகத்திற்காகக் கொடுக்கப்படுவது. இனாம் என்பது மாப்பிள்ளையின் சகோதரியை மணமுடித்துக் கொடுப்பதற்காக மாப்பிள்ளையின் தந்தையால் பணமாகவே கோரப்படும் ஒன்று),

இதிலுள்ள மிக நவீனமான திருப்பம் என்னவெனில் இச்சீதனம் அல்லது இனாம் அந்நிய செலாவணியிலேயே கொடுக்கப்பட வேண்டும் என்று கோரப்படுவதே.

இதிலுள்ள முக்கிய அம்சமென்னவெனில் பெண்கள் என்னதான் படித்து ஒரு மருத்துவ கலாநிதியாகவோ, ஒரு எந்திரியாகவோ, ஒரு பட்டதாரியாகவோ வந்தாலும் அவர்களது படிப்பு சீதனத்தில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. அப்பெண்ணின் உழைப்பாற்றலுக்குத் தக்கதாக சீதனத்தில் எந்தத் தொகையும் குறைக்கப்படுவதில்லை.

இம் மனிதாபிமானமற்ற நிலை சட்டத்தினால் மட்டும் தீர்க்கப்படக்கூடிய ஒன்றல்ல. இந்தியாவில் 1961 ம் ஆண்டு தொடக்கம் சீதனத்திற் கெதிரான சட்டமுண்டு. ஆனால் இதனால் கிடைத்த பலனோ மிகக் குறைவே எனினும் இலங்கையைப் பொறுத்தளவில் தனியார் மூலதனக் கட்டுப்பாடு, வீட்டு உச்சவரம்பு, காணிச் சீர்திருத்தம் போன்றவை சீதனத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கையைப் போன்ற ஒரு உயர்ந்த கல்வியறிவுள்ள சமுநாயத்திலே இத்தகைய தீமைகளில் மூழ்குவது வெட்கப்பட வேண்டிய ஒன்றென்ற எண்ணத்தை பகுத்தறிவுள்ள மக்கள் மத்தியில் ஏற்படுத்தி சட்டச் சீர்திருத்தங்களுடன் ஒரு நல்லெண்ணத்தையும் உருவாக்க வேண்டும்.

சமூகச் சடங்குகளிலும் விரதங்களிலும் கூட பெண்களுக்கு எதிராக ஏற்றத் தாழ்வுகள் காண்பிக்கப்படுகின்றன. உலகத்தில் உள்ள அநேகமான சமயங்கள் ஆரம்பத்தில் சிறு அளவுக்காவது பெண்கள் சமத்துவத்தைக் கணித்து வந்துள்ள போதிலும் பிற்காலத்தில மதக் கட்டுக்கோப்பு

கள் பெண்களைக் குறைத்தே கணித்துள்ளன. புத்தம், இந்து, இஸ்லாம் போன்ற பிரபல மதங்களில் சில கிரியைகளின் போது ஆண்களைப் போலவே பெண்களும் சமதையாகப் பங்குபற்ற அனுமதியளிக்கப்படுவதில்லை. காரணம் பெண்கள் துடக்குள்ளவர்கள் என்ற ஒரு புனைகதை நிலவுவதே. உதாரணமாக தேவாலயங்களில் பெண்கள் பொங்கலிட அனுமதிக்கப்படுவதில்லை. இலங்கையின் சில பாகங்களில் பெண்கள் சூட்டுக்களத்திற்குள் கூட அனுமதிக்கப்படுவதில்லை. காரணம்; அவர்கள் துடக்குள்ளவர்கள் என்றும் அடுத்த போகத்தில் விளைவு குறைந்து விடும் என்றும் அஞ்சப்படுவதே.

பெண்களும் வெகு சுலபமாக மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடுப்பவர்களாயுள்ளனர். இம்மூட நம்பிக்கைகள் திருஷ்டி முதலிய மேல்வாரி விஷயங்களைக் கண்டு அஞ்சுவதைப் பிரதிபலிக்கின்றன. அவர்களது கண்மூடித்தனமான நம்பிக்கைகள் விஞ்ஞான அறிவுக்கு புறம்பான பில்லி சூனியம் செய்வினை போன்றவற்றைக் கண்டு அஞ்ச வழிவகுக்கின்றன. பிசாசுகளால் பெண்களே இலகுவாகப் பிடிக்கப்படுகிறார்கள் என்றும் நம்பப்படுகிறது.

முதலாளித்துவ ஒழுங்கமைப்புகளில் உள்ள பொதுசனத் தொடர்பு சாதனங்கள் பெண்களது மாறிவரும் இயக்க நாட்டங்களையும் பிரதிபலிக்காது அவர்களைப் பாலியற் பொம்மைகளாகவோ, விளையாட்டுப் பொருட்களாகவோ கருதும் தரக் குறைவான தும் இடைஞ்சல் கொடுப்பதுமான ஒரு தோற்றத்தையே சித்திரிக்கும் பாரம்பரிய வெறுப்புகளுக்கும் நாட்டங்களுக்கும் உரமூட்டி வருகின்றன. ஒரு சமுதயத்தின் நாட்டங்களையும் பெறுமானங்களையும் தீர்மானித்து சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதில் பொதுச்சனத் தொடர்பு சாதனத்தின் பங்கு மிகப் பாரியது. எனவே பொதுசனத் தொடர்பு துறையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்போர் பெண்களது அபிவிருத்திக்கு தடையாயின்றுமிருக்கும் நாட்டவியல், கலாசாரக் காரணிகளை யகற்ற உதவியும், பெண்களது உண்மையான செயலாற்றல் மிக்க உருவை எடுத்துக் காட்டியும் ஒரு பொது மக்கள் நல்லுணர்வை வளர்க்க வேண்டும்.

### சமூகப் பங்கு கொள்ளுதல்கள்

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற சகல இனத்தவர்களையும் கொண்ட கிராமப்புறங்களின் கீழ்மட்ட சமூக வர்க்கங்களிடையே பொருளாதார சமூக கலாசாரத் துறைகளில் பெண்களின் பங்குகொள்ளுதல்கள் அதிகமாக இருந்திருக்கின்றனவென்பதை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. சமூக, கலாசாரத் துறைகளில் மட்டுமன்றி ஏனைய துறைகளில் ஆண்களைப் போலவே பெண்களும் சமதையாகப் பங்கு கொண்டுள்ளனர். இவ் வர்க்கத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் தனியாகவே நடமாடி கிராமங்களில் இளம் ஆண்களுடனே நீச்சலுக்குக் கூட செல்வதுண்டு. கல்வியில் சம சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் நகரங்களில் சினிமா மடுவங்களிலோ நாடக அரங்குகளிலோ, ஏனைய சமூக கலாசார நடவடிக்கைகள் நடக்கும் இடங்களிலோ மிகக் குறைந்த விகிதாசாரமான பெண்களே பங்கு கொள்கின்றனர். இந்த நாட்டில் உயர்மட்ட வர்க்கத்தினரிடையே இத்தகைய ஒரு திணிப்பை ஏற்படுத்தி பெண்களைப் படியிறக்கி அதைக் கொழும்பிலிருந்து ஏனைய வெளியிடங்களுக்கு பரப்பி வைத்த பெருமை 19 ம் நூற்றாண்டின் விக்டோரிய சிந்தனையையே சாரும். இன்று தேவைப்படுவது 19 ம் நூற்றாண்டை அடுத்த ஐரோப்பிய நடுத்தர வர்க்கத்தின் பெறுமானங்களிலிருந்து தற்போதைய நடுத்தர வர்க்கத்துப் பெண்களை முற்றாக விடுவிப்பதாகும். இதற்கு ஒரு பெண் தன்னைத்தானே உணர்ந்து தன்னை அடக்கியொடுக்கிய சமூக பொருளாதார மூல வேர்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

### அரசியல் பங்கு கொள்ளல்

நாட்டின் பொது அரசியற் பிரக்ஞை அதியுயர்வாக இருந்த போதிலும் தெரிவு செய்யப்படுவதை விட வாக்களிப்பதிலேயே அதாவது தலைமைக்குப் புறம்பான நிலையிலேயே சமத்துவம் நிலவுகிறது. மத்திய, உள்ளூராட்சி சபைகளில் குறைந்த அளவிலான பெண்கள் பங்குபெறுவது அத்துறைகளில் குறைந்த பங்கு கொள்ளுதலைப் பிரதிபலிக்கின்றது. 1947 முதல் 1970 வரை பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரும் உள்ளூராட்சி சபைகளில் பெண் உறுப்பினர்களாக 54 பேரும் இருந்திருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளில் பங்கு கொண்ட பெண்கள் திருப்திகரமான அளவுக்கு இருந்துள்ளனர். சி. ல. சு. கட்சியில் மொத்த உறுப்பினரில் 32% வீதமானோரும் ஐ. தே. க. வில் நிர்வாக சபை உறுப்பினரில் 16% வீதமானோரும் ல. ச. ச. கட்சியில் 30.2% வீதமானோரும், கம்யூனிஸ்ட் கட்சியில் 8% வீதமானோரும், அ.இ.த.கா. கட்சியில் 20% வீதமானோரும் பெண்களாய் இருந்துள்ளனர்.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் பெண்களின் பங்குகொள்வது மிகவும் குறைவாகவே இருந்துள்ளது. 95% வீதமான பெண்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள மருத்துவ தாதிமார் தொழிற் சங்கங்களில் உள்ள பொதுக் காரியதரிசிகளில் ஒருவரைத் தவிர ஏனையோர் ஆண்களாகவே இருக்கின்றனர். இரண்டு தொழிற் சங்கங்களில் உள்ள தலைவர்கள் பெண்களாகவுள்ளனர்.

நூறு சத வீதம் பெண் அங்கத்தவர்கள் உள்ள மருத்துவ மாதர் தொழிற்சங்கம் ஒன்றில் பொதுச் செயலாளராக ஒரு ஆடவரே இருக்கின்றார்.

ஆசிரிய தொழிற் சங்கங்களில் 60 சதவீதமானோர் பெண்களே யாவர். இத்தகைய ஒரு தொழிற் சங்கத்தில் ஒரு பெண் கூட நிர்வாக சபை அங்கத்தவராகவேனும் இல்லை.

70 சத வீதமானோர் பெண்கள் அங்கத்துவம் வகிக்கும் தட்டெழுத்தாளர் தொழிற் சங்கத்தில் சகல முக்கிய பதவிகளும் ஆண்களாலே வகிக்கப்படுகின்றன.

50 சத வீதமானோரோ அதற்கு மேற்பட்டோரோ அங்கம் வகிக்கும் பல்கலைக் கழக மாணவர் கழகங்களில் வழக்கமாக ஒரு பெண்ணே செயற் குழுவில் இடம் பெறுகிறார். பல்கலைக் கழக மாணவர் சங்கங்களில் தலைவர் பதவிக்கோ, உப தலைவர் பதவிக்கோ, செயலாளர் பதவிக்கோ, உதவிச் செயலாளர் பதவிக்கோ எந்தப் பெண்ணும் எந்தக் காலத்திலும் போட்டியிடவில்லை. மருத்துவக் கல்லூரிச் சங்கத்தில் அதன் அமைப்பு விதி ஒரு பெண் நிர்வாக சபை உறுப்பினருக்கே இடமளிக்கிறது. இது ஹரிஜனர்களுக்கான பிரதிநிதித்துவத்தை ஞாபகப்படுத்துகிறது.

## பொருளாதாரம்

# பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் ஒரு புதிய அரசிறை ஆயுதம்

அண்மைக் காலங்களில் அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்ட செயற்பாடுகளில் ஒரு முக்கிய அபிவிருத்தியென்னவெனில் வரவு - செலவுத் திட்டத்தின் மூலதனத்தில் ஒரு பகுதியை பன்முகப்படுத்துதலாகும். மாவட்ட ரீதியாக 1973 ல் அரசியல் அதிகார சபைகளை (ஆரம்பத்தில் உணவுற்பத்தித் திட்டத்தை துரிதப்படுத்தவும் ஒன்றிணைக்கவுமான நிறுவகமாக) ஏற்படுத்தியதனால் அந் நிறுவகம் பயனுள்ள முறையில் செயல்படுவதற்கு தேவையான நிதியைப் பெற (திணைக்களங்கள், அமைச்சுக்கள், திறைசேரி போன்ற) அதிகார இயந்திரங்களூடு அனுமதி சோரும் கடினமான முறைகளை தவிர்த்து மாவட்ட மட்டத்தில், தேவைப்படும்போது பணம் கிடைக்கக்கூடிய வசதி யேற்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. எனவே அரசியல் அதிகார சபைகளை அமைத்தலுக்கான தர்க்க ரீதியான ஆதாரமாக வரவு செலவுத் திட்டத்தைப் பன்முகப் படுத்தல் அமைந்தது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினது வரவு செலவுத் திட்ட மூலதனத்தின் ஒரு பகுதி நாட்டின் 22 நிருவாக மாவட்டங்களுக்கும் வெவ்வேறாக பகிர்ந்தொதுக்கப்படும். ஒரு மாவட்டத்துக்கு இவ்விதம் ஒதுக்கப்பட்ட நிதியை செலவழிப்பது பற்றிய தீர்மானம், அம் மாவட்டத்தின் எம்.பிக்களின் ஆலோசனையுடன், அரசியல் அதிகாரியால் மேற்கொள்ளப்படும். வரவு செலவுத் திட்டத்தின் நோக்கங்களுக்காக அம் மாவட்டத்தின் அரசாங்க அதிபரே கணக்கு வைக்கும் அலுவலராகவும் செயல் படுவதோடு அவர் அரசியல் அதிகாரியின் பணிப்புக்களின்படி செயல் படுவார். அரசாங்க நிதியிலிருந்து செலவு செய்வதைக் கட்டுப்படுத்தும் வழமையான நிதிப் பிரமாணங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிகளைப் பொறுத்தமட்டில் பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளன. இத்தளர்வுகள், குறிப்பாக, தொழிலாளரை வேலைக் கமர்த்தல், பொருட்களைக் கொள்வனவு செய்தல், குறிப்பிட்ட ஒரு செலவு மட்டத்திலான அவசரப் பணிகளுக்கான கேள்விப் பத்திரங்கள் கோருதல் போன்றவற்றிற்கு ஏற்புடையதாகும்.

மாவட்டங்களுக்கு இந்த நிதி ஒதுக்கீட்டில் பொதுவாகக் கடைப்பிடிக்கப்படும் விதிகள் அம் மாவட்டத்தின் சனத்தொகை, பரப்பளவு, மாவட்டம் அபிவிருத்தியுற்றுள்ள அளவு, அபிவிருத்தியுறக்கூடிய அளவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டனவாகும். 1976 ல் பல்வேறு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1 ம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. மக்கள் தொகையினர் செறிந்துவாழும் மூன்று (நாட்டின் மொத்த சனத்தொகையின் 40 சதவீதத்தினை உள்ளடக்கிய கொழும்பு, கண்டி, குருநாகலை) மாவட்டங்களுக்கு, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியின் கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடுதல் ஒதுக்கீடு கொழும்பு மாவட்டத்துக்கு (5 கோடியே 40 லட்சம் ரூபா) கிடைத்துள்ளது. இது மொத்தத் தொசையின் 17% சதவீதத்துக்குக் கிட்டியதாகும். மிகக் குறைந்த தொகை வவுனியா மாவட்டத்துக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் (ஒவ்வொன்றுக்கும் 30 லட்சம் ரூபா) ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்தத் தொகையின் 1% சதவீதத்துக்கும் குறைவானதாகும்.

1974 முதல் 76 ம் ஆண்டு வரை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகைகள் வருமாறு:—

1974 ல் 17,11 லட்சம் ரூபா (உண்மையான செலவு)

1975 ல் 11,96 லட்சம் ரூபா (தற்காலிகமானது)

1976 ல் 32,73 லட்சம் ரூபா (ஒதுக்கப்பட்டது)

1976 ம் ஆண்டில் 32,73 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது அதற்கு முன்னைய இரு வருடங்களிலும் ஒதுக்கப்பட்ட தொகையைவிட மிகத் தெளிவான அதிகரிப்பு காட்டுகிறது. அரசாங்கம் பிராந்திய மட்டத்தில் தனது செய்திட்டங்களை அமுல் படுத்துவதற்கு இந்த அரசிறை ஆயுதத்தில் எவ்வளவு கூடுதலாகத் தங்கி நிற்கின்றது என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது.

1976 ம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் மேற்படி ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த அபிவிருத்திச் செலவினத்தில் 15% சதவீதத்தை பிரதிபலிக்கின்றது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 1974, 75 ம் ஆண்டுகளுக்கான தொழிற்பாட்டு ரீதியாக வகைப்படுத்தப்பட்ட செலவினங்களின் சுருக்கம் 2 ம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இரு வருடங்களிலும் மூன்றிலிரண்டு பங்குக்கும் மேலான செலவினங்கள் விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து என்பவற்றிற்காகவே செலவழிக்கப்பட்டுள்ளன. மொத்த செலவினத்தின் 30 சதவீதத்துக்குச் சமனான மிகக் கூடுதலான தனியொரு செலவினம் நீர்ப்பாசனம் தொடர்பானதாகும். பாடசாலைக் கட்டிடங்கள், விவசாய உற்பத்தி நிலையங்கள், கிராமிய வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள், உதவி அரசாங்க அதிபர் / பகுதி அரசிறை அலுவலர்களுக்கான அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றன, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் கட்டப்பட்ட கட்டிட வகைகளாகும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பொருளுற்பத்தி அவ்வளவு பிரதான இடத்தைப் பெறவில்லை.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாகவே (1974 - 75 ல் பரீட்சார்த்தக் கட்டம்) அமுலில் இருந்து வருவதால் அதன் வெற்றி குறித்தோ அல்லது பிராந்திய அபிவிருத்தியில் அது ஏற்படுத்திய தாக்கம் பற்றியோ மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள முயல்வது இன்னுமே முன் முதிர்ச்சிச் செயலாகும். மேலும் அத்தகைய மதிப்பீடு ஒன்றுக்கு அவசியமான விவரமான புள்ளிவிவரங்கள் இன்னும் கிடைக்கக் கூடியதாயில்லை. அரசியல் அதிகாரிகளின் திறமையைப் பொறுத்து மாவட்டத்துக்கு மாவட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் சாதனைகள்

வெவ்வேறு அளவினதாய் சம விகிதாசாரமற்று அமைந்துள்ளன என்பதில் சந்தேகமிருக்க முடியாது. எவ்வாறாயினும் இந்த முறையினால் மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகள் பெருமளவு துரிதப்படுத்தப்பட்டன எனக் கூறலாம். குறிப்பாக நீர்ப்பாசனம், விவசாயம், போக்குவரத்து, பிராந்திய நிருவாகம் போன்ற துறைகளிலான சில மூலதனப் பணிகள், மேற்படி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் இல்லாதிருந்தால் அவ்வளவு துரிதமாக நடைபெற்றிருக்காது. செய்திட்டங்களைத் தயாரிப்பதிலும் அமுல் நடத்துவதிலும் உள்ள நிருவாக தாமதங்கள் காரணமாக, அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மூலதன வாக்குப் பணம் 20 முதல் 25 சத வீதம் குறைவாகச் செலவாகின்றது. இத்தகைய கீழ் செலவினங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இல்லாதது குறிப்பிடத்தக்கதோடு இதன் கீழ் ஒதுக்கப்படும் முழுப் பணத்தையும் பயன்படுத்துவதில் எம். பிக்கள் மிகவும் ஆவலுடன் செயல்படுகின்றனர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இது காலவரை இருந்துவந்த நடைமுறை என்னவெனில் ஒவ்வொரு மாவட்டததுக்கும் அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதும் அதன் பின்னர் அத்தொகையை எவ்வெச் செய்திட்டங்களில் செலவிடுவதென அரசியல் அதிகாரி தீர்மானிப்பதுமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் பணம் ஒதுக்கப்பட்ட பின்பே நடப்பாண்டுக்கான செய்திட்டங்கள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளப் படுகின்றது. சிறந்த நடைமுறையென்னவெனில் ஒவ்வொரு மாவட்டமும் அந்த மாவட்டங்களின் பொருளாதார சமூக விருத்திகளுக்கான ஆக்கத் திட்டங்களை முதலில் உருவாக்கிய பின்னர் அவற்றிற்குத் தேவையான நிதியை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குவதே. இந்த முறையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் அதிக அர்த்தமுள்ளதாய் அமைவதோடு, பிராந்திய மட்டத்தில் குறிப்பான அபிவிருத்தித் திட்டங்களுக்காகவே அது முடுக்கி விடப்பட்டுள்ளதால் பிராந்திய அபிவிருத்தியில் அது கூடிய தாக்கத்தையும் ஏற்படுத்தும். வேறு வார்த்தையில் கூறுவதாயின் திட்டமிடப்பட்ட பிராந்திய அபிவிருத்திக்கான ஒரு ஆயுதமாகவே பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டும். இது காலவரையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பெருமளவிலான செலவினங்கள் (பாதைகள், பாலங்கள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், கட்டிடங்கள்) போன்ற புற நிர்மான வேலைகளுக்காகவே செலவிடப்பட்டுள்ளன. கைத்தொழில் நடவடிக்கைகளில் அவ்வளவாகக் கவனம் செலுத்தப்படவில்லை. குறுகிய ஒரு காலப் பிரிவினுள் மேற்படி பிராந்தியத்தில் விவசாய கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிக்கக் கூடிய உற்பத்தி நடவடிக்கைகளில் மேற்படி செலவினங்களில் ஒரு பகுதியை நேரடியாக ஈடுபடுத்துவது அத்தியாவசியமாகும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அமுல் நடத்துவதில் அரசியல் அதிகாரியின் பொறுப்புக்களை சட்டம் மூலம் நிறுவகப்படுத்தல் விரும்பத்தக்கதாகும். தற்பொழுது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒரு நிருவாக ஒழுங்கு மாத்திரமே. மேற்படி நிதியைப் பயன்படுத்துவது குறித்து பதில்கூற வேண்டிய பொறுப்புக்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை.

அத்தகைய திட்டமிடப்பட்ட பிராந்திய அபிவிருத்திக்கான நிறுவக ஒழுங்கொன்று இன்றைய, கடந்தகால யதார்த்தங்களின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படல் வேண்டும். அபிவிருத்தியை நோக்காகக் கொண்டமையாத பிரதான அமைப்பையும் தொழிற்பாட்டினையுமுடைய காலனித்துவ அதிகார அமைப்பினைத் தகர்த்து, அதனிடத்தில் அதற்குப் பதிலாக அபிவிருத்தி சார்ந்த மக்கள் பங்காற்றலை மாற்றீடு செய்யும் நடைமுறையை ஏற்படுத்துவதற்காகவே இவைகள் அமுலாக்கப்படுகின்றன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தையடுத்து அரசியல் அதிகாரி குறைந்தது மக்கள் விருப்பின் பிரதிபலிப்பாளராகச் செயல் படுவதன் மூலம் அபிவிருத்தியில் மக்கள் பங்காற்றலும் மக்கள் தீர்மானம் மேற்கொள்ளலும் ஓரளவு அதிகரித்துள்ளன. ஆனால் இன்றைய பரீட்சார்த்தமான அமைப்பு முறையிலான அரசியல் அதிகாரியின் தனித்துத் தீர்மானம் மேற்கொள்ளும் தன்மையும், ஊழல்களும் சில வேளைகளில் தம் நிழல்களைப் படரவிடுகின்றன. இவைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கீழ் மட்டத்தில் மக்கள் அமைபுப்களினால் அரசியல் அதிகாரியையே கட்டுப்படுத்தும் தர்க்க ரீதியான முடிவுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் கொண்டு செல்லப்படல் வேண்டும்.

அட்டவணை 1

1976 ம் வருடப் பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழான ஒதுக்கீடுகள்

| மாவட்டம் | ஒதுக்கீடு (லட்சம் ரூபாக்களில்) | மொத்த சத வீதம் % |
|---|---|---|
| கொழும்பு .. | 540 | 16.5 |
| கண்டி .. | 300 | 9.2 |
| குருநாகலை .. | 240 | 7.3 |
| காலி .. | 180 | 5.5 |
| இரத்தினபுரி .. | 164 | 5.0 |
| அநுராதபுரம் .. | 162 | 5.0 |
| யாழ்ப்பாணம் .. | 160 | 4.9 |
| கேகாலை .. | 160 | 4.9 |
| களுத்துறை .. | 160 | 4.9 |
| பதுளை .. | 160 | 4.9 |
| மாத்தறை .. | 140 | 4.3 |
| அம்பாறை .. | 120 | 3.7 |
| மட்டக்களப்பு .. | 110 | 3.4 |
| அம்பாந்தோட்டை .. | 100 | 3.1 |
| புத்தளம் .. | 96 | 2.9 |
| திருகோணமலை .. | 91 | 2.8 |
| மாத்தளை .. | 88 | 2.7 |
| நுவரெலியா .. | 85 | 2.6 |
| மொனராகலை .. | 72 | 2.2 |
| பொலன்னறுவை .. | 70 | 2.1 |
| மன்னார் .. | 30 | 0.9 |
| வவுனியா .. | 30 | 0.9 |
| மொத்தம் | 3273 | 100 |

அட்டவணை 2

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டம்

தொழிற்பாட்டு வகைப்படுத்தல்
(லட்சம் ரூபாக்களில்)

| | 1974 | 1975 |
|---|---|---|
| (1) விவசாயம், நீர்ப்பாசனம் | 720.2 | 531.2 |
| (2) போக்குவரத்து | 465.5 | 282.3 |
| (3) கல்வி .. | 131.1 | 151.0 |
| (4) உள்ளூராட்சிப் பணிகள் .. | 60.9 | 70.6 |
| (5) அரசாங்க நிருவாகம் .. | 71.1 | 37.8 |
| (6) சுகாதாரம் .. | 28.8 | 11.4 |
| (7) சமுதாய சேவைகள் .. | 47.8 | 13.4 |
| (8) மீன்பிடி .. | 13.7 | 11.8 |
| (9) உற்பத்தித் தயாரிப்பு .. | 01.5 | 01.8 |
| (10) ஏனையவை .. | 176.3 | 84.5 |
| மொத்தம் | 1717.0 | 1195.9 |

## தொழில் நுட்ப வியல்

# பெண்களுக்குப் பெருத்தமான தொழில் நுட்பம்

பதினைந்து வருடங்களாக பிரிட்டனின் வெளிநாட்டுச் சேவையில், முதலில் கமரூனில் பிரதம சமூக அபிவிருத்தி அலுவலராகவும், பின்னர் பெண்கள் நலன்கள் தொடர்பாக, சரவாக் அரசுக்கு ஆலோசகராகவும் கடமையாற்றிய எலிசபெத் ஓ' கெல்லி என்பவரின் கட்டுரையின் சுருக்கமே இதுவாகும்.

“விசில் ஊதும் பெண்ணும் கூவும் கோழியும் கடவுளுக்கோ மனிதனுக்கோ பொருந்தா” என நான் குழந்தைப் பருவத்தில் விசில் ஊத முயன்ற வேளைகளில் எனது தந்தை கூறியதுண்டு. காலம் மாறி விட்டது. ஆனாலும் ஆண்கள் தங்களுக்குரியதெனக் கருதும் துறைகளில், குறிப்பாக தொழில் நுட்பத் துறையில் அல்லது இத் துறையில் தொழில் நுட்பம் என்று நான் கூற வேண்டும்; பெண்களுக்கெதிரான குரோதம் இன்னுமே நிலவுகிறது. இருந்த போதிலும் அபிவிருத்தியுறும் நாடுகளில் பெண்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுமாயின தொழில் நுட்பத் துறையினை முன்னேற்றமாக பயன்படுத்தக் கூடியவர்களும், தொழில் நுட்பங்கள் மிகவும் அவசியமாகத் தேவைப்படுபவர்களும் பெண்களே.

தற்போது, பெரும்பாலான அபிவிருத்தியுறும் நாடுகளில் கிராமியப் பெண்கள் தங்களாலியலாத பெரும் வேலைப் பளுவைச் சுமந்து நிற்கின்றனர் என்பதிலும் அது அவசரமாக இலகு படுத்தப்பட வேண்டும் என்பதிலும் சந்தேகமேயில்லை. இஸ்லாமிய மரபுகள் பெண்களை வீட்டோடு இருக்க வைக்கும் இடங்களைத் தவிர்த்து இந் நாடுகளில் பெரும்பாலானவைகளில் பிழைப்புக்கான விவசாயமே பெண்களுடைய பணியாகும். பணம் ஈட்டும் பயிர்களான தேயிலை, கோப்பி, கொக்கோவா போன்ற பயிர்ச் செய்கைகளிலேயே ஆண்கள் அதிகம் ஈடுபடுகின்றனர். எவ்வாறாயினும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் பெரிய அளவிலான இயந்திரமயமாதல் அறிமுகப்படுத்தப்படுவதுடன் .பிழைப்பு விவசாயமும். ஆண்களின் பணியாக மாறுகிறது. ஏனெனில் இருபாலாருக்கிடையிலான தொழிற் பிரிகையில் இயந்திரங்களைக் கையாளுதல் அண்களின் பணியாகக் கருதப்படுகிறது.

மேலெழுந்த வாரியாக, பெண்கள் செய்ய வேண்டிய பணிகளை நோக்குமிடத்து, இந்நிலை விரும்பத்தக்கதாகத் தோன்றலாம். ஆனால் நடைமுறையில் பெண்கள் இன்று தமது குடும்பங்களுக்கான உணவினை வழங்குவோராக, நிலத்தின் மீதான கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்போராக அவர்களது சமுதாயத்தில் வகிக்கும் அந்தஸ்த்தினை இழக்கலாமாதலால் இது அவர்களுக்கு பாதகமாகவே அமைகிறது.

இந்த ஒழுங்கு முறையில் சமூகப் புரட்சியொன்றைத் தோற்றுவிப்பதற்கு முயல்வதை விடவும் பொருத்தமான அல்லது இடைத்தர தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி பெண்களின் உழைப்பைக் குறைக்காது அவர்களுக்கு உதவி செய்தல் எவ்வளவோ சிறந்தது எனக் கருதுவோர் பலர் உள்ளனர். சிறப்புற சமப்படுத்தப்பட்ட கூர்மையான விளிம்புகளையுடைய விவசாய உபகரணங்கள், தற்போது பெண்கள் தமது தலையிலும் முதுகிலும் சுமைதாங்கிச் செல்வதைத் தவிர்ப்பதில் உதவக்கூடிய சில்லுப் பூட்டிய தள்ளு வண்டிகள் போன்ற எளிய உபகரணங்களை வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்க்கையைக் குறிப்பிடத்தக்களவு இலகுபடுத்தலாம். தொழில் நுட்ப. உதவிகளுடன் அவர்களாகவே அமைத்துக் கொள்ளக்கூடிய எளிமையான நீர்ப்பாசன, அல்லது கால்வாய்த் திட்டங்களும் உற்பத்தி அதிகரிப்புக்கு உதவலாம். இவையனைத்தும் மிக முன்னேறிய தொழில் நுட்பத்துக்கு அவர்களைத் தயார் படுத்தலாம். இவ்விதம் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குள் பெண்கள் திறமைமிக்க விவசாயிகளாயுள்ளனர். அத்தோடு அவர்களிடமிருந்து இப் பொறுப்பினையேற்றுக் கொள்ள ஆண்கள் என்றும் உற்சாகம் காட்டியதில்லை. பயிரிடுதல் பெண்களின் பணி என அவர்கள் கருதுகின்றனர். . . . .

பல கிராமியப் பெண்கள், குறிப்பாக ஆசியாவிலுள்ளோர், பாய் கூடை கயிறு திரித்தல், வலைபின்னுதல், தளபாடங்கள் செய்தல் போன்றவைகளினால் தமது வருமானத்தை குறைநிரப்புகின்றனர். இப்பணி பெரும்பாலும் தமதில்லங்களிலேயே நடைபெறுகின்றன. எனவே தான் அவற்றைக் “குடிசைக் கைத்தொழில்” என வழங்குகின்றன. கைகளால் இயக்கக்கூடிய எளிய இயந்திரங்கள் (இவைகளுள் பல ஜப்பானில் தயாரிக்கப்படுகின்றன) அவர்கள் தமது பணியில் செலவிடும் காலத்தை மிச்சப்படுத்துவதில் உதவ முடியும். மேலும் இதனால் அவர்களது உற்பத்திப் பொருட்கள் வர்த்தக ரீதியான போட்டிகளை எதிர்கொள்ளக்கூடிய தரத்தினதாயிருக்கும். ஒரு குயவனின் சுல்லுக்கு குமிழ்தாங்கியொன்றைப் பொருத்தினால் கூட பெருமளவு உற்பத்தி அதிகரிக்கும்.

கடந்த வருடம் மெக்ஸிகோவில் நடைபெற்ற சர்வதேச மாதராண்டின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட உலக செயல் திட்டத்தினதும், சர்வதேச பெண்கள் தசாப்தத்தினதும் ஒரு பிரதான இலக்கு என்னவெனில் நவீன கிராமிய தொழில் நுட்டங்களையும் சக்தியைச் சேமிக்கும் அமைப்புக்களையும் விருத்தியுறச் செய்வதன் மூலம் பெண்களின் கடுமையான வேலைப் பளுவைக் குறைத்து அவர்கள் சமூக: தேசிய, சர்வதேச விவகாரங்களில் பூரணமாகப் பங்குபற்றுதலுக்கு வசதிகள் செய்து கொடுத்தலாகும். பெண்கள் அதற்கு அருகதையானவர்கள்.

---

**பெண்களுக் கெதிரான . . .**

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் வழங்கப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பகுதி 11

1. ஐ. நா. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் ஐ. நா. சாசனம் ஆகியவற்றின் கோட்பாடுகள் அமுல் நடத்தப்படுதலை மேம்படுத்த அரசாங்கங்களும், அரசு சார்பற்ற தாபனங்களும் தனி நபர்களும் தங்களாலியன்றவற்றைச் செய்ய வேண்டுமென ஆண்-பெண்களுக்கான சமத்துவ உரிமைகள் கோரி நிற்கின்றன.

# கிராமியப்பொருளாதாரத்தில் கிராமியப்பெண்களின் பங்கு

ஐ. நாடுகளின் ஆட்சிச் சபை 1975 ம் ஆண்டினை சர்வதேச மாதராண்டாகப் பிரகடனப்படுத்திய போது அதன் பிரதான இலக்குகளில். ஒன்று ''தேசிய, பிராந்திய, சர்வதேச மட்டங்களில் பொருளாதார, சமூக, கலாச்சார அபிவிருத்தித் துறைகளில் பெண்களின் முக்கிய பங்கினையும் பொறுப்பினையும் விசேடமாக வலியுறுத்தி பூரண அபிவிருத்தி முயற்சிகளில் பெண்கள் முற்றாக ஒன்றிணைதலை உறுதிப்படுத்துதலாகும்'' எனக் கூறப்பட்டது.

எவ்வாறாயினும் பெரும்பாலான ஏனைய அபிவிருத்தியுறும் நாடுகளைப் போன்றே இலங்கையிலும் தங்களின் தொழிற்றுறைகளின் உற்பத்திகளை அதிகரிக்கும், அது போலவே தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்பாளர்கள் என்ற முறையில் தமது ஆற்றல்களை யதார்த்த முறச் செய்யும் வாய்ப்புக்களுக்குமான சாதனங்களை அணுகுவதில் ஆண்களளவு வாய்ப்புக்கள் பெண்களுக்கு இருக்கவில்லை.

தேசிய வருமானத்துக்கு 33% சத வீதத்துக்கு மேல் பங்களிக்கும் அதே வேளையில் 57% சத வீதமான உழைப்பாளிகளுக்கு தொழில் வாய்ப்பளிக்கும் விவசாயத் துறையே எமது பொருளாதாரத்தின் அடிப்படையாதலால் அபிவிருத்திக்கான உபாயம் விவசாய அபிவிருத்திக்கு உயர் முதன்மைத்துவம் அளிக்க வேண்டும். பரந்த ஆனால் அதைச் சார்ந்த ஸ்தம்பிதத் தன்மை வாய்ந்த கிராமியத்துறை நாட்டின் விவசாயத்தின் பெரும் பகுதியை உள்ளடக்குகின்றது.

பெரும்பாலான கிராமப் பகுதிகளில் உணவுற்பத்தி, பக்குவப் படுத்தல், விநியோகம், சந்தைப் படுத்தல் போன்ற தெரிவு செய்த துறைகளில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு பணிகளைப் பெண்கள் புரிகின்றனர். சம்பளம் பெறாது, குடும்பத்தின் ஒரு உழைப்பாளியாக வந்து பெண்கள் விவசாய உற்பத்திகளில் பங்கு கொள்வதால் விவசாய புள்ளி திரட்டல்களில்கூட கணக்கெடுக்கப்படாது விடப்பட்டு இறுதியில் விவசாயத் துறையில் ஈடுபடும் பெண்கள் பற்றிய மதிப்பீடு, குறைத்து மதிப்பிட்ட ஒன்றாகவே அமைகிறது.

1969-70 ம் ஆண்டின் சமூக பொருளாதார மதிப்பீட்டின்படி 14 - 64 வயதுக்கிடைப்பட்ட கிராமிய மக்கள் தொகையினர் அமைந்துள்ள வகை வருமாறு:—

கிராமிய மக்கள் 14 - 64 வயதுக் கிடைப்பட்டோர், அவர்களது வயது, பால் அடிப்படையில் வகையமைந்துள்ள முறை (இலக்கள்கள் ஆயிரத்தில்)

| வயதுத் தொகுதி (வருடங்களில்) | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 15 —24 | 908.4 | 974.0 |
| 25—34 | 495.2 | 517.6 |
| 35—44 | 429.8 | 451.8 |
| 45—54 | 357.8 | 346.8 |
| 55—64 | 252.8 | 191.2 |
| மொத்தம் | 2444.0 | 2481.4 |

கிராமியப் பகுதிகளில் உழைப்பாளிகளில் பெண்கள் பங்கு பெரும்பாலும் ஆண்களின் அளவே என்பதை நாம் உணரலாம். எனவே கிராமிய பகுதிகளில் விவசாய அபிவிருத்திகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவாக இருக்கலாம் என எதிர்பார்க்கலாம். இல்லத்தை நிருவகித்தல், அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தயாரித்தல் போனற மனை பேணல் நடவடிக்கைகளை விடவும் குறைவான முறையிலேயே விவசாய நடவடிக்கைகளுக்கான பெண்களின் பங்களிப்பு கருதப் படுகிறது.

புனர் நடுகை, களைபிடுங்கல் போன்ற சில குறிப்பிட்ட பண்ணை வேலைகளில் ஆண்களை விடத் திறமையாகவும், அல்லது சம அளவிலும் பெண்கள் வேலை செய்யும் திறமை யுடையவர்கள் என்ற போதிலும் பெண்களுக்கு ஆண்களை விடவும் குறைந்த சம்பளம் வழங்கப்படுவது பொது நடைமுறையாகும். கிராமிய பகுதிகளில் ஆண்களின் வேதனத்தில் நின்றும் பெண்களின் வேதனம் 50%-75% சதவீதம் வரைவேறுபடுகின்றது.

ஆனால் பெண்கள், குறிப்பாக படித்த பெண்கள், இன்றும் மொத்தத்தில் குறைத்துப் பயன்படுத்தப்படும் வளமாகவே உள்ளனர். கிராமிய பகுதிகளில் பூரணமாகப் பயன்படுத்தப்படாத பல இயற்கை வளங்கள் நாட்டிலுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை விவசாய உற்பத்திகளும் அவற்றின் பக்க - உற்பததிகளுமாம். கயிற்றுக் கைத்தொழிலுக்கான தென்னந்தும்பு, கருப்பட்டி அல்லது வெல்லப்பாகு தயாரிப்பதற்கான தென்னம் பாணி, பிரம்புக் கைத்தொழில், மட்பாண்டத் தொழிலுக்கான மண் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இவை தவிர ஜவுளி நெசவு போன்ற விவசாயம் சாராத கைத்தொழில்களில் பெண்களின் உழைப்பு பயன்படுத்தப் படுவதற்கும் வாய்ப்புக்கள் .உள்ளன. இவை தவிர கிராமிய பகுதிகளில் உற்பத்தி செயயப்படும் உணவுப் பொருட்களைப் பக்குவப்படுத்துதலிலும் வாய்ப்புக்கள் உள்ளன. சில பகுதிகளில், பிரதானமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களான சிறு கைத்தொழில்கள் பல வருடங்களாகவே இருந்து வந்துள்ளன. ஆனால் பல்வேறு நிறுவகங்களுக்கிடையிலும் ஒருமைப்பாடும், இணைப்பும் குறைவாயுள்ளமையாலும், பொருத்தமான தொழில் நுட்பக் குறைவு, உள்ளீடுகை வழங்கல், உற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்றவற்றிற்கான ஒழுங்கமைப்பு வசதிக் குறைபாடுகள் என்பன காரணமாகவும் உற்பத்தியும் இலாபமும் தாழ்வாகவேயுள்ளன.

இதன் காரணமாக, பிரதானமாக உள்ளூர் மூலப் பொருட்களையும் திறமையையும் பயன்படுத்தி உள்ளூர்ச் சந்தைக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்குமாக பொருட்களை உற்பத்தி செய்யும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சிறு அளவிலான கைத்தொழில்களை விருத்தி செய்வதன் மூலம் இலங்கையின் கிராமப் புறப் பெண்களுக்கு வருவாய் ஈட்டும் வாய்ப்புக்களை வழங்குவதற்காக நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட புதிய வளத்துறைகள் தோற்றுவிக்கப் படுவதற்கான அவசரத் தேவை யொன்று ஏற்பட்டுள்ளது.

கிராமப் பெண்களால் நடத்தப்படும் வருவாய் தரும் நடவடிக்கைகளைத் தாபித்தல், பெண்களின் தலைமைத்துவ ஆற்றல் விருத்தி சமூக விவகாரங்களிலான அவர்களது கூடிய பங்களிப்பு போன்ற சமூக நலன்களை விளைவிக்கின்றன.

குடும்பப் பண்ணை நடவடிக்கைகளில் கிராமிய குடும்பத்தின் பெண் உறுப்பினர்களது பங்களிப்பும் சிறப்புற ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். பண்ணை வேலைகளுக்கு பெண்களின் உழைப்பைக் கோரும் இரு முக்கிய அம்சங்கள் உள்ளன. ஒன்று என்னவெனில் விவசாய உற்பத்தியில் தொழிலாளருக்கான அவசியம் ஒரு பருவ காலத்திலேயெழுவது. மற்றது என்னவெனில் சில பண்ணை நடவடிக்கைகளில் ஆண்களை விட பெண்கள் சிறப்புத் திறமை பெற்றிருப்பதாகும். பெண்களின் உழைப்பு உள்ளிடுகையின் தரத்தையும், அளவையும், குடும்பத்தின் அளவு, பண்ணை நடவடிக்கைகளில் குடும்ப.உறுப்பினர்.எத்துறைகளில் எவ்வளவு தூரம் பங்குபற்றுகின்றனர் என்ற தரவு, பண்ணை சாராத அல்லது பண்ணைப்புற வருமானம் தரும் வாய்ப்புக்கள், சௌக்கிய போஷாக்குத் தன்மைகள், கல்வியும் பயிற்சி மட்டங்களும், அவர்கள் கொண்டுள்ள விசேட திறமைகள் போன்ற தொகையான காரணிகளே நிர்ணயிக்கின்றன.

கிராமியப் பெண்களுக்கான வருவாய் தரும் நடவடிக்கைகளைத் தோற்றுவிக்கும் நோக்கத்திற்காக அவசியமான தகவல்கள் தற்போது பற்றுக்குறையாகவே உள்ளன. கிடைக்கக் கூடியதாயுள்ள தரவுகள் கூட பெண்களின் பொருளாதார நடவடிக்கைப் பணிகளில் உள்ள பெரிய வேறுபாடுகளை விளக்குவதாயில்லை. கிராமியப் பெண்கள் விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திகளில் பூரண பங்கு கொண்டு பெரும் பணி ஆற்றக் கூடியதாக நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்படவும் அமுல் நடத்தப்படவும் மதிப்பீடு செய்யப்படவும் ஒரு அடிப்படையாக செயலாக்கம் சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்நோக்கிற்காக: —

(1) பண்ணை இல்லங்களில் தொழிற் பிரிகை முறை கவனமாக பரிசீலிக்கப்படல் வேண்டும்.

(2) கிராமியப் பெண்களின் தற்போதைய திறமைகளும் அனுபவங்களும் உறுதி செய்து கொள்ளப்படல் வேண்டும்.

(3) புதிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான சிறப்பாண்மைத்துவம்) புதிய தேர்ச்சித் திறமை செயற்பாட்டுப் பழக்கங்கள் என்பன இனங் காணப்படுவதோடு இவ்வகைப் பயிற்சிகள் வழங்கப்படக் கூடிய முறைமையியல் பற்றியும் நிச்சயித்துக் கொள்ளல் வேண்டும்.

(4) கிராமியப் பெண்கள் மேலும் தீவிரமாகத் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்படக் கூடிய வாய்ப்புக்களும் வழிவகைகளும் ஆராயப்படல் வேண்டும்.

(5) தற்போதுள்ள விசேட அமைப்புக்கள் எவ்வளவு தூரம் மாற்றியமைக்கப்படல் வேண்டும், பலப்படுத்தப்படல் வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக அவைகள் இனம் காணப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு உள்ளூர்ப் பிரதேசத்தை பொறுத்து எமது பரிசீலனைகளின் கண்டுபிடிப்புகள் மாறுபடலாம் என்பதைக் கூறத் தேவையில்லை. உதாரணமாகக் கூறின் வரண்ட பிரதேச விவசாய நடவடிக்கைகள்ல் பெண்களின் பங்கு அப்பகுதிகளின் இயல்புக் கேற்ப, குறிப்பாகக் கூறின் சேனை விவசாயம், நெல் பயிரிடல் மேட்டுநிலப் பயிர்ச் செய்கை என்ற மூவகைப் பயிர்ச் செய்கைக் கேற்ப, ஈரலிப்புப் பிரதேசப் பயிர்ச் செய்கையிலிருந்து வேறுபடலாம்.

பெண்களுக்காக நன்கு திட்டமிடப்பட்ட உற்பத்தித்துறை தொழில் வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை ஆற்றல்களை அந்தஸ்த்துக்களைப் பெறுவதற்கு போதிய வாய்ப்புக்களை அளிப்பதன் மூலமும் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெண்களின் உண்மையான ஒருமைப்பாட்டினைச் சாதிக்கலாம். இது தவிர தீர்மானம் மேற்கொள்ளுதலில் பெண்கள் பங்குபற்றுதலை, விசேடமாக அவர்கள் தம் உழைப்பை வழங்கும் விவசாய உற்பத்தியில் தீர்மானம் மேற் கொள்ளுதலில் பெண்கள் பங்குபற்றுதலை, தலைமைத்துவப் பயிற்சிகள் மூலம் ஊக்குவிக்க வேண்டும்.

## பெண்கள் சமையலறை . . .

(15ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்தல் வேண்டும்.

இவ்வெல்லாத் துறைகளிலும் பெண்கள் இல்லாமலேயே பெண்கள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மாற வேண்டும் என சர்வதேச தொழில் ஸ்தாபனம் வேண்டுகிறது.

### புரட்சி

இன்று பெண்களைப் பாதித்துள்ள பிரமாண்டமான தொழில் பாதுகாப்பின்மையைப் போஷிக்கும், தொழில்துறையிலான பால் பாகுபாட்டின் வேர்கள் சமுதாயத்தின் குரோத மனப்போக்கிலும் மூட நம்பிக்கைகளிலுமே தங்கியுள்ளன.

வாழ்க்கையை நலமுற வாழ்வதற்கான நியாயமானளவு சந்தர்ப்பங்களைப் பெண்களுக்கு வழங்குவதற்காக பெண்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படும் அதே வேளையில் ஆண்களினதும் பெண்களினதும் மனதில் புரட்சி மேற்கொள்ளப்படுதலின் மூலமே உண்மையான சமத்துவத்தைச் சாதிக்கலாம் என சர்வதேச தொழில் ஸ்தாபன பிரசுரம் மேலும் தெரிவிக்கிறது.

காலம் கடந்த மனப்போக்குகளைக் களைந்தெறியும் நோக்குடன் இப் புரட்சியானது பெண்களின் ஆற்றல்கள், கொள்ளளவுகள், வாழ்க்கை முறைகள், திறமைகள், விருப்புக்கள் பற்றிய மறைந்து கிடக்கும் தவறான ஊகங்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டும்.

உழைத்து வருபவன், இல்லத்தைக் கட்டிக் காப்பவன் என்பது போன்ற கற்பனை நம்பிக்கைகளும், வேலைக்கும் இல்லத்துக்குமிடையிலான வேறுபாடுகளும் தகர்க்கப்பட வேண்டும்.

இவை யெல்லாவற்றுக்கும் மேலாக பெண்ணானவள் கணவனுக்கு ஒரு இணைப்பு அங்கமாக கருதப்படாது சுயேச்சையான, அரசியல் சமூக பொருளாதார உரிமைகளும் கடமைகளுமுடைய மனுக்குலத்தின் முதிர்ச்சியடைந்த ஒருவளாகக் கருதப்படல் வேண்டும்.

**சிறப்புக் கட்டுரை**

# விவசாய நடவடிக்கைகளில் குடும்ப ஆதிக்கம்

— ஆர். டி. வனிகரத்ன (ஆராய்ச்சியாளர்-விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிலையம்)

இலங்கையின் கிராமிய சமுதாயத்தில் நிலம் எப்பொழுதுமே வலிமையின் இருப்பிடமாயும் அந்தஸ்த்தின் அடையாளமாயும் இருந்து வந்துள்ளது. இலங்கையின் எந்த ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் அங்குள்ள ஏனையோரை விடவும் கூடுதல் பரப்பளவு நிலத்துக்குச் சொந்தமானோர், ஏனையோர்களால், அச்சமுதாயத்தின் உயர் வகுப்பினராகக் கருதப்படுகின்றனர்.

இந்த உயர் வகுப்பினரால் இவ்விதம் பெரும் பரப்பளவு நிலத்துக்கு உரிமை கொண்டாடுதல், ஏனைய கிராமவாசிகள் மத்தியில், தங்கி வாழும் அமைப்பைக் கொண்ட சந்ததி யொன்றைத் தோற்றுவிப்பதற்கு வழிகோலியுள்ளது. கிராமங்களில் சகல வித விவசாய நடவடிக்கைகளிலும் இத் தங்கி வாழும் பண்பு உணரப்படக் கூடியதாயுள்ளது. காணிச் சீர்திருத்தங்களை அமுல் நடத்துவதில் ஒரு தடையாக இத் தங்கி வாழும் பண்பு அமைந்துள்ளது.

இலங்கையின் ஈரப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள், காணிச் சீர்திருத்தம் மூலமாக தமது சமூக - பொருளாதார அந்தஸ்த்தை எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை இந்த உயர் வகுப்புக் குடும்பத்தினர் பல்வேறு பிரதி நடவடிக்கைகளின் மூலம் முறியடிக்கின்றனர் என்பதை மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகின்றன. இத்தகைய பிரதி நடவடிக்கைகளில் சில:

(1) நெற் காணிப் பதிவேடுகள் தயாரிக்கப்படும்போது சில நிலச் சொந்தக்காரர்கள் தங்களது 'அந்தே' பயிர்ச் செய்கையாளர் (முல்லைக்காரர்) களின் பெயர்களை வெளிக்காட்டுவதில்லை. அத்தகைய காணிச் சொந்தக்காரர்கள், தமது அரசியல், பொருளாதார, சமூக பிணைப்புகளின் காரணமாக தமக்கு கடமைப்பட்டுள்ளவர்களான ஒரு சில பயிர்ச் செய்கைக் குழு உறுப்பினர்களின் பக்க பலத்தோடு காணிப் பதிவேடுகளில் இருந்து அந்தே பயிர்ச் செய்கையாளரின் பெயர்களை மாற்றியமைத்து, அந்தே பயிர்ச் செய்கையாளரின் நிலைமையை உறுதியற்றதாகச் செய்துள்ள பல சந்தர்ப்பங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இதே வேளையில் அந்தே பயிர்ச் செய்கையாளரும் நிலவுடமைக்காரரின் நடவடிக்கைகளுக்கு எதிராக பிரதிக் கிரியைகளில் ஈடுபடுவதில்லை.

(அ) நிலச் சொந்தக்காரருக்கும் அவரது குலத்துக்கும் தான் தாழ்ந்தவர் என்ற உணர்வு.

(ஆ) நிலச் சொந்தக்காரருடன் உள்ள குடும்ப உறவு முறை.

(இ) நிலச் சொந்தக்காரன் சில வேளைகளில் வழங்கும் உணவு, பிச்சைக் காசு போன்ற சில நன்மைகளை தொடர்ந்து பெறுவதாயின் நிலச் சொந்தக்காரருடனுன சுமுக உறவை தொடர்ந்து பேண வேண்டும் என்பது போன்ற பல்வேறு காரணங்களுக்காக அந்தே பயிர்ச் செய்கையாளர் நிலச் சொந்தக்காரருக் கெதிராக பிரதிக் கிரியை புரிவதில்லை.

(2) அந்தே பயிர்ச் செய்கையாளர் தமக்கு விசுவாசமாக நடக்கவில்லை யென்ற சந்தேகம் ஏற்படும் நிலச் சொந்தக்காரர்கள், மேற்படி அந்தே பயிர்ச் செய்கையாளரின் கவனயீனம் காரணமாக தமது வயல் செழிப்பின்றி விட்டது எனக் குற்றம்சாட்டி பிரதிக் கிரியைகளில் ஈடுபடுகின்றனர். தவறிழைக்கும் அந்தே பயிர்ச் செய்கையாளரை வெளியேற்றுவதற்கு இது ஒரு போலிக் காரணமாகக் கையாளப்படுகிறது.

(3) அந்தே பயிர்ச் செய்கையாளர்கள் தமது அந்தஸ்த்தை பயிர்ச் செய்கைக் குழுக்களில் ஒரு தலைப்பட்சமாக பதிவு செய்த சூழ்நிலைகளில் நிலச் சொந்தக்காரர்கள் மேற்படி அந்தே பயிர்ச் செய்கையாளர்களை சமூக நெருக்குதல் (உ + ம்: ஏனையோரைக் கொண்டு புத்தி கூறுதல், இழிவு கூறல் அல்லது அச்சுறுத்தல்) களின் மூலம் கட்டுப்படுத்தி தமக்கு கீழ்ப்படிந்த நிலையில் இருக்கச் செய்துள்ள சந்தர்ப்பங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தமது அந்தே உரிமைகளை மறுக்கும் எழுத்துமூலமான வாக்குமூலங்களை அந்தே பயிர்ச் செய்கையாளரிடமிருந்து நிலப் பிரபுக்கள் பலாத்காரமாகப் பெற்ற ஏனைய சந்தர்ப்பங்களும் காணப்பட்டுள்ளன.

(4) நெற் காணிப் பரப்புக்களைத் தொடர்ந்து பயிர்ச் செய்து வருவதால் அந்தே உரிமை கோரப்படும் நிலைமை எழாதவாறு அந்தே பயிர்ச் செய்கையாளருக்கு நிலத்தை தொடர்ந்து வழங்கி வராது இடைக்கிடையே வேறு ஆட்களுக்கு மாற்றிக் கொடுத்தல் போன்ற ''கும்புறு கடீம'' என்னும் நடவடிக்கையை நிலச் சொந்தக்காரர்கள் மேற்கொள்ளும் சில சந்தர்ப்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நெற் காணிப் பரப்புக்களைச் சொந்தமாக வைத்துள்ள சில நிலச் சொந்தக்காரர்கள் தமது அந்தே பயிர்ச் செய்கையாளர் மத்தியில் அவற்றை போகத்துக்குப் போகம் மாற்றிக் கொடுப்பதன் மூலம் ஒரே பயிர்ச் செய்கையாளர் ஒரே நிலத்தில் தொடர்ந்து விவசாயம் செய்து வராது தடுக்கின்றனர்.

(5) அந்தே பயிர்ச் செய்கையாளர் தன்னில் தங்கியிருக்கும் உறவு மிகவும் நெருக்கமானதாயும் உறுதியானதாயும் இருக்கும் சந்தர்ப்பங்களில் ஒன்று அல்லது இரண்டு போகங்களுக்கு அந்தே பயிர்ச் செய்கையாளரிடமிருந்து நிலத்தைத் திருப்பிப் பெற்று அக்காலத்தில் மேற்படி அந்தே பயிர்ச் செய்கையாளரை விவசாயத் தொழிலாளியாகச் சேர்த்துக் கொண்ட சந்தர்ப்பங்களுமுண்டு. இது மேற்படி அந்தே பயிர்ச் செய்கையாளரின் அந்தே உரிமையை முறித்து விடுகிறது. அதே வேளையில் நிலச் சொந்தக்காரர் தனது நிலத்தை நெற் காணிப் பதி

வேட்டில் தனது பெயரில், தானே விவசாயி யெனவும் சொந்தக்காரர் எனவும் பதிவு செய்து கொள்கின்றனர்.

(6) மத்திய மாகாண கிராமங்களில் கூட்டு அந்தே எனப்படும் ஒரு விசேட அந்தே முறை செயற்படுகிறது. சாதாரண அந்தே முறையில் நிலச் சொந்தக்காரன் அந்தே பயிர்ச் செய்கையாளருடன் ஒன்றாக வயலில் வேலை செய்வதில்லை. கூட்டு அந்தே முறையில் நிலச் சொந்தக்காரரும் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ கூட்டு அந்தே பயிர்ச் செய்கையாளருடன் கூட்டாக இணைந்து வேலை செய்வார். அறுவடையைப் பங்கிடும் முறையும் சாதாரண அந்தே முறையில் கடைப் பிடிக்கப்படும் முறையை விட கூட்டு அந்தே முறையில் வேறுபடுகின்றது. விவசாய நடவடிக்கையில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் அனைத்திலும் சொந்தக்காரரே தீர்மானம் மேற்கொள்வார். இந்த முறையின்படி அந்தே பயிர்ச் செய்கையாளருக்கு மேற்படி காணியில் எவ்வித அந்தே உரிமையும் கிடையாது. ஒன்று அல்லது இரு போகங்களுக்கு நெற்காணியை குத்தகைக்குக் கொடுப்பதும் கிராமங்களில் பிரபல்யமான ஒரு செயல் முறையாகும். இத்தகைய நெற் காணிகளைக் குத்தகை எடுப்போர் பற்றி ஆராயும் பொழுது ஏற்கனவே பிரத்தியேக அந்தஸ்த்து நிலைக்குத் தம்மை உயர்த்திக் கொண்ட கிராமிய உயர் வர்க்கத்தினரை மேலும் செல்வமுறச் செய்வதற்கே இம் முறை உதவுகின்றது. கிராமங்களில் அத்தகைய காணிகளைக் குத்தகை எடுக்கக்கூடிய பணமுடை போராக இந்த கிராமிய உயர் வகுப்பினர் மாத்திரமே உள்ளனர் என்பதும் தெளிவாகியுள்ளது. ஒரு அவசர தேவையைச் சமாளிப்பதற்காக வேண்டி, சிலர் தமக்குச் சொந்தமாகவுள்ள ஒரு சிறு நெற் காணிப் பரப்பைக் கூட கிராமிய உயர் வகுப்பினரிடம் அடகுவைத்த சூழ்நிலைகளும் காணப்பட்டுள்ளன. ஒரு நெற் காணியில் விவசாயம் செய்வதற்கான விவசாயியின் உரிமையை மாற்றுவதற்கான ஒரு ஒப்பந்தம் இச் சந்தர்ப்பங்களில் எழுதப்படுவதுண்டு. மேற்படி விவசாயியால் சொந்தமாக வைக்கப்பட்டிருந்த மேற்படி நிலத்தின் முழு அறுவடையையும் அவ் விவசாயி அதனை அடகு வைத்த போது வாங்கிய பணத் தொகைக்கு வட்டியாகச் சென்று விடும். மேற்படி பணத்தொகை முற்றாக திருப்பிச் செலுத்தப்பட்ட பின்னரே ஒப்பந்தம் இரத்து செய்யப்படும். அது வரைக்கும் மேற்படி காணியில் விவசாயம் செய்யும் முழு உரிமையும் அதனை அடகு எடுத்த உயர் வகுப்பாளரையே சாரும்.

இவ்விரு சந்தர்ப்பங்களிலும் நிலத்தின் உண்மையான உரிமையாளன் மேற்படி நிலத்தில் பயிர் செய்வதற்காக ஒரு விவசாயத் தொழிலாளியாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறான். ஆனால் இவ் விதம் தொழிலாளியாக இருந்து அவன் சம்பாதிக்கும் வேதனம் அவனது வாழ்க்கைச் செலவுகளுக்கே போதாததால் இறுதியில் மேற்படி காணியை அடகு மீட்க முடியாத நிலையில் அவ்விவசாயி தனது சிறு காணித் துண்டையும் அக் கிராமிய உயர்வகுப்பினருக்கு விற்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

அவர்களது வெளிப்புற, மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகள் என்னவாயிருந்த போதிலும் பல கிராமங்களில் இந்த உயர்வகுப்பினர் தனிக் கோஷ்டியாகச் செயல்படுவதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உதாரணமாக, குடியேற்றக் (கல்லோயா குடியேற்றத் திட்டத்தில்) கிராமமொன்றில் சில குடும்பங்கள் தமது வெளிப்புற அரசியல் வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளாது ஒரு உயர் வகுப்புக் கோஷ்டியாக ஒன்று சேர்ந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வுயர் வகுப்புக் குழுக்கள் கிராமத்தில் தமது சமூக பொருளாதார அந்தஸ்த்துக்களையும், ஏனைய கிராம வாசிகள் தம்மில் தங்கியிருக்கும் சூழ்நிலைகளையும் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்வதற்காக அரசியலைப் பயன்படுத்துகின்றனர். இக் குழுக்களின் உறுப்பினர் மத்தியில் நிலவும் நெருக்கமான தனிப்பட்ட உறவுகளை மூடிமறைப்பதற்கான மேற்பூச்சாகவே இவர்களிடையேயான சித்தாந்த வேறுபாடுகள் அமைகின்றன. உதாரணமாக, பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்ற ஒரு குடியேற்றவாசி தனது நெல் வயலை ஒரு போகத்துக்கு யாருக்காயினும் குத்தகைக்குவிட விரும்பினால் இவ் வுயர் வகுப்பினர் தங்களுக்குள் ஒன்றாகப் பேசி அதனை மிகக் குறைந்த தொகையில் தங்களுள் ஒருவர் பெறக்கூடியதாக அதன் குத்தகைப் பெறுமதியை ஒருவருக்கொருவர் குறைத்தே கேட்பர்.

மத்திய மாகாணத்தில் ஆய்வுக் கெடுத்துக் கொள்ளப்பட்ட இரு கிராமங்களில், உயர் வகுப்பினர், தமது விருப்புக்களுக்கேற்றதாக அரசியல் அமைவதற்கு நிலவுரிமையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி இரு கிராமங்களிலும் அரசியலில் மிகவும் துடிப்பாக செயல்படுபவர்கள் உயர் வகுப்பு நிலவுரிமையாளரின் நிலவாடகையாளராவர். அவர்கள் சமூக ரீதியாக தாழ் நிலைக்குத் தள்ளப்பட்ட குலத்தைச் சேர்ந்தவர்களுமாவர். அரசியலில் அதிகாரம் படைத்தோரும் அதே வேளையில் தமது அரசியல் அதிகார நிலையை கிராமிய சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஏங்குபவர்களுமான இந்நபர்களை மேற்படி உயர்வகுப்பினர் தமது இல்லங்களில் பிரித், அன்னதான வைபவங்களுக்கு அழைப்பது போன்ற மிகவும் மாயமான சமூக அந்தஸ்த்தை வழங்கி சலுகையளிக்கின்றனர். மேலும் அவர்களைத் தமது நிலங்களின் வாடகையாளர்களாகத் தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் அவர்கள் மீது பொருளாதாரக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கின்றனர். இதற்கு பிரதியுபகாரமாக மேற்படி உயர் வகுப்பினருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளல், அரசியல் வாதிகளுடன் தொடர்பு வைத்தல் போன்ற அவர்களது சமூக - பொருளாதாரத் தேவைகளை இந்நபர்கள் திருப்தி செய்ய முயற்சிக்கின்றனர்.

பிரமாண்டமான நிலச் சீர்திருத்த மாற்றங்களின் மூலம் ஏற்பட்ட சூழ்நிலைகளில் தமது சமூக பொருளாதார அந்தஸ்த்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கிராமிய உயர் வகுப்பினர் பிரயோகிக்கும் கட்டுப்பாடுகளின் சில அம்சங்களை மாத்திரமே இக் கட்டுரையில் எடுத்துக் காட்ட முயன்றேன்.

# திராய் நகர போலிக் குதிரை


— பேராசிரியர் அமுல்ய குமார், கே. என். ரெட்டி

அபிவிருத்தியுற்ற நாடுகளிலிருந்து அபிவிருத்தியுறும் நாடுகளுக்கான தொழில் நுட்ப இடமாற்றத்தின் ஆபத்து, அண்மைக் காலங்களில் பல சர்வதேச மகாநாடுகளின் விவாதங்களுக்கான கவனக்குவியமாக அமைந்துள்ளது. பங்களூரில் உள்ள அசேதன மற்றும் பௌதிக இரசாயன இந்திய விஞ்ஞானக் கழகத்தின் பேராசிரியர் ரெட்டி இங்கு இக் கட்டுரையில் மேற்படி தொழில் நுட்ப இடமாற்றத்தினை திராய் நகர போலிக் குதிரைக்கு ஒப்பிடுகிறார். தனது ஆய்வுக்கு உதாரணமாக அவர் இந்தியாவை எடுத்துள்ளார். ஆனால் அவர் கூறும் பல விடயங்கள் அபிவிருத்தியுறும் நாடுகள் பலவற்றிற்கும் பொருந்தக்கூடியனவாகும். இந்திய திட்டக் கமிஷனின் பத்திரிகையான ''திட்டம்'' பத்திரிகையின் 1976 செப்டம்பர் இதழில் இது பிரசுரமாகியுள்ளது.

பெரும்பாலான அபிவிருத்தியுறும் நாடுகளில் கடந்த சில தசாப்தங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த கைத்தொழில் மயமாக்கு முறைகள் அவர்களது சமுதாயத்தில் அசமத்துவத் தன்மையை மேலும் அதிகரித்துள்ளதோடு அச் சமூதாயத்தை உள்ளோர், இல்லாதோராக இருதுருவப்படுத்தியுள்ளது.

பெரும்பாலும் எல்லா விடயங்களிலும் அது ஒரு இரட்டை அமைப்புச் சமுதாயமாக திரண்டுபட வழிகோலியுள்ளது. 10-20 சத வீதமானோர் உயர் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவோராயுள்ளனர். அவர்களுள் கைத்தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், நிலப் பிரபுக்களைத் தவிர அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர், நிருவாக சேவையினர், செல்வந்த விவசாயிகள், டாக்டர்கள், விஞ்ஞானிகள், எந்திரிகள் போன்ற உத்தியோகக் கல்வியாளர்கள், சொகுசு ஊழியர்களின் பெருந் தொகையினர் என்போர் உள்ளடங்குவர். கீழ் மட்டத்திலுள்ள ஏனைய 80 முதல் 90 சதவீதமானோர் கிராமிய ஏழைகளாவர். உயர் வகுப்பினரே பெரும்பாலும் அரசியல் கட்சிகளை நடத்துகின்றனர். எனவே அரசியல் தீர்மானம் மேற்கொள்ளும் அமைப்புக்களையும் அவர்களே பெரும்பாலும் கட்டுப்படுத்துகின்றனர். சந்தைப் பொருளாதாரம், சமூக சேவைகள்; கல்விமுறை என்பன உயர் வர்க்கத்தினராலேயே ஆதிக்கம் செலுத்தப்படுகின்றன. ஏழைகள் (குறிப்பாக 40 - 50 சதமானோர் வறுமை நிலைக்கும் கீழ்ப்பட்டோர்) அத்தியாவசியத் தேவைகள், பொருட்கள், சேவைகள், அறிவு என்பன தொடர்பாக மிகத் தாழ்ந்த வறுமை நிலையில் விடப்படுகின்றனர். மேலும் இரட்டை அமைப்புச் சமுதாயமாக இருதுருவப்படுத்தல் கிராமிய அபிவிருத்தித் தேக்கமானது தரித்திரமடைதல், பிரமாண்டமான அளவில் கிராமிய வேலையின்மை, நகர்ப்புறங்களை நோக்கி குடிபெயருதல், மோசமான சென்மதி நிலுவைபோன்ற தீங்குகளுடன் தொடர்புடையதாகும். எதிர்பார்க்கப்பட்டவாறு கைத்தொழில் வளர்ச்சி கிராமியப் புறங்களுக்கு பரவி, மக்களின் வருமானங்களிலான அசமத்துவ நிலை குறைவடைவதற்குப் பதிலாக மேற்படி தீங்குகளையே இவ்வமைப்பு முறை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

அபிவிருத்தியுற்ற நாடுகளின் (சிறந்த ஒரு பதப் பிரயோகத்திற்காக மேற்குலக தொழில் நுட்பம் எனக் கூறலாம்) தொழில் நுட்பத்தையே முற்றாக அடிப்படையாகக் கொண்டு தமது கைத்தொழில்மய முறையினை அமைத்துக் கொண்டமையே இந் நாடுகளின் பரிதாப நிலைக்கான தொழில் நுட்ப அடிப்படையாகும். முன்னேறிய நாடுகளில் கிடைக்கக்கூடிய மூலதனம், உழைப்பு மற்றும் அபிவிருத்தியுறும் நாடுகள் மீது திணிக்கப்பட்ட, மூலப்பொருள்களுக்கான, குறைந்த விலை என்பவற்றிற்குப் பொருந்தக்கூடியதாக விசேடமாக வகுக்கப்பட்ட மேற்குலக தொழில் நுட்பம், மூலதனத்தையும் சக்தியையும் தூண்டுவதாகவும் பிரதானமாக பெரிய சந்தைகளுக்குப் பொருட்கள் வழங்குற்வகாக உழைப்பைக் குறைக்கவும், தனி நபர் நுகர்வுக்கு பொருட்கள் உற்பத்தி செய்யவும் நோக்கம் கொண்டமைந்துள்ளது. உழைப்பினை மிச்சப்படுத்தும் மூலதன மற்றும் எரிபொருள் செறிவுமிக்க மேற்குலக தொழில் நுட்பம், அபிவிருத்தியுறும் நாடொன்றுக்குள் அறிமுகப்படுத்தப்பட்டால் அந்நாடுகளில் உள்ள வரையறைக்குள்ளடங்கிய மூலதனமும் எரிபொருளும் ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்யும் நகர்ப்புறத் தொழிற்சாலைகளில் குவியும் போக்கினையுடையன. எனவே பொது மக்களின் நுகர்வுக்கான பொருளுற்பத்தி, சேவைகள் மற்றும் கிராமிய பொருளாதாரம் ஆகியவற்றிலிருந்து அவை மறைந்து விடுகின்றன. இதே வேளையில் தொழில் வாய்ப்புகளின் வளர்ச்சியும் கூடுதலாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் விளைவு என்னவெனில் நகர்ப்புறச் செல்வந்தர்க்கும் கிராமிய ஏழைகளுக்குமிடையில் வாழ்க்கைத் தரங்கள், வாய்ப்புக்கள், வெளி நோக்குப் பார்வைகள் ஆகியவற்றிலான வேறுபாடுகள் மேலும் உச்சநிலையடைகின்றன. எனவே அபிவிருத்தியுறும் நாடுகளில் சமுதாயங்கள் இரட்டை அமைப்புச் சமுதாயங்களாக இருதுருவப்படுதலை தூண்டிய கருவியாகத் திகழ்ந்தது மேற்குலக தொழில் நுட்பமேயாகும்.



திராய் நகர போலிக் குதிரையினுள் மறைந்து படைவீரர்களும் ஆயுதங்களும் வந்திறங்கியது போன்று மேற்குல தொழில் நுட்பம் அபிவிருத்தியுறும் நாடுகளுக்கு பாதகமாகவே செயல்படுகின்றது என்பதை எமது ஓவியர் சித்தரிக்கின்றார்.

அத்தகைய ஒரு அபிவிருத்தி ஆச்சரியத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தொழில் நுட்பமானது பரம்பரைக் கூறுகள் போன்றதாகும்; அது தான் உற்பத்தியாகி வாழ்ந்த சமுதாயத்தின் பண்புகளைத் தாங்கி நிற்பதோடு, தனக்குச் சாதகமான பொருளாதார அரசியல் சமூக சூழ்நிலைகள் இருக்கும் பட்சத்தில், அத்தகைய சமுதாய மாதிரியைத் தோற்றுவிக்கவும் முயலும். அபிவிருத்தியுறும் நாடொன்றில் இச் சூழ்நிலைகள் ஒரே சீரான, சாதகமானதாக அமைவதில்லை. நகர்ப்புறப் பகுதிகளிலேயே இம்மாதிரி யமைப்பு முறை வெற்றி பெறுகின்றது. எனவே மேற்குலக முறைத் தொழில் நுட்பத்தை அபிவிருத்தியுறும் நாட்டுச் சூழ்நிலை யொன்றிற்குள் கையாளுதல் செல்வமிக்க கைத்தொழில் நாடுகளுக்கும் கிராமிய ஏழைகள் மலிந்த நாடுகளுக்கு மிடையிலான ஒரு வர்த்தகப் பேரமாகக் கருதப்படல் வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட மேற்குலக தொழில் நுட்பம் கையாளப்படல், அபிவிருத்தியுறும் நாடொன்றின் உயர் வர்க்கத்தினரையும் அவர்களது நலன்களையும் நிலைத்து நிற்கச் செய்வதற்கான ஒரு தீர்மானமென்பதும், அரசியல் பொருளாதாரத் துறையிலே அது நடு நிலைமை வகிக்காத ஒன்று என்பதும் நாம் மேற்கொள்ள வேண்டிய முடிவுகளாகும். அதன் பெரும் தொகையான நன்மைகளை உயர் வர்க்கத்தினரே நேரடியாகப் பெறுகின்றனர். எனவே அபிவிருத்தியுறும் நாடொன்றில் பெரியளவிலான கைத்தொழில்களுக்கான முகாமையாளர்கள், தொழில்நுட்ப ஆளணியினர், பயிற்சி பெற்ற தொழிலாளர், இவை யெல்லாவற்றுக்கும் மேலாக மேற்படி ஆடம்ப உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை ஆகிய அனைத்துமே நாட்டின் மொத்த சனத்தொகையின் 10-20 சதவீதமானோரின் மத்தியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகிறன. அதற்குத் தேவையான மூலதனத்தை அது, உச்ச வகுப்பினரான 5 சத வீதத்துக்குட்பட்டோரிட மிருந்தும் அரசிடமிருந்தும் (நேரடியாகவோ, நிதி நிறுவனங்கள் மூலமாகவோ) பெறுகின்றது.

அபிவிருத்தியுறும் நாடுகளில் மேற்குலக தொழில் நுட்பத்தின் தாக்கமொன்றே, மேற்படி நாடுகள் மாற்று முறைத் தொழில் நுட்பங்களைக் கையாள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. இதன் சிறப்பம்சங்கள், அபிவிருத்திக்கான மாற்று உபாயத்திலிருந்து பெறப்படல் வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை இதன் ஆரம்பம் இத் தகவல்களின் அடிப்படையில் அமைய வேண்டும். இந்தியாவின் 80 சதவீத மக்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். 60 சதவீதமானோருக்கு தினமொன்றுக்கு தலைக்கு 1 ரூபாவுக்குக் குறைவான செலவே உள்ளது. 2 கோடி மக்கள் தொழிலின்றி உள்ளனர். 10 கோடி மக்கள் நிறைவில்லாத் தொழில்களில் உள்ளனர். சராசரி இந்தியன் ஒருவன் வேலையற்றவனாக நிறைவில் தொழில் புரிவோனாக வறுமையினால் பாதிக்கப்பட்ட கிராமவாசியாக இருப்பதால் அவனது அடிப்படைத் தேவைகளை திருப்தி செய்ய வேண்டுமாயின் கிராமிய பகுதிகளில் தொழில் வாய்ப்புக்களை அதிகம் ஏற்படுத்தும் உபாயங்கள் கையாளப்படல் வேண்டும்.

பொதுமக்களின் நுகர்வுக்கு அதிகம் தேவைப்படும் வகையான பொருட்களை செலவின்றி உற்பத்தி செய்யும் சிறு சிறு உற்பத்தி அலகுகள் நாடெங்கும் நிறுவப்படல் வேண்டும். அது மீளவும் பயன்படுத்தக்கூடிய உள்ளூர் மூலப் பொருட்களையே பயன்படுத்துவதாக அமைய வேண்டும். அதிக பயிற்சிகள் தேவையற்றதும், தனது பாரம்பரிய கைவினைத் திறமையையே சிறிதளவு அபிவிருத்தி செய்து உயர்ந்த விளைவு பெறக்கூடியதாய் அமைய வேண்டும். அது வெளிநாட்டுச் சந்தையொன்றை எதிர்பாராது உள்ளூர்ப் பாவனைக்காக உற்பத்தி செய்யப்படுவதோடு அதில் மக்களின் அதிகரித்த பங்களிப்பு, கட்டுப்பாடுகளுக்கும் வழியேற்படக்கூடிய வாய்ப்புக்கள் நிலவ வேண்டும். இத்தகைய தொழில் நுட்பத்தை மாற்றுத் தொழில் நுட்பம் அல்லது ''அசமத்துவம் குறைக்கும் மக்கள் தொழில் நுட்பம்'' எனக் கூறலாம். இத்தகைய தொழில் நுட்பத்தின் பிரதான நோக்கினை இப்பதம் விளக்கும். ஆனால் மேற்குலக தொழில் நுட்பத்தினால் இந் நோக்கங்களை அடைய முடியாது. எவ்வாறாயினும், மாற்றுத் தொழில் நுட்ப மொன்றைத் தெரிவு செய்யும் பொழுது உணர்ச்சிகளுக்கு மாத்திரம் இடமளித்து தெரிவு செய்யப்படும் ஒன்றாக அது அமையாது, செலவுகளையும் மனதில் கொண்டு அமைய வேண்டும். அதன் பல்வேறு பொருளாதார தாக்கங்கள் பற்றி ஆராயப்படல் வேண்டும். ஆனால் இந் நடைமுறையின் போது ஏற்படக்கூடிய இரு தவறுதல்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இதில் முதலாவது தவறு என்னவெனில் அபிவிருத்தியுறும் நாடுகளைப் பொறுத்தவரையில் முற்றாகப் பொருந்தக் கூடியதான விதிகளை கண்டனக் கண்ணோக்கமின்றி நாம் ஏற்றுக் கொள்ளலாகும். இரண்டாவது தவறு என்னவெனில் நிதி முறையிலான இலாப நன்மைகளை மாத்திரம் மனதிலிருத்தி சமூக நலன்களையும் செலவுகளையும் மனதில் கொள்ளாத தனியார்துறை மூலதன தொழில் நுட்பங்கள் பற்றிய பொருளாதார பரிசீலனையின் அடிப்படையாகும். ஒரு தொழில் நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கும் போது ஆராயப்பட வேண்டிய செலவு — இலாப பரிசீலனைகள் சந்தை விலைகளின் அடிப்படையிலமையாது சமூக கண்ணோட்டத்தில் உண்மையான மூலதனம், உழைப்பு, அந்நியச் செலாவணி என்பவைகளை அடிப்படையாகக் கொண்டமைதலே சிறந்தது. மாற்றுத் தொழில் நுட்பம் நேரடிப் பயனைத் தரவல்லது.

உதாரணத்துக்கு நாம் எண்ணெய், நிலக்கரி ஆகியவற்றிலிருந்து செயற்கையாகவும், கால்நடைகளின் சாணம், அழுகிய இலைகுழைகள், மலச்சேமிப்பு தேங்கி நிற்கும் சேறு ஆகியவற்றிலிருந்து இயற்கையாகவும் தயாரிக்கக்கூடிய உரப்பசளையை எடுத்துக் கொள்வோம். இந்தியா போன்ற எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளில் உரப் பசளைத் தயாரிப்புக்குப் போதியளவு மண்டியெண்ணை இல்லாமையும், மண்டி யெண்ணையின் விலையுயர்வும், இந்தியாவில் தற்போது திட்டமிடப்பட்டு வரும் உரப்பசளை ஆலைகள் போன்றவற்றில் வருடாந்தம் 230,000 தொன் நைதரசன் வாயுவைத் தயாரிப்பதற்கு எவ்வளவு பன்மடங்கு செலவு ஏற்படுத்துகின்றது என்பதனை கிராமிய மட்டத்திலான தாவர வாயு உரப்பசளைத் தயாரிப்புடன் ஒப்பிட்டு அறிந்து கொள்ளலாம். (அட்டவணை 1 ஐப் பார்க்க)

தாவர உயிர்ப் பொருள் வாயு உற்பத்தியின் மூலம் உற்பத்தி 26,156 கிராமங்களுக்கு பரவலாக்கப்பட்டது என்பதும், அது ஒரு இடத்தில் குவியவில்லை யென்பதும் அட்டவணை 1 இன் மூலம் தெளிவாகிறது. மூலதனம் பற்றாத ஒரு நாட்டிற்கு 1 கோடி 50 லட்சம் டாலர் மூலதனத்தைச் சேமிக்கின்றது. 7 கோடி டாலர் அந்நியச் செலாவணியை மிச்சப் படுத்துகிறது. 130 மடங்கு வேலை வாய்ப்புக்களைத் தருகிறது. கூடிய வீதம் பலன் தருகின்றது. உரப் பசளைகள் நுகரப்படும் இடங்களிலேயே அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் போக்குவரத்துச் சுமையும் இல்லாது விடுகின்றது. நகரிலிருந்து கிராமத்துக்கு உரப் பசளை கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. பாக்கட்டுப் படுத்தல், போக்குவரத்து, சந்தைப் படுத்தல், விளம்பரம் போன்றவற்றிற்கான மேலதிக செலவுகள் இல்லாது போவதால் ஏழைக் கிராமவாசிகளை அம் மேலதிகச் செலவுப் பளுக்கள் தாக்குவதினின்றும் அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். மேலும் உரப்பசளையைப் பொறுத்தவரை, ஒரு கிராமம் தன்னில் சுய தங்கியிருத்தலுக்கும் இது வழிகோலுகிறது. சுமார் 500 நபர்களினதும் 250 கால்நடைகளினதும் மலங்களை மாத்திரம் (இதிலும் 25 சதவீதமே திறமையாகச் சேகரிக்கப்படுகின்றது எனக் கணித்தாலும்) சேகரித்தால் தற்போது இந்திய கிராமிய நிலங்களுக்கு ஒரு ஹெக்டயர் பரப்புக்கு 12 கிலோகிரும் வீதம் வழங்கப்படும் நைதரசன் உரப்பசளை நுகர்வினை 2 மடங்காக அதிகரித்து சுமார் 290 ஹெக்டயர் நிலப் பரப்புக்கு உரப்பசளை வழங்கலாம். தாவர உரப்பசளை அமைப்பு முறையின் சிறப்பம்சம் என்னவெனில் அது சக்தியைத் தருகின்றதேயன்றி அதற்காக சக்தியை நுகர்வதில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

அட்டவணை 1

மேற்குலக தொழில் நுட்பம் மூலமும், மாற்றுத் தொழில் நுட்பம் மூலமும் 230,000 தொன் நைதரசனை வருடாந்தம் தயாரித்தல்

| | மேற்கு தொ. நு. | மாற்று தொ. நு. |
|---|---|---|
| தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 1 | 26,150 (ஒரு ஆலைக்கு வருடாந்தம் 8.8 தொன் வீதம்) |
| மூலதனச் செலவு .. | சுமார் 14 கோடி டாலர் | சுமார் 12.5 கோடி டாலர். (ஒரு ஆலைக்கு 4,825 டாலர் வீதம்) |
| அந்நியச் செலாவணி .. | சுமார் 7 கோடி டாலர் | — பூச்சியம் — |
| தொழில் வாய்ப்பு .. | 1000 பேர்கள் | 130,750 பேர்கள் (ஒரு ஆலைக்கு ஐவர் வீதம்) |
| சக்தி .. .. | 1 லட்சம் மெகாவாட் நுகர்வு | 63.5 லட்சம் மெகாவாட் சக்தி உற்பதி |

# அதிக உணவு அதிக பட்டினியைக் குறிக்கின்றது

— பிரான்ஸிஸ் மூவர் லப்பேயும் ஜோஸப் கொல்லின்ஸும்

எமது தற்போதைய பொருளாதார அமைப்பு மனித இனத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் படுதோல்வி கண்டுள்ளது என்பதை வெளிக்காட்டுவதற்கு இன்று நாம் காணும் பரிதாபமான பட்டினிக்கோலம் பயன்படுத்தப்பட வேண்டுமென இக் கட்டுரையாளர்களான, உணவு மற்றும் அபிவிருத்திக் கொள்கைக்கான அமெரிக்க நிறுவகத்தின் இணை-பணிப்பாளர்கள் பிரான்ஸிஸ் மூவர் லப்பே, ஜோஸப் கொல்லின்ஸ் ஆகியோர் கருத்து வெளியிடுகின்றனர். உணவில் சுய தங்கியிருத்தலுக்கான அடிப்படைத் தடை, உணவுற்பத்தி நடவடிக்கைகளில் பெரும் பான்மையான மக்களின் கட்டுப்பாடும் பங்காற்றலும் இல்லாமையேயாகும் என அவர்கள் வாதாடுகின்றனர்.

உற்பத்திப் பற்றுக்குறையின் ஒரு பிரச்சினையாகவே பட்டினிக்கு தொடர்ந்தும் வரைவிலக்கணம் கூறப்படுகிறது. எனவே மக்கள் பட்டினியிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் போதிய உணவில்லை யென்பதாகவே இருக்க வேண்டும். குறைந்தது கடந்த முப்பதாண்டுகளாக பட்டினிக்கெதிரான போராட்டம், அதிக உணவு உற்பத்தி செய்யும் இலக்கினையே கடைப்பிடித்து வந்துள்ளது.

இதன் காரணமாக பட்டினியை அணுகும் செய்தி வெளியீடுகள் மூலம் பெரும்பாலும் நாம் தினமும் சிகிச்சை யளிக்கப்படுகிறோம். பெற்றோலியத்திலிருந்து புரதம், கடற்பூண்டுகளிலிருந்து அறுவடைகள், என ஒன்றன் பின் ஒன்றாக உணவுத் துறையில் புதுப் புது கண்டுபிடிப்புகளை யிட்டு நாம் அறிவிக்கப்படுகிறோம். பட்டினியிருப்போருக்கு உணவு வழங்குவதற்காக உணவின் நுகர்வு அளவைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்ற வேண்டுகோள்கள் கூட இன்று ''வாரத்துக் கொரு திராட்சைப் பழத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்'' என வேண்டுமளவுக்கு குறுகியுள்ளது.

பலருக்கு, உற்பத்தி அணுகுமுறை பயன்தருகிறது. இன்று உண்மையிலேயே கூடுதல் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. பசுமைப் புரட்சியின் மூலம் இன்று ஆசியாவின் தானியக் குதங்கள் 2 கோடி தொன் மேலதிக தானியங்களால் நிரம்பியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மெக்ஸிகோவில் கோதுமை அறுவடை இரண்டு தசாப்தங்களில் மும்மடங்காக அதிகரித்தது.

ஆனால்இன்று முன்னெப்பொழுதுமில்லாத அளவு மக்கள் தொகையினர் பட்டினி கிடக்கின்றனர். நாம் இது குறித்து இரண்டு முடிவுகளுக்கே வரக்கூடியதாய் விடப்பட்டுள்ளோம்.

* ஒன்றில், உற்பத்தியில் கவனம் செலுத்தியது சரி; ஆனால் இந்த திடீர் உற்பத்தி அதிகரிப்புகளையும் சனத்தொகை அதிகரிப்பு வேகம் தோற்கடித்து வருகிறது.
* இன்றேல், நாம் நோய் கண்டுபிடித்த முறை தவறானது. பட்டினிக்குக் காரணம் பற்றாக்குறையல்ல; எந்த பாரிய அளவில் தான் உற்பத்தி அதிகரிப்பு ஏற்பட்டாலும் அதனால் இப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது.

### எல்லாருக்கும் உணவளிக்கப் போதும்

உலக தானிய உற்பத்தி பற்றிய உண்மைத் தகவல்கள், பட்டினிக்கான காரணம் சனத்தொகை அதிகரிப்பு உணவு பற்றாக் குறையல்ல என்பதைக் காட்டுகிறது. தற்போதைய உலக உணவு தானிய உற்பத்தி பூமியிலுள்ள ஒவ்வொருவருக்கும் போதுமான அளவுக்கும் அதிகமாக உணவளிக்கப் போதியதாகும். 1972 முதல் 1973 வரையிலான உணவு ''பற்றாக்குறை'' வருடத்திலும் கூட, உணவு ''நிறைய' இருந்த 1960 ம் வருடம் போன்ற வருடத்தை விடவும் 9 சதவீதம் கூடுதலாக தானியம் இருந்தது. உற்பத்தி போதாமை, நிச்சயமாக பிரச்சினையேயல்ல.

உண்மையிலேயே அதிகரித்த உற்பத்தியில் குறுகிய கவனம் செலுத்தியதானது பட்டினிப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது எனின் அது புதிராகவே இருக்கும். பெரும்பாலான மக்களின் அறிவுக்கு இயைந்ததாக இது இல்லாததன் காரணமாக இவ்வுண்மையை நாம் எமது ஆராய்ச்சிகளின் மூலம் சரிபார்க்கவும், மீளச் சரிபார்க்கவும் விரும்பினோம்.

நாம் எம் ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டு கொண்டதென்ன? ''முற்போக்கு'' விவசாயிக்கு உரப்பசளை, நீர்ப்பாசனம், களைகொல்லி, மற்றும் இயந்திரங்கள் போன்ற நவீன இறக்குமதித் தொழில் நுட்பங்களை வழங்கும் விவசாய ''நவீன மயமாக்கலுடன்'' உற்பத்திக் கவனம் அதி விரைவாகவே இணைந்து விடுவதையே கண்டோம். அபிவிருத்தியின் இந்த வரைவிலக்கணத்தையே பசுமைப் புரட்சியின் விதைகள் மீளணிப்படுத்துகின்றன. ஏனெனில் இந்த உற்பத்திகளிலேயே அவற்றின் கூடுதல் அறுவடை தங்கியுள்ளது. இவ்விதமாக விவசாய முன்னேற்றம், இதுவரை பயன்படுத்தப்படாது வீணாகிக் கொண்டிருக்கும் பிரமாண்ட அளவிலான மனித சக்தியை பயன்படுத்தாது அதற்கு மாறாக ஒரு குறுகிய தொழில் நுட்பப் பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது.

''எச் செலவிலாயினும்'' கூடுதல் உற்பத்தியே வேண்டுமெனத் தூண்டும் அரசாங்கங்கள், சர்வதேச கடன் வழங்கும் முகவராண்மைகள் வெளிநாட்டுதவித் திட்டங்கள் என்பன இந்த நவீனமயமாக்குதலுக்கான பாரிய பணச் செலவினை மிகவும் விருப்பத்தோடு குறை நிரப்புகின்றன.

### பணம் எங்கே ?

விளைவு என்ன? இவ்விதம் பொது நிதி விரயம் விவசாயத்தினை பணம சேர்ப்பதற்கான ஒரு நடைமுறையாக மாற்றியமைத்துள்ளது. சில வேளை பெரும் நிதியீட்டப்படுகிறது. இலாபமடைய வேண்டுமாயின் ஒருவருக்கு நிலம், பணம், கடன் வழங்கப்படுவதற்கான தகைமை, அரசியல் செல்வாக்கு என்பன இருத்தல் வேண்டும். இது ஒன்றே உலகெங்குமிருந்து பெரும்பாலான விவசாயிகளை இல்லாது செய்து விடுகின்றது.

திட்டமிடப்பட்டு விவசாயம் செய்யப்படும் சிறு விவசாய நிலங்கள் பெருந் தோட்டங்களை விட கூடுதல் உற்பத்தியைத் தருவதோடு குறைந்த செலவிலான உற்பத்திகளையே பயன்படுத்துகின்றன என்ற உலகெங்கனும்

பரந்த ஆதாரத்தைப் புறக்கணித்து விட்டு அரசாங்க உற்பத்தித் திட்டங்கள் எல்லாம் சிறுதோட்ட விவசாயிகளை (நிலமற்றோர் பற்றி கூறவே தேவையில்லை) மறந்தே திட்டமிடுகிறது.

பெரும் நில உரிமையாளர்கள் தாம் முன்னர் வாடகைக்கு கொடுத்த நிலங்களை திருப்பி எடுத்துக் கொள்வதற்கு இந்த பெருமளவு இலாபம் எனும் ஆசை தூண்டியுள்ளது. தங்களது புதிய கூடுதல் இலாபத்தை அண்மையிலுள்ள சிறு விவசாயிகளின் நிலத்தை, தமது பெருநிலத்தோடு சேர்த்துக் கொள்வதற்காகக் கொள்வனவு செய்யப் பயன்படுத்துகின்றனர். அபிவிருத்தியடையாத உலகெங்கணும் நிலமற்றோர்களில் 30 முதல் 60 சதவீதமானோர் விவசாயிகளே. உற்பத்தி உபாயத்தின் மனித உற்பத்திகளான கோடிக்கணக்கான நிலமற்ற அகதிகளை இது கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. வயல் வேலை இல்லாது போன அவர்கள் எதுபோன்றே நம்பிக்கை கைவிடப்பட்ட நகர்ப்புற சேரிகளில் தொழில் தேடி, இணைந்து கொள்கின்றனர்.

**பெரிய விவசாய வர்த்தகம்**

தொழில் தேடி வரும் நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அதே வேளையில் தொழில் வாய்ப்புக்களும் குறுகிக் கொண்டே போகின்றன. பெருங்காணி உரிமையாளர்களோ தொழிலாளர்களினதோ அன்றி கூட்டு விவசாயிகளினதோ உதவியின்றி தாமாகவே விவசாயம் செய்து உற்பத்தி முழுவதையும் வேறு யாருடனும் பகிராது தாமே சொந்தமாக்கிக் கொள்வதற்கு இயந்திரமயம் உதவுகின்றது. வேலையில்லாப் பிரச்சினை வளர்ந்து வருகின்றபோதும் கூட அரசாங்கங்கள் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்காக மானியங்கள் கொடுத்தும் இயந்திரமயப் படுத்தப்பட்ட பண்ணைகளைக் காணிச் சீர்திருத்தச் சட்டங்களிலிருந்து விதிவிலக்களித்தும் இயந்திரமயப்படுத்தலுக்கு உற்சாகமளித்து வருகின்றன.

கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்தி, உரப்பசளை, உயர் விளைச்சல் விதைகள், களைகொல்லிகள், இயந்திரங்கள் என்பவற்றின் அடிப்படையிலான விவசாய உற்பத்தியானது, பாரம்பரியமாக வயல் வேலைகளுக்கான சம்பளம், வாடகை என்பன பண்ணை உற்பத்திகளிலிருந்தே வழங்கப்பட்டு வந்ததை இப்பொழுது பண அடிப்படையிலான தொடர்புகள் மாற்றீடு செய்து விட்டன என்பதை தவிர்க்க முடியாதவாறு வெளிக் காட்டுகின்றன. பணமாக நில வாடகை செலுத்தப்படுவதாயின் வாடகை எடுப்போர் தாம் பயிர் செய்யவும் முன் கடனாளியாக வேண்டியிருக்கும். சில வேளைகளில் அது பெரும் வட்டி வீதத்திலாயிருக்கும். ஆனால் வாடகை உற்பத்திப் பொருட்களிலிருந்து செலுத்தப்படுவதாயின் அறுவடை மோசமாயமையும் பட்சத்தில் அதனை நிலப் பிரபுவும், வாடகையாளனும் இருவருமே பகிர்ந்து கொள்கின்றனர். பணத்தில் இது கொடுபடுவதாயின் அறுவடை நல்லதோ, கெட்டதோ குறிப்பிட்ட பணத்தை விவசாயி செலுத்தியே தீர நேரிடும்.

இவ்விதம் நாம், கைத்தொழில்மய நாடுகளிலும், சோசலிஸமல்லாத அபிவிருத்தி குன்றிய நாடுகளிலும் உணவுற்பத்தி வளங்களின் கட்டுப்பாடு பரிமாற்றமடைவதைக் காண்கிறோம். தம் தேவைகளை சுயமாகவே வழங்கிக் கொள்ளும் கோடிக்கணக்கான விவசாயிகளின் சீவனோபாயமாக ஒரு காலத்தில் இருந்த விவசாயம் இன்று புதிய வகுப்பு ''விவசாயிகளுக்கு'' இலாபம் தேடும் ஒரு வர்த்தகமாக மாறியுள்ளது. பாரம்பரிய நிலச் சுவான்தார்களான உயர் வகுப்பினர், வட்டிக்குப் பணம் கொடுப்போர், இராணுவ அதிகாரிகள், நகரங்களில் உள்ள விலை பேசுவோர், வெளிநாட்டுக் கூட்டுத் தாபனங்கள், மற்றும் சில ஆபிரிக்க ஆதிவாசிகளின் தலைவர்கள் கூட இன்று விவசாய வர்த்தகர்களாக ஆகி வருகின்றனர்.

இந்தப் பரிமாற்றத்தின்போது உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து, பட்டினியாளன் துண்டிக்கப்படுகிறான். ஆகக் கூடினால் அவர்கள் தொழில் பாதுகாப்பற்ற, பயிர்ப் பருவ காலங்களுக்கு மாத்திரம் சம்பளத்துக்கான விவசாயத் தொழிலாளர்களாகின்றனர். உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து துண்டிக்கப்படுவது நுகர்தலிலிருந்து துண்டிக்கப்படுவதாகும்.

கூடுதல் உணவு இருக்கின்றது. ஆனால் மக்கள் இன்னும் பட்டினி கிடக்கின்றனர். உண்மையில் முன்னையை விடவும் கூடுதல் பட்டினி கிடக்கின்றனர். கூடிய உணவுற்பத்தி செய்யும் நடைமுறைகள் உண்மையில் மக்கள் உணவுற்பத்தி செய்வதற்கு அல்லது வாங்குவதற்கான ஆற்றலைக் குறைத்துள்ளன. அதிகரித்த உற்பத்தி எங்கே? அது மாயமாக மறைந்ததா? இல்லை.

* அவற்றுள் சில நகர்ப்புற மத்தியதர வகுப்பினரைச் சென்றடைகிறது. சரித்திர காலம் தொட்டே பாகிஸ்தானிய கிராம ஏழைகளின் பிரதான உணவான பாகிஸ்தான் சோள விளைச்சலை மேலும் விருத்தியுறச் செய்வதற்காக நியூஜேர்ஸியிலமைந்துள்ள தானிய உற்பத்திக் கூட்டுத் தாபனத்துடன் அமெரிக்க அரசாங்கமும் பாகிஸ்தான் அரசாங்கமும் கூட்டுச் சேர்ந்து ஒத்துழைத்தது. உயர் விளைச்சல் விதைகளும் ஏனைய உற்பத்திப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டதால் விளைச்சல் அதிகரித்தது. ஆனால் இப்பொழுது சிறு தொகை பெரிய ''விவசாயி''களால் விளைக்கப்பட்ட சோளம், நகர்ப்புர மத்திய, உயர்தர வகுப்பினர்க்கான குளிர்பானத்தை இனிமையூட்டுவதற்கான ஒரு உப பொருளாகப் பயன்பட ஆரம்பித்தது.

* அவற்றுள் சில வளர்ப்புப் பிராணிகளுக்கு உணவூட்டப் பயன்படுத்தப்பட்டது. அமெரிக்காவில் பசுமைப் புரட்சியின் பெருமைக்குரிய சாதனையான தானிய விளைச்சல் வளர்ப்புப் பிராணிகளின் வயிற்றில்போய் முடிவடைந்தது. 1973 ம் ஆண்டளவில் கொலம்பியாவில் பசுமைப் புரட்சி அரிசி உற்பத்தியின் மூன்றிலிரண்டு பங்கு மதுவடிசாலைகளுக்கும், பிராணி உணவு தயாரிக்கும் இடங்களுக்குமே சென்றது.

* அவற்றுள் சில ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அடிப்படையாகக் கொண்ட விவசாய உபாயத் திட்டமொன்றைச் செயல்படுத்தும் நாடுகள் மேற்படி பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுவதற்காக தமது விவசாய உற்பத்தியை ஏற்றுமதி நோக்கில் செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குள் தம்மைச் சிக்க வைத்துக் கொள்ளுகின்றன. 1960 ம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் தனது கிராமிய மக்கள் போஷாக்கின்மையால் துன்புற்றுக் கொண்டிருந்த வேளையி

லும் கூட மெக்ஸிகோ தனது பசுமைப் புரட்சியால் விளைந்த கோதுமையை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தது. தனது உற்பத்தியின் மூன்றிலொரு பங்குக்கும் அரைப் பங்குக்கு மிடைப்பட்ட இறைச்சியை மத்திய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

* அவற்றுள் ஒரு தொகை அழுகிக் குவிகின்றது. அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக மத்திய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் பழங்கள், மரக்கறிகள் போன்றவை சந்தை நிரம்பல் காரணமாக அல்லது அளவு, நிறம், மென்மை போன்றவற்றில் அமெரிக்கத் தரத்துக்குக் குறைவானவை எனக் கருதப்படுவதன் காரணமாக அமெரிக்கச் சந்தையுள் நுழைய முடியாதவாறு தடைப்படுகின்றன. ஆனால் கூடுதல் செலவில் உற்பத்தியான அப்பொருட்களை வாங்குவதற்கு, நிலமற்ற ஏழைகளான அந்நாட்டு மக்களிடம் பணமில்லை. இவ்வுற்பத்திகளில் 65 சதவீதமானவை வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன அல்லது அழுகிக் குவிகின்றன.

### ஒரு "அகில உயர் சந்தை"

சுய தேவைகளை தாமே பூர்த்தி செய்து கொள்ளும் விவசாயிகளின் கைகளிலிருந்து உணவுற்பத்தி பறிக்கப்பட்டு உலகம் பரந்த சந்தை அமைப்புக்குள் மேலும் மேலும் பிணைக்கப்பட்டதன் காரணமாக உள்ளூர் உணவு வளங்கள் உள்ளூர் மக்களைப் போசிப்பதில் மேலும் மேலும் குறைவாகவே பயன்படுகின்றன. தம்மை விடவும் பல மடங்கு கூடுதல் வருமானமுடைய அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்களுடன் மத்திய அமெரிக்காவின் அல்லது ஆபிரிக்காவின் மிகவும் வறியவனும் தனது உணவுக்காகப் போட்டியிட வேண்டிய ஒரு அகில உயர் சந்தை தோற்றமெடுப்பதை நாம் காண்கிறோம். எமது "ஒன்றிலொன்று தங்கியிருக்கும் உலகம்" எம்மை அதே உயர் சந்தைக்கு இட்டுச் செல்வதாயிருக்கலாம். ஆனால் பல நாடுகளிடம் பணமோ, நலனோம்பு உணவு ஒதுக்கீடுகளோ இல்லை.

உற்பத்தி அதிகரிப்பை சரியான பாதையில் திசை திருப்புவதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் எம்மை முன்னே இட்டுச் செல்வதற்குப் பதிலாக பின்னோக்கி இழுத்துச் செல்கின்றது. உணவுற்பத்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், அவற்றில் பங்கு கொள்ளவும் பெரும்பான்மை மக்களுக்கு வசதியளிக்கும் உண்மையான சமுதாய புனர் நிர்மாணப் பணியிலிருந்து விலகிச் செல்வதை விடவும் இது கூடுதலாகும். மிகச் சிறிய மாற்றத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கு முன்னெப்பொழுது மில்லாதவாறு தம்மை சிறப்பாக அமர்த்திக் கொண்ட உள்ளூர் மற்றும் சர்வதேச கொள்ளைலாபக்காரர்களைக்கொண்ட புதிய வகுப்பினை அது பலப்படுத்துகின்றது.

அதிக உணவு உற்பத்தி செய்தல் தவறான பரிகாரம் என்றால் சரியான தீர்வு தான் எது? இக் கேள்விக்கு நாம் பதிலளிப்பதற்கு முன் நாம், எந்தவொரு அபிவிருத்தி யடைந்துவரும் நாட்டிலும் அந்நாட்டு மக்களுக்கு உணவளிக்க இயலாத நிலைக்கு உணவு வளங்கள் பற்றுக்குறை நிலையில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மிக முக்கியமாக ஏனெனில், அபிவிருத்தி குன்றிய நாடுகள் உதவியற்ற பரிதாப நிலையில் எங்களது உதவிகள் தேவைப்பட்டிருப்பதாக சித்தரிக்கப்பட்டிருப்பதானாலாகும். பட்டினி கிடக்கும் மக்கள் தமக்கு உணவளித்துக் கொள்ள விடப்படுவார்களானால் அவர்களால் அதை தமக்களித்துக் கொள்ள முடியும் என்பதோடு அவர்கள் அதை அளித்துக்கொள்வர் என்ற எளிய உண்மையையும் நாம் காணத் தவறி விட்டோம்.

மக்கள் தமக்குணவளித்துக் கொள்ளவில்லை யென்றால் பல மிக்க தடைகள் அவர்களது பாதையில் தடையாக அமைந்துள்ளன என்பதை உறுதியாக நம்பலாம். எவ்வாறாயினும இத் தடைகள் — சனத்தொகை அதிகரிப்பு, குறுகிய நிலப்பரப்பு, சோம்பல், சமய தடைகள், சாதகமற்ற சூழ்நிலை, தொழில்நுட்பப் பற்றுக்குறை, சமனற்ற வர்த்தக மாற்று விகிதம், போன்ற — பட்டினிக் காரணிகளல்ல. உணவில் சுய தங்கியிருத்தலுக்கான மிக முக்கியமான அடிப்படைத் தடை, உணவுற்பத்தி நடவடிக்கைகளில் பெரும்பான்மையான மக்களின் கட்டுப்பாடு இல்லாமையும் இதன் காரணமாக அவர்கள் அந் நடவடிக்கைகளில் பங்கு பற்ற இயலாதிருப்பதுமேயாகும் என்பதை நாம் எமது ஆராய்ச்சிகளின் பின் கண்டு கொண்டோம். உற்பத்தி நடவடிக்கைகளையும், மக்கள் தமக்கு உணவளித்துக் கொள்ளுதலையும் மக்கள் தம் கட்டுப்பாட்டிற்குள் ஏற்படுவதைத் தவிர்க்கும் தடைகளை எவ்விதம் அகற்றலாம்? உணவுற்பத்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பினை மக்கள் கையேற்பதே நீண்டகால உற்பத்தியையும், உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான உத்தரவாதமாகும். பாரம்பரிய நிலச் சுவான்தார்களையும் விவசாய வர்த்தகர்களையும் கொண்ட நில ஏகபோகவாதிகளே விவசாய வளங்களை பயன்படுத்துவதில் மிகவும் திறமையற்றவர்களாகவும், நம்பிக்கை வைக்க முடியாதவர்களாகவும், வியயம் செய்வோராயும் தம்மை நிரூபித்துக் கொண்டுள்ளனர்.

### கட்டுப்பாட்டுக்காகப் போராடல்

பட்டினிப் பிரச்சினை, ஒரு உற்பத்திப் பிரச்சினையல்ல என்பதை ஏற்றுக்கொண்ட பலர் அது அதற்கு மாறாக ஒரு விநியோகப் பிரச்சினையே, அதாவது சொழுக்கத் தின்றவனுக்குப் பதிலாக பட்டினி கிடப்பவனுக்கு உணவு கிடைக்கச் செய்தல், என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். நாங்கள் கூறுவதோ வேறொன்றாகும்: விநியோகப் பிரச்சினை, உணவுற்பத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றலும் கட்டுப்பாடு கையாளலுமான மிக அடிப்படைப் பிரச்சினையின் ஒரு பிரதிபலிப்பு மாத்திரமே.

இந்த அடிப்படைகளை நாம் புரிந்து கொண்டால் நாம் பயப்பட வேண்டுமென பல முறை எமக்குக் கூறப்பட்ட "ஏழைப் பட்டினி மக்கள்" உண்மையில் எமது நண்பர்களே என்பதை நாம உணர ஆரம்பித்து விடுவோம். மனமறிந்தோ இல்லாமலோ நாம் அனைவருமே மனிதனின் மிக அடிப்படைத் தேவையான உணவினைக் கட்டுப்படுத்துவதற்கான பொதுப் போராட்டத்தில் ஒன்றிணைந்துள்ளோம். உற்பத்தி நடவடிக்கைகளில் யார் பங்குகொள்ள வேண்டும், யார் அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பிரச்சினையை நாம் சரியாகப் புரிந்து கொள்ளும் வரையில் "அதிக உணவு", உணவு உதவி, உணவு ஒதுக்கீடு போன்ற மீளப்பகிர்தல் திட்டங்கள் கூட மக்கள் கூடுதல் பட்டினியால் துன்புறுகின்றனர் என்பதையே உணர்த்தி நிற்கும்.

# உலர் பயிர்ச் செய்கைக்கு இந்தியாவின் புதிய உபாயம்

— ட்ரெவெர் ட்ரிபெர்க்

*முன்னாள் இலங்கைப் பத்திரிகை யாளரான ட்ரிவர் ட்ரிபெர்க் இந்தியாவின் பிரதான பத்திரிகைகளில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றியவர். அபிவிருத்தியின் பல்வேறுதுறைகள் பற்றிய அவரது கட்டுரைகள் ஆசியாவின் முன்னணிப் பத்திரிகைகள் பலவற்றில் பிரசுரமாகியுள்ளன. விவசாய தொழிநுட்பத்தைக் கிராமங்களுக்கு கொண்டு செல்வது பற்றியும், தனது உலர் நிலங்களை விருத்தி செய்வதற்கான இந்தியாவின் புதிய ''உணவு உபாயத்தினை'' யும் அவர் இங்கு ஆராய்கிறார்.*

நிலமும், நீரும் மோசமாக நிருவகிக்கப் படுவதே இந்திய விவசாயத்தின் முக்கிய பிரச்சினை. ''மண் அரிப்பும், உரிதலும், வரட்சியும், வெள்ளமும்'' இதன் அறிகுறிகள் என்பது விவசாயத்து மத்திய அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரான பி. பி. வொஹ்ராவின் கருத்தாகும். விவசாய நிபுணர்களும் இதனை ஏற்கின்றனர்.

இந்தியாவில் வரட்சியும், வெள்ளமும் சர்வசாதாரணமானவை. அவை 1960 களின் நடுவிலோ, 1970 களின் தொடக்கத்திலோ போல ''மாபெரும் நாசங்களை'' ஏற்படுத்துவதுமுண்டு என ஐ. நா. பொறிநுட்ப உதவிச் சபையின் முன்னாள் இயக்குநரான சுதீர் சென் கூறுகிறார். ''வயல்களுக்கு ஆகக் கூடுதலான நீரை வழங்குவதை உறுதிப்படுத்துவதே இந்தியாவிற் பெரும் பிரச்சினை. பருவகாற்று இந்திய விவசாயத்தைத் தனக்கு அடிமையாக்கியுள்ளது.''

வொஹ்ரா பின்வருவனவற்றின் அடிப்படையில் நிலத்தையும், நீரையும் நிருவகிப்பதற்கான ஒரு தேசிய கொள்கையை விதந்துரைக்கிறார்:

(1) இவ்வியற்கை மூலவளங்களின் தேசிய பயன்பாட்டுடன் தொடர்பான சகல பிரச்சினைகட்குமுரிய தீர்வுகளை தனித் தனியாகவன்றி முழுமையாகவே நோக்கவேண்டும்.

(2) நிலத்தினதும், நீரினதும் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் உப ஆற்றுச்சிறைப் பகுதியே ஏற்ற இயல்பான அலகாகும். இப் பகுதி தனது சொந்தத் தேவைக்கான நீர் முழுவதையும் தேக்கிக் கொள்ள வசதி வேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டே நிலமும், தரைக்கீழ் நீரும், மேற்பரப்பு நீரும் ஆகிய மூலவளங்களின் பயன்பாடும், வெள்ளத்தடுப்பும் பற்றிய ஆற்றுவடி நிலத் திட்டங்களைப் பயனுள்ள முறையில் உருவாக்கலாம்.

(3) நீரை இயன்றவளவில் சேமிக்க வேண்டும். ஆனால் மண்ணின் சேமத்துக்குரிய உறுதியான ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே இது அமைய வேண்டும். ''எனவே நீர்க்கொள்கை எதிலும் நீரால் நிகழக்கூடிய அரிப்பைத் தடுக்க வழிசெய்ய வேண்டும்.''

(4) தரைக்கீழ் தான் நீரைச் சிறப்புறச் சேமிக்கலாம். எனவே இயல்டான அல்லது செயற்கையான வழிகளால் தரைக்கீழ் நீர் வளங்களைப் பேணுவதற்கு முதன்மையளிக்க வேண்டும்.

(5) தரைக்கீழ் வளங்கள் இயல்பாகவே அரும் பயன்களைக் கொண்டுள்ளமையால் அவற்றில் உச்ச பயனை எய்த வேண்டும்.

(6) வீட்டுப் பாவனைக்கும், விவசாய, கைத்தொழிற் துறைகளுக்கும் நீரை மிகவும் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். யாதாம் ஒரு வழியிலேனும் நீர் நச்சுற விடாமல், மீள்சகட வோட்ட முறைகளையும், ஏனைய முறைகளையும் கையாண்டு பாதுகாக்க வேண்டும்.

பயிர்களுக்கான தேவையைப் பொறுத்த மட்டில் வழமையான மழைவீழ்ச்சி உள்ள ஒரு வருடத்திற் தானும் அதன் பரம்பல் சீரற்றதென்றும், பருவ மழையைத் தொடர்ந்துவரும் மாதங்களில் அநேகமான பண்ணை நிலங்களில் பயிர் வளர்ச்சிக்கு அவசியமான அளவு ஈரலிப்பு நிலைத்திருப்பதில்லையென்றும் சுதீர் சென் சுட்டிக்காட்டுகிறார்.

அவர் வடக்கில் ''இயற்கைக்கு ஒரு பெரும் நேரெதிர் நிலையான'' இமயத் தொடர்களை இதற்குக் காரணங் காட்டுகிறார். இமயம் கோடையிற் பருவ காற்றுக்களைச் சிறைப்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் ஈரலிப்பை இந்தியச் சமவெளிகளுக்கு வழங்குகிறது அல்லது அவ்வீரலிப்பை ஆறுகளுக்கு வழங்க ஆறுகள் அதனைச் சமவெளிகட்கு ஊட்டுகின்றன. குளிர்காலத்தில் மத்திய ஆசியாவினின்று தெற்கே வீசும் கடுங்குளிர் காற்றைத் திசை திருப்பிவிடும் தடுப்புச் சுவராகத் திகழ்கிறது. இதனால் சமவெளிகள் அநேகமாக உறைபனியேயற்ற உகப்பான பருவத்தை அனுபவிக்கின்றன. இப் பருவத்தில் பயிர் செய்யவும் வசதி உண்டாகிறது.

''போதியவளவு மழை வீழ்ச்சியாலும், உகப்பான காலநிலையாலும், அகன்றதொரு வெப்ப வீச்சினாலும்'' பலதரப்பட்ட தாவரங்களும், இடைவெப்ப, அயன, உப அயனப் பிரதேசங்கட்குரிய பல்வேறு பயிர்களும் விளைகின்றன. இவற்றுள்ளும் முக்கியமானது, ''வருட முழுதும் நீர் பெறக்கூடிய இடங்களில் வருட முழுதும் பயிர்ச் செய்கை நடைபெற முடிவதாகும்.''

''அமோகமான கொடையாக'' த் தான் பெற்ற நீர்வளங்களை இந்தியா இதுவரையிலும் அசிரத்தையாகவோ, மோசமாகவோ தான் நிருவகித்தது. ''இயற்கை ஒரு பருவத்தில் தாராளமாக வழங்கும்'' இத் ''திரவச் சொத்தை நன்கு பயனுறுத்தாது விடுகின்றமை விசனத்துக்குரியது.'' எனவே வெள்ளங்களைத் தொடர்ந்து நீர்த் தட்டுப்பாடுண்டாகிறது. எனவே நீர்ப் பஞ்சத்தால் நிலமும், உணவுப் பஞ்சத்தால் மக்களும் வாடுகின்றனர். மூன்று மாதங்களில் நாம் பெறுவதை எம்மால் இயன்ற அளவு சிறப்பாகப் பன்னிரண்டு மாதங்களுக்கும் பயன்படுத்த வேண்டும்.'' என்கிறார் சென்.

1959 இல் தான் தயாரித்த ''நெருக்கடி அறிக்கை'' யிலும் ஃபோர்ட் நிறுவன நிபுணர் குழு இதே முடிவுக்குத்தான் வந்தது: ''உலகில் ஆகக் கூடுதலான நீரைப் பெறும் நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. ஆனால் அதன் உள்ளார்ந்த வளத்தில் மிகச் சிறிய ஒரு பங்கே விருத்தி செய்யப்பட்டுள்ளது.''

இந்தியாவில் வருடச் சராசரி மழை வீழ்ச்சி சுமார் 42 அங்குலங்களாகும். எனினும் ஒரு நல்ல வருடத்தில் 50 அங்குலங்களினின்று மோசமானதில் 31 வரை குறிப்பிடத்தக்க தளம்பல்களுண்டு. தெளிவாக வரையறுத்த மூன்று வலயங்கள் உள. வட கிழக்கில் அஸ்ஸாமையும், மேலைத் தொடர்களின் அடிப்புறத்தே ஒடுங்கிய கரையோரச் சமவெளிகளையுங் கொண்ட கனத்த மழை வீழ்ச்சிப் பகுதி; கிழக்கு அரசுகளையும், வட சமவெளியின் பெரும் பகுதியையும், கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே காணும் கிழக்குக் கரைச் சமவெளியையுங் கொண்ட நடுத்தர மழை வீழ்ச்சிப் பகுதி; பஞ்சாப் சமவெளிகளினின்று விந்தியத் தொடர்களுக்கு ஊடாக மைசூர் மேட்டு நிலத்தையும் உள்ளடக்கும் தக்கணத்தின் மேற்குப் பகுதி வரையிலான குறைந்த மழை வீழ்ச்சிப் பகுதி.

இந்தியாவில் நீரின் நிருவாகம் மூன்று வகையான பணிகளைக் கொண்டது: பருவ மழையை நீள் வரட்சிப் பருவத்திலும் பயனுறுத்தல்; மிகையான மழை வீழ்ச்சியை ஈர வலயங்களினின்று வரண்ட அல்லது பற்றாக்குறை வலயங்களுக்குப் பயன்படச் செய்தல்; அநேகமான பகுதிகளில் ஈரலிப்புத் தொடர்பாகப் பருவங்கட்கிடையில் நிலவும் தளம்பல்களைச் சீர்படுத்தல்.

சமீப வருடங்களில் குறிப்பாக 1960 களின் நடுவிலேற்பட்ட கடும் வரட்சிகளைத் தொடர்ந்து தரைக்கீழ் நீர் வளங்களின் விருத்தியில் பேரூக்கம் செலுத்தப்படுகிறது. ஆழமான குழாய்க் கிணறுகளால் 220 இலட்சம் ஹெக்டயர்களில் நீர்ப் பாய்ச்சலாம் என நீர்ப்பாய்ச்சற் துறையமைச்சு எதிர்பார்க்கிறது. ஆழமற்ற குழாய்க் கிணறுகளின் தொகை 1968 - 69 இல் 245,000 ஆகவிருந்து 1973 - 74 இல் 780,000 ஆக உயர்ந்தது. அதே காலத்தில் வலுவியக்கக் குழாய்கள் 161 இலட்சத்தினின்று 419 இலட்சமாகக் கூடின.

கிணறுகளும், நீர்த் தேக்கங்களும், குளங்களும் ஏனைய நீர்ப்பாசன முறைகளும் இந்திய விவசாயத்தில் வழமையாகவே ஒரு முக்கிய பாங்கினை வகித்து வந்துள்ளன. இத்தகையவற்றின் உள்ளார்ந்த வளம் 570 இலட்சம் ஹெக்டயர்களாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது 218 இலட்சம் பயன்படுத்தப்படுகிறது. இது 1950-51 ஐவிட இருமடங்குக்கும் மேலான அதிகரிப்பாகும். கிணறுகள் 70 இலட்சத்துக்கு மேற்பட்டவை. இவற்றில் சுமார் 10 இலட்சம் வலுவாலியங்குவன.

1971-72 இல் தேறிய விதை நிலமான 13936 இலட்சம் ஹெக்டயர்களில் தேறிய நீர்ப்பாய்ச்சல் நிலம் 3159 இலட்சம் ஹெக்டயர்கள் மட்டுமே. சுமார் 464 இலட்சம் ஹெக்டயர்கள் வருடத்தில் 30 அங்குலங்களுக்கும் குறைந்த சராசரி மழை வீழ்ச்சியையே பெறுகின்றன. இப்பரப்பில் சுமார் ஐந்தில் ஒன்றே நீர்ப்பாய்ச்சப்படுவது. தற்போது கிடைக்கும் பருவ மழையையும், நிலவும் உப மேற்பரப்பு ஈரப்பதனையும் கொண்டே இப்பரப்பை நீட்ட இடமுண்டு. மேலும் தரைக்கீழ் நீர்ச் சேமங்களைப் பெருக்கும் வழிவகைகளையும் ஆராய வேண்டும்.

அடுத்து, ஈரப்பதனிலிருந்து பூரண பயனைப் பெறத் தற்போதைய விவசாய நிலைமைகளுக்கு இயைந்தவாறு பண்ணை முறைகளை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும். தற்போது இப் பகுதிகளில் நெல், கோதுமை போன்ற வழமையான

பயிர்கட்கு ஈரலிப்புப் போதவில்லை. அதிக விளைச்சலைத் தரும் குறுங்காலப் பயிர்களின் அறிமுகம் இப்பிரச்சினைக்குத் தீர்வாகலாம்.

சென் மேலும் கூறுகிறார்: தற்போது மழைபெறு பகுதிகள் பலவற்றில் வளரும் கோடை காலப் பயிர் அதன் உள்ளார்ந்த வளத்தில் ஓர் அற்ப பங்கேயாகும். மேற்பரப்பிலும் தரைக்கீழும் வளங்களினின்று நீரை நுணுக்கமாகப் பயனுறுத்துவதாலும், விஞ்ஞான ரீதியிலான விவசாயவியலாலும் அவற்றின் சிக்கனத் தன்மையைக் கூட்டலாம். இப் பகுதிகளுட் பலவற்றில் அதிக விளைச்சலைத் தரும் இரண்டு அல்லது மூன்று போகங்களைக் கூடச் செய்யலாம்.

மாதத்துக்கு 10 இலட்சம் என்ற விகிதாசாரத்தில் வேறு எநத ஒரு குறைவிருத்தி நாட்டைப் பார்க்கிலும் சிறப்பமை அற்ற குடும்பத்திட்ட இயக்கம் இந்தியாவிலேயே காணப்படுவதாக உலக வங்கி புகழ்வது ஒருபுறமிருக்க, வளரும் குடித்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தானியங்களை மென்மேலும் பயிரிட்டுப் பெருக்கத் தீவிர நடவடிக்கைகளை எடுப்பது அவ்சியம். சுருங்கக் கூறின், இந்தியா ஆண்டுதோறும் அவுஸ்திரேலியாவின் குடித்தொகைக்குச் சமமான மக்களைப் பெறுகிறது. அதிகரிக்கும் இம் மக்களுக்கு ஊட்டும் பொருட்டு பருவகாற்றின் மோசமான தாக்கங்களை முறியடிக்கக்கூடிய நவீன பண்ணைப் பொறிநுட்பங்களைப் விருத்தி செய்ய வேண்டும்.

இதுவரையில் ''பசுமைப் புரட்சி'' யில் செய்யப்பட்டதுபோல நீர்ப்பாசன வசதிகளை விருத்தி செய்வதைக் காட்டிலும், நாட்டின் பயிர்நிலத்தில் எழுபத்தைந்து வீதத்தைக் கொண்ட உலர் நிலங்களில் குறைந்த விளைச்சல் பெறப்படும் நிலையை மாற்றி விளைச்சலை அதிகரிப்பதாலேயே உற்பத்திப் பெருக்க மேற்பட முடியும் என்று உணரப்பட்டுள்ள உண்மையின் அடிப்படையிலேயே அரசின் உணவுத்துறை உபாயம் அமைந்துள்ளது.

ஈரலிப்பை ஆகக் கூடுதலான மட்டத்தில் வைத்துப் பேணப் பயில்வதாலும், அமோக விளைச்சல்ரக விதைகளைத் தூவுவதாலும், பருவத்துக்கமையப் பயிர்ச் செய்கை முறையை மாற்றியமைப்பதாலும், திருந்திய பயிர்ச் செய்கை முறைகளாலும் உலர் நில விவசாயிகள் தேசீயத் தானியக் களஞ்சியத்தில் தமது பங்களிப்பை தற்போதைய 42 சதவீதத்தைப் பார்க்கிலும் பன்மடங்கு கூட்டலாம் என விவசாய ஆய்வியலாளர் நம்புகின்றனர்.

உணவூட்ட வேண்டிய மக்களின் தொகை 1921 இல் 2500 இலட்சத்திலிருந்து தற்போது 6050 இலட்சத்துக்கும் மேற்பட்டு விட்டது என்ற வுண்மை இந்தியாவின் விவசாய உபாயத்தில் குடித்தொகை வகிக்கும் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகிறது. பயிரிடக்கூடிய நிலமனைத்தும் பெரும்பாலும் உழவுக்கு உட்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் மோசமான அளவுக்கு நிலத் தட்டுப்பாட்டை இது ஏற்படுத்தியுள்ளது. எனவே தற்போதுள்ள பண்ணை நிலத்தில் நவீன பொறிநுட்பங்களைக் கூடுதலாக உபயோகித்துச் செறிவான செய்கையாலேயே உற்பத்தியைப் பெருக்கலாம்.

கடந்த காலத்தில், நிலத் தட்டுப்பாடு அதிகமாகக் காணப்படாத சூழலில் விவசாயிகள் தமது சொந்த சீவியத்துக்கே உற்பத்தி செய்தனர். நகர்சார் நுகர்வுப் பொருட்களின் கொள்வனவுக்கு வேண்டிய பணத்துக்காகக் கரும்பு, பருத்தி, நிலக்கடலை போன்ற ஒரு சில பணப் பயிர்களையும் உண்டாக்கினர். தவிர்க்க முடியாது வரக்கூடிய மோசமான வருடங்களை எதிர்கொள்ளுமுகமாக ஓரிரு ஆண்டுகட்குப் போதுமான அளவு தானியத்தையும், விலங்குகட்கான உணவையும் சேகரித்து வைத்தனர். தானியமாகவோ, விலங்குணவாகவோ பயன்படுத்தும் பொருட்டு அவரை இனங்களைப் பயிரிடுவதால் மண்ணின் வளத்தைப் பாதுகாத்தனர்.

தொடர்ந்து அதிகரித்துவரும் நிலத் தட்டுப்பாடு காரணமாக புதிய பரப்புக்களை, குறிப்பாக எல்லைப் பயன்பாட்டு நிலங்களைச் செய்கைக்குட்படுத்த நேர்ந்தது இது தற்காலிகமான ஒரு நிவாரணத்தை வழங்கினாலும் இது காடுகட்கும் பயிர் நிலங்கட்கும் ஏற்றத்தாழ்வை விளைத்தது. சனத்தொகைப் பெருக்கத்தினால் அவரையினச் செய்கை புறக்கணிக்கப்பட்டு தானியவினங்களில் கூடிய கவனஞ் செலுத்தப் பட்டமையால், மண்ணில் நைதரசன் போன்ற ஊட்ட வலுக்கள் அருகலாயின. விவசாயிகளின் காளைகள் பெற்ற ஊட்டச்சத்தின் குறைபாட்டையும் இது உணர்த்தியது.

இதுவரையிலும் அநேகமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த உலர் நிலங்களின் விளை திறனைப் பெருக்காத வரையில் உணவு, விலங்குகட்குணவு, நார் முதலியவற்றில் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்ய வியலாது என்ற உண்மை விவசாயவுபாயம் பற்றிய மீளாய்வின் மூலம் உணரப்பட்டது. இத்தகைய நிலங்கட்குக் கூடுதலாக நீர்ப்பாய்ச்சுவதே இது தொடர்பாக வகுக்கப்பட்ட ஆரம்ப நடவடிக்கையாகும். அரை வரட்சிப் பகுதிகளில் கிடைக்கும் தரைக்கீழ் நீரின் அளவு மட்டுப்பட்டது என்ற காரணம் மட்டுமன்றி, மற்றும் பல தடைகளும் காணப்பட்டன.

இத்தகைய நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சும் போது அவற்றைச் சூழவுள்ள உலர் நிலப் பரப்புக்களுக்கு முற்றிலும் பொருத்தமற்ற அளவுக்கு பண்ணை நடவடிக்கைகளும் மாறுகின்றன. உதாரணமாக ஓர் அரை வரட்சிப் பிரதேசத்தில் தரைக்கீழ் நீர் மூல வளங்களை விருத்தி செய்யும் போது அங்குள்ள விவசாயி தனக்கு அதிக லாபந் தரக்கூடிய வர்த்தகப் பயிர்களைச் செய்கை பண்ணவே நாடுவான். இதனால் பிரதேசத்தின் உணவுற்பத்தியில் முன்னேற்றமோ, நிலைபேறோ ஏற்படமாட்டாது.

குறைவான விளைதிறனை விடவும், வருடத்துக்கு வருடம் உற்பத்தியில் பெருந் தளம்பல்கள் ஏற்படுகின்றமையே உலர் நிலப் பயிர்ச் செய்கையில் பாதகமான பண்புகளுள் ஒன்றாகும். கடந்த காலத்தில் விவசாய நிபுணர்கள் வரட்சி நிலவும் வருடத்தில் பயிர் நாசங்களை முறியடிப்பதற்கே கூடுதலான கவனஞ் செலுத்தினர். இந் நெருக்கடி நிருவாக நோக்கு புதிய பொறிநுட்பங்களின் கண்டுபிடிப்பைப் பின்னணிக்குத் தள்ளிவிட்டது.

விளைச்சலைத் திருத்த முதல் நடவடிக்கையாக அமைய வேண்டுவது குறுங்காலத்தில் அமோக விளைச்சல் தரும் (HYV) இனங்களின் உபயோகமே என உலர் நிலத் திட்ட ஆய்வாளர் விவசாய ஆய்வுக்கான இந்திய மன்றத்து (ICAR)க்கு விதந்துரைத்துள்ளனர். கோதுமை நீங்கலாக ஏனைய HYV க்கள் யாவும் நல்ல நிருவாக முறைகளின் கீழ் சிறந்த பயனையளிக்கின்றன.

அமோக விளைச்சல் ரகங்களில் உச்ச பயனைப் பெற பெருந்தொகையான வளமாக்கிகளை இட வேண்டும் என்ற பிரசித்தமான நம்பிக்கையும் தவறென நிறுவப்பட்டுள்ளது.

வழமையான முறைகளால் மழையையடுத்து நிலத்தைத் திருத்தும்போது மண்ணிலுள்ள ஈரலிப்பு பெருமளவுக்கு இழக்கப்பட்டு விடுவதாக அறியப்பட்டுள்ளது.

எனவே ஆய்வாளர் அறுவடையைத் தொடர்ந்தே உழத் தொடங்குமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். அப்போது ஈரலிப்பு நிலைகள் சாதகமாகவும் இருக்கும்.

உலர் நிலப் பயிர்கட்குப் பசளையிடுவதால் முக்கியமான ஒரு மறைமுகத் தாக்கமுண்டு. இத்தகு பயிர்கள் ஆழவேரிடுவன. அவற்றால் உபமண்ணில் ஈரலிப்பை உறிஞ்சவியலும். பசளையிட்ட பயிர் அவ்வாறு இடாதவற்றை விட 100 முதல் 150 சதவீதம் விளைச்சலை ஈட்டுகிறது. அதற்கு 20 முதல் 25 சதவீத அளவு மட்டுமே கூடுதலான ஈரலிப்புத் தேவை. பசளைகள் நீரைச் சிறப்புறப் பயன்படுத்த தூண்டுகின்றன. போதியளவு நீர் பசளைகளின் சிறந்த பயன்பாட்டை உறுதிப்படுத்துகிறது. தினை, கடலை, நிலக் கடலை, ஆமணக்கு போன்றறிலிருந்து கலந்து பயிரிடத் தெரிவு செய்யும் பயிரினங்கள் வழமையான நியமங்களை விட இறுக்கமான ஒழுங்குகளை உடையன என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

மத்திய இந்தியாவில் பருத்தி விளையும் கருமண் பகுதியிலும், தக்கண மேட்டு நிலத்திலும் சூரியகாந்தியைப் பயிரிடுமாறு திட்டம் விதப்புரைக்கிறது. வழமையான மற்றுமொரு பயிரான நெல் நீரை மிகவும் சிறப்பினமாகப் பயன்படுத்துவதால் பெரு நிலப் பரப்பில் விளைவிக்கப்படும் தினை முதலிய பயிர்கட்கு இயன்றவளவு ஈரலிப்பையே மாற்று நீர்ப்பாய்ச்சலாக உபயோகிக்குமாறு திட்டம் விதப்புரைக்கிறது.

அது நிலக்கடலைக்குப் பதில் சூரியகாந்தியைப் பயிரிடுமாறு வேண்டுகிறது. ஏனெனில் பருவமழை பிந்துமிடத்து நிலக்கடலைச் செய்கை அபாயகரமானது. ''சுருங்கக் கூறின், உணவுப் பழக்கங்களும், விநியோகத்திலும், சந்தைப் படுத்தலிலும் உள்ள குறைகளும், திறமையற்ற போக்குவரத்து முறைகளும் ஒரு குறித்த பிரதேசத்துக்கு மிகவும் பொருத்தமான பயிர்களை வளர்ப்பதற்குத் தடையாக உள்ளன'' என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

''பருவமழை பிந்துமிடத்து அத்தகைய தாமதம் இரண்டு மூன்று வாரங்களுக்கு மேற்படாதவிடத்து அதே பயிர்களில் விரைந்து வளரும் ரகங்களைப் பயிரிடுவதே ஏற்றஉபாயமாகும். தாமதம் அதிகமாயின் பயிர்களையே மாற்ற வேண்டும்.

ஆமணக்கு; கடலை, நிலக்கடலை என்பன ஈரலிப்புக் குறைபாட்டால் வாடுமிடத்து மழையின் தொடக்கத்துடன் லேசான யூரியாகலவையைத் தெளித்தால் விரைந்து துளிர்க்கலாகுமெனக் காணப்பட்டுள்ளது. பயிர்களை முற்றாக அழித்துவிடக்கூடிய அளவுக்கு வரட்சி கடுமையாயின், மீண்டும் அவற்றைப் புதிதாக விதைக்கவும் அவகாசமுண்டு.

அநேகமான உலர்நிலப் பயிர்கள், குறிப்பாகத் தானியங்கள் நைதரசன் வளமாக்கிகளால் கூடுதலான பயனை யளிப்பதை அவர்கள் கண்டுள்ளனர்.

விவசாயப் பொறிநுட்பத்தைக் கைமாற்றும் செயற்பாட்டு ஆய்வுத் திட்டங்கள் (ORP) எனும் புதிய கொள்கையின் அறிமுகத்துடன் கடந்த ஏப்ரலில் இந்தியாவிலே உலர்பண்ணை ஆய்வில் ஒரு புதுத் திருப்பமுண்டானது, மேலும் நான்கு வருடங்களுக்குப் புதுப்பித்த கனேடிய உதவியுடன் (ORP) திட்டத்தால் உலர்நிலப் பொறிநுட்பத்தை விவசாயிகளின் வயல்களுக்கு விரைந்து கைமாற்றுவதற்குரிய வழிகளை வகுக்கலாமென ஆய்வாளர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.






## 20ம் நூற்றாண்டில் நவீன ஆடை அலங்காரம்

வெளிநாட்டு உடைகளை அனுசரித்து உடையணிதல் பெரும்பாலும் ஆளும் வர்க்கமட்டத்திலுள்ளோரால் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்றாதலின் இம்முறையைப் பின்பற்றச் செய்வதிலான செல்வாக்கு கூடுதலாயிருந்தது. கலாச்சார குடியாதிக்கத்தின் நீண்டகால நடைமுறை காரணமாக, 19ம் நூற்றாண்டில் வெளிநாட்டு அலங்கார முறைகளாக அறிமுகப்படுத்தப்பட்ட, உடைகளை இன்று எமது பொருந்தொகை மக்கள் பிரிவினர் ''எமது பாரம்பரிய கலாச்சாரம்'' எனக் கூறுவாதிடுமளவுக்கு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். 19ம் நூற்றாண்டில் புகுத்தப்பட்ட, உடை பற்றிய கோட்பாடுகள் புராதன இலங்கையர் காலத்திய கோட்பாடுகளுடன் தொடர்புடையதாயிருக்கவில்லை. உடைகள் பற்றிய விக்டோரியன் கோட்பாட்டுத்தரத்தில், புராதன இலங்கைப் பெண், ஆடை பற்றி இவ்வளவு சுய உணர்வற்றவளாக, அதுவும் நாகரிகக்குறைவாகவே உடுத்தியுள்ளாள் எனக் கருதப்பட்டது. இப் பக்கங்களில் உள்ள படங்கள் கடந்த பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வரும் மாற்றங்களைத் தெளிவுபடுத்துகின்றன.



# பொருளியல் நோக்கு



விலை 2/-

பொருளியல் நோக்கில் இடம் பெற்றுள்ளவற்றை பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

தெஹிவளை, துட்டுகமுனு தெரு, 137 இல் உள்ள, திஸர அச்சகத்தில் அச்சிடப்பட்டது.